விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
(C-2895)
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 31 வியாழக்கிழமை (14.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 177

# இந்து பிரதி அமைச்சராக மஸ்தான்; நல்லூரில் மக்கள் திரண்டு எதிர்ப்பு



**(யாழ்ப்பாணம்) இந்து மக்களை கொச்சைப்படுத்தும் வகையில் இந்து சமய அலுவல்கள் பிரதி அமைச்சராக இஸ்லாமியரான காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், இந்து சமய அலுவல்கள் பிரதி அமைச்சராக நேற்று முன்தினம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அகில இலங்கை சைவ மகாசபையின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 24☛

## யாழில் 63 பேருக்கு போலி அரச நியமனம்

### 3 - 4 இலட்சம் பெற்று கைவரிசை

(கரணவாய்)

யாழ்ப்பாணத்தில் தேசிய பாடசாலைகளில் 63 பேருக்கு கொடுக்கப்பட்ட அரச நியமனங்கள் போலியானவை எனத் தெரியவந்துள்ளது.

நேற்று புதன்கிழமை வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மற்றும் தேவரையாளி இந்து கல்லூரியில் அமைக்கப்பட்ட கட்டட திறப்பு விழா இரண்டிலும் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச் 24☛

## இந்து கலாசார அமைச்சராக மஸ்தான் நியமிக்கப்பட்டது சரி!

### ராஜித சேனாரத்ன விளக்கம்



(கொழும்பு)

முஸ்லிம் கலாசார அமைச்சராக சிங்களவர் ஒருவர் இருக்க முடியும் என்றால் ஏன் முஸ்லிம் ஒருவர் இன்னுமொரு கலாசார அமைச்சின் அமைச்சராக முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித 24☛

## மாற்றுவலுவுடையவர் விபத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியோரமாக சென்ற போது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளான மாற்றுவலுவுடைய நபர் ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இளவாலை பெரியவிளானை சேர்ந்த தர்மலிங்கம் மனோகரன் (வயது 53) என்ற நபரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 7 24☛

## இந்துக்களின் கடும் எதிர்ப்பால் அமைச்சை துறக்கிறார் மஸ்தான்



(கொழும்பு)

இந்து கலாசார பிரதி அமைச்சை தவிர்த்து மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சராக மீளவும் பதவிப் பிரமாணம் செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்று வியாழக்கிழமை சந்திக்கவுள்ளதாக பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

இந்து கலாசார அமைச்சை இந்து மதம் சாராத ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளமைக்கு இந்துக்கள் சார்பில் கடும் எதிர்ப்புக்கள் எழுந்த நிலையிலேயே இந்த முடிவுக்கு வந்ததாக காதர் மஸ்தான் குறிப்பிட்டார்.

இந்து கலாசார பிரதி 24☛

## மகிந்தவிடம் அமெ. தூதுவர் அரசியல் பேசவில்லையாம்!

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் அண்மையில் நடந்த சந்திப்பின் போது, அரசியல் விடயங்கள் தொடர்பாக எதுவும் பேசப்படவில்லை என்று, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில், கோத்தாபய ராஜபக்ஷவை கூட்டு எதிரணியின் வேட்பாளராக நிறுத்தக் கூடாது என்று மகிந்த ராஜபக்ஷவிடம், அமெரிக்கத் தூதுவர் கூறியதாக வெளியான தகவல்கள் குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மரியாதை நிமித்த 24☛

## மாகாண சபை தேர்தல் டிசம்பரில்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். (மு)

## இளைஞர்கள் துரத்தியதால் தலைதெறிக்க ஓடியது வாள்வெட்டுக் கும்பல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் வாள்களுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரை இளைஞர்கள் சிலர் துரத்திச் சென்ற போதும் அவர்கள் தப்பித்தனர். அந்த மூவரும் கொக்குவில் வராகி அம்மன் கோவிலடியில் பொலிஸாரைக் கண்டதும் வாள்களைப் போட்டுவிட்டு தப்பித்துள்ளனர் என அறிய முடிகிறது.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது.

மானிப்பாய் பிரதான வீதியில் ஒரு மோட்டார் சைக்கிளில் 24☛

## சகோதரர்கள் இருவரின் சடலங்கள் புங்குடுதீவில் கரை ஒதுங்கின!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தீவகம் புங்குடுதீவு கடற்கரைப் பகுதியில் இருவேறு இடங்களில் கரையொதுங்கிய ஆண்கள் இருவரின் சடலங்கள் சகோதரர்களுடையன என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலையில் தலைமன்னார் கடற்கரையில் இருந்து கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரின் சடலமே இவ்வாறு கரை ஒதுங்கின என்று அவர்களது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

தோமஸ் கிறிஸ்டியீன் பூஞ்சன் (வயது -38), தோமஸ் ஆரோக்கிய எமில்டன் (வயது -32) 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பவானியம்மா குழந்தைவேலு

(ஓய்வுபெற்ற உப அதிபர்/ யா/மட்டுவில் சந்திரமௌலீசா வித்தியாசாலை)



யா/மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி பவானியம்மா குழந்தைவேலு 13.06.2018 புதன்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர்-செல்லம்மா தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசக்கோன்-தெய்வநாயகி தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற குழந்தைவேலுவின் (ஓய்வுபெற்ற அதிபர்,யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்)அன்பு மணைவியும்,கௌரியம்மா (ஓய்வுநிலை ஆசிரியர், கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்), வீரசிங்கம் (ஓய்வுநிலை அரச கணக்குகள் பணிப்பாளர் திறைசேரி), சோமநாதர் (ஓய்வுநிலை அலுவலர், கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம்)ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாஸ்கரன்(அதிபர்,யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க பாடசாலை), வாகீசன் (அதிபர்,யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), ஞானேந்திரி, தேவரஞ்சன்(பிரான்ஸ்), நந்தபூபன்(அளவு மதிப்பீட்டாளர், அவுஸ்திரேலியா), யோகேந்திரி (ஆசிரியர்,யா/சன்மார்க்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், கயிலாயபதி (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், வடமாகாண காணி நிர்வாக திணைக்களம்), கமலராணி, சாந்தினி (அதிபர்/யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்),கௌசல்யாதேவி (பிரான்ஸ்), நிரஞ்ஜனி (அவுஸ்திரேலியா), சுகுந்தன் (ஆசிரியர், யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், குருபரன் (IT consultant at Info tech), நிசாந் (பொறியியல் பீட மாணவன், மொறட்டுவைப்பல்கலைக்கழகம்), டிவாகர் (MSc மனிற்றோவா பல்கலைக்கழகம், கனடா), டிலக்ஸன் (கணக்கிடலும் தகவல் முறைமையும், மாணவன்-சப்ரகமுவா பல்கலைக்கழகம்), சுதாகர் (பொறியியல் பீட மாணவன் மொறட்டுவைப் பல்கலைக்கழகம்),யாழினி (மருத்துவ பீட முதலாம்வருட மாணவி, யாழ்ப்பாண பல்கலைக் கழகம்), ஜெயப்பிரியன் (பிரான்ஸ்), சான்ரமுதன் (பிரான்ஸ்), சாயித்தியா (optometry, undergraduate of university of new south Wales,Sydney Australia), ஹரிகரன் (அவுஸ்திரேலியா), ஆத்மிகா (அவுஸ்திரேலியா), கேசிகன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), லக்சனா, லதுசனா, லிதுசியானா (மூவரும் யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2018) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இல.09, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணத்தில் (பெருமாள் கோவில் வீதி) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 02.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

இல.09, ஸ்ரீவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(4518)

## திருமதி கந்தையா நாகம்மா

பிறப்பு 13 - 01 - 1920

மறைவு 13 - 06 - 2018



கோப்பாய் தெற்கு, கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகம்மா அவர்கள் நேற்று (13.06.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு தங்கம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான முத்தையா (ஆசிரியர்), நவரத்தினம் (இலங்கை மின்சார சபை), இராசம்மா மற்றும் திருஞானபூங்கோதை (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் (தபாலதிபர்), தங்கராஜா (பொறியியலாளர்), செல்வநாயகம், இராசமலர் மற்றும் தங்கமலர், கனகலிங்கம், கலாநிதி மனோகரன், தவமணி (கணக்காளர்), சுரேஷ் பிறேமச்சந்திரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), கலாநிதி சர்வேஸ்வரன் (கல்வி அமைச்சர்-வடமாகாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், பாக்கியம், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் சற்குணமலர், வசுமதி, கமலநாதன், சிவராசா, கோகிலகுமாரி, சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரமோகன், சாந்தினி, முகுந்தினி, தியாகமலர், தியாகரூபன், தியாகவேணி, தியாகசொரூபன், தியாகவதனி, சுதர்சன், முருகன், ஆனந்தக்குமரன், ஆரணி, தாரகா, மேனகா, சொரூபிகா, காண்டீபன், பிரியங்கா, அபர்ணா, விக்னேஸ்வர், நிஷா, சித்தப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15/06/2018) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கட்டப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: க.சுரேஷ் பிறேமச்சந்திரன்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
**கலாநிதி க.சர்வேஸ்வரன்**
(கல்வி அமைச்சர்-வட மாகாணம்)
**0212230363, 0777362481, 0777184410**

(கு-2918)

## பிற்போடப்பட்டுள்ளது

யா/கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலையின் முற்றத்தில் 11.06.2018 நடைபெறவிருந்த ஏல விற்பனை 20.06.2018 நண்பகல் 12 மணிக்கு என பிற்போடப்பட்டுள்ளது.

-அதிபர்

(4516)

## விற்பனைக்கு

சுன்னாகம் AGA Office வீதியில் ஒரு பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**0761619517**

(4444)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### கார்த்திகேசு குமாரபரன்

B.A, PGDE, Maths (Sp.Trd), M.A (Public Administration (Hons), M.Ed (Hons)

08.06.2018 அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 33வது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணிப் (MEd) பட்டத்தை பெற்றமையையிட்டு வாழ்த்துகின்றோம்.

இவர் வாழ்வில் மேன்மேலும் உயர்பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்**

(4520)

## சுரேஷின் தாய் காலமானார்

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் ஆகியோரின் தாயார் திருமதி கந்தையா நாகம்மா நேற்று புதன்கிழமை தனது 98ஆவது வயதில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (மு)

## Golden Eagle.K.T.(Pvt) Ltd

### பதவி வெற்றிடங்கள்

1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்-ஆண் (வயதெல்லை 19-55) (நல்ல கண்பார்வையும் தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்)
2. முகாமைத்துவ உதவியாளர்-பெண் (வயதெல்லை 19-30) (யாழ் நகரிலிருந்து 8km சுற்றாடலில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
3. சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்-பெண் (வயதெல்லை 25-40) (முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் மோட்டார் சைக்கிள் வைத்திருக்க வேண்டும்)

நேர்முகத்தேர்வு:-16.06.2018 மற்றும் 18.06.2018

ஆவணங்கள்:-கிராம அதிகாரியின் நற்சான்று, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், க.பொ.த (சாத), தே.அ.அ.

**758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

(கு-2915)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி நேசமலர் இரவீந்திரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**கந்தையா இராசையா**



அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலயம்**

(4519)

## கண்ணீர் அஞ்சலி



யா/இடைக்காடு மகா வித்தியாலய அதிபர் திரு.கு.வாகீசன் அவர்களின் அன்புத் தாயாரும் யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் அவர்களின் அன்பு மாமியாருமாகிய

**திருமதி பவானியம்மா குழந்தைவேலு**

அவர்களின் பிரிவால் துயருறும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**அதிபர்கள் சங்கமும், கோட்டக் கல்விப் பணிப்பாளரும், கோப்பாய்க் கல்விக் கோட்டம்**


(4517)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

# ஞானசார தேரருக்கு எதிரான தண்டனை இன்று அறிவிப்பு

(கொழும்பு)

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலியகொடவின் மனைவி சந்தியா எக்னெலியகொடவை ஹோமாகம நீதவான் நீதிமன்றில் வைத்து அச்சுறுத்தியமை தொடர்பில் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் குற்றவாளி என கடந்த 24 ஆம் திகதி ஹோமாகம நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.



இந்நிலையில்ஹோமாகமநீதவான் உதேஷ் ரணதுங்க அவருக்கு எதிரான தண்டனையை இன்று வியாழக்கிழமை அறிவித்துள்ளார். (இ-7)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (Ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# காணாமல் போனோர் குறித்த அலுவலகத்திற்கு எதிராக திருகோணமலையிலும் நேற்று கவனயீர்ப்பு








(திருமலை)

காணாமல் போனோர் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துவரும் அலுவலகத்தின் சந்திப்பு திருகோணமலை மாவட்டத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிலையில் கடந்த காலங்களில் வழுங்கப்பட்ட வாக்குமூலங்களுக்கு இன்னும் சிறந்த தீர்வு கிடைக்காதபட்சத்தில் இந்த வாக்குமூலம் போலியானது எனவும் இதனை தாங்கள் எதிர்ப்பதாகவும் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் காணாமல் போனோர் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கூட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் திருகோணமலை - கண்டி பிரதான வீதியிலுள்ள இந்து கலாசார மண்டபத்திற்கு முன்னால் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்த காலங்களில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணாமல்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் காணாமல் போனோர் அலுவலகமானது தனது ஆரம்ப சந்திப்புக்களை கடந்த மே மாதம் வடக்கில் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலகத்தின் மீது நம்பிக்கையில்லை என வடக்கிலும் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பிரதமர் ரணிலைப் பாதுகாத்தவர்கள் வடக்கு மீனவர்களைக் கைவிட்டது ஏன்?

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை நோக்கி பேராசிரியர் சூசை ஆனந்தன் கேள்வி



(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணிலைப் பாதுகாத்தவர்கள் வடக்கு மீனவர்களைப் பாதுகாக்க பின்னடிப்பது ஏனோ? என யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் சூசை ஆனந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை நோக்கிக் கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த வாரத்தில் வடமராட்சி கிழக்கில் தென்பகுதி மீனவர்கள் அத்துமீறிக் குடியேறி மேற்கொண்டுவரும் கடற்றொழில் செயற்பாடுகள் காரணமாக வடமராட்சி கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியான நிலையில் அப்பகுதி மீனவர்கள் தொடர் போராட்டம் நடத்தி கடற்றொழில் துறையினர் மீது சீறிப்பாய்ந்துள்ளனர். அத்தோடு மீனவர்களை அப்புறப்படுத்தாவிடில் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் எனவும் எச்சரித்துமுள்ளனர்.

அதுவரை பாராமுகமாக இருந்துவிட்டு அங்கு போன சில கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீதும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

தென்பகுதி அரசுக்கு வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதைப் பற்றி எந்தக்கவலையுமில்லை என்பது வரலாறு.

அரசின் நோக்கம் முக்கியமாக கடலுணவான கடலட்டைகளின் ஏற்றுமதி மூலமான அந்நியச்செலாவணி சம்பாத்தியம் என்ற போர்வையில் ஒரு சில தென்பகுதி முதலாளிகள் பெரும் இலாபம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது. இது ஒருபுறம் இருக்க அதற்கப்பால் இன்னொரு பாரிய மறைமுகத்திட்டம் ஒன்றினையும் தென்பகுதி மீனவர்களைக் கொண்டு கச்சிதமாகசெய்து முடிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

அதாவது முல்லைத்தீவில் கொக்கிளாய், நாயாற்றுப்பகுதியை தென்பகுதி மீனவர்களைக்கொண்டு கபளிகரம் செய்ததைப்போல வடமராட்சி கிழக்கையும் கபளிகரம் செய்வதுதான் அரசின் திட்டமாகவுள்ளது போல்படுகிறது. குறித்த கரையோரப் பகுதியில் பாதுகாப்புத் தரப்பினரைக் கொண்டு தென்பகுதி மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கி அவர்களின் இருப்பை தக்கவைப்பது பின்னர் அங்கு விகாரைகளை அமைப்பதும் பிக்குகளைக் கொண்டுவந்து சிங்களக் குடியேற்றத்தை உறுதிப்படுத்துவதுமாகும். படையினரை வெளியேற்றக் கோரினால் தேசிய பாதுகாப்புக்கு அவைகள் அவசியம் என்பார்கள். தேசிய பாதுகாப்பின் இலட்சணம் இதுதானா?

தென்பகுதி மீனவர்கள் வெளியேற்றப்படாவிடின் முல்லைத்தீவில் வெலிஓயா போன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கும் விரைவில் பறிபோவதை எவராலும் நிறுத்த முடியாது போகலாம். இது எதிர்காலத்தில் வடமராட்சி கிழக்கிற்கு மட்டுமல்ல குடாநாட்டுக்கே பெரும் அச்சுறுத்தலாகவே அமையலாம். மன்னாரில் சவுத்பார், தலைமன்னார் பியர், சிலாவத்துறை ஆகிய இடங்களும் இவ்வாறான சர்ச்சைக்குரிய பகுதிகளாக இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வடபகுதி மீனவர்கள் தென்பகுதி கடலுக்கு போவது சாத்தியமில்லை. விரும்பினாலும் போக முடியாது. ஆனால் தென்பகுதி மீனவர்களோ தாராளமாக வடபகுதி கடலுக்கு வந்து போக எந்தத் தடையுமில்லை. கடற்றொழில் அமைச்சு மத்திய அரசுக்குரியது. அதுதான் நினைத்ததை வடக்கிலே அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. வட மாகாண சபைக்கு கடலில் எவ்வித அதிகாரமும் கிடையாது. இதனால் இரணைதீவு போன்று மக்கள் போராட்டத்தின் மூலமாகவே நிலத்தை மீட்க வேண்டிய நிலைக்கு மக்கள் இன்று தள்ளப்பட்டுள்ளனர்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதாகக் கூறி பாரிய அழிவையும் ஏற்படுத்தி தமிழ் மக்களின் வாழ்வையும் வளத்தையும் சீரழிக்க உதவிய சர்வதேச சமூகமும் குறிப்பாக இந்தியா போரின் பின்னர் வடகிழக்கில் நிகழ்ந்துவரும் அரசின் இவ்வாறான அடாவடித்தனங்களை கண்டும் காணாமலேயே உள்நாட்டு விவகாரம் என்று இருப்பது ஏற்கத்தக்கதல்ல. அதே வேளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களோ ஒருபடி மேலே போய் அரசைப் பாதுகாப்பதிலேயே கவனமாக உள்ளதுபோல் தெரிகிறது. பிரதமர் ரணிலை பாதுகாத்தவர்கள் வடக்கு மீனவர்களைப் பாதுகாக்க பின்னடிப்பது ஏனோ? எனவும் அவர் மேலும் கேள்வியெழுப்பியுள்ளார். (இ)

இந்நாள், முன்னாள் நட்சத்திரங்கள் முட்டி மோதும்

# உலக கால்பந்து திருவிழா

## இன்று ரஷ்யாவில் கோலாகல ஆரம்பம்

பிரிவு 'ஏ'
ரஷ்யா
சவுதி அரேபியா
எகிப்து
உருகுவே

பூமி பந்தின் ஒட்டுமொத்த பார்வையும் அடுத்த ஒரு மாதத்திற்கு ரஷ்யாவை நோக்கியே இருக்கும். இங்குதான் உலக கிண்ண கால் பந்து திருவிழா இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது.

**'நடப்பு சம்பியன்'**

ஜேர்மனி மீண்டும் அசத்துமா, மெஸ்சியின் ஆர்ஜென்ரீனா சாதிக்குமா, ரொனால்டோவின் போர்த்துக்கல் வரலாறு படைக்குமா, நெய்மரின் பிரேசில் எழுச்சி பெறுமா என்ற எதிர்பார்ப்புடன் ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.



இதில், சம்பியன் பட்டம் வெல்லும் அணி, உலக கால் பந்து அரங்கின் வல்லரசாக வலம் வரலாம்.

ரஷ்யாவில் 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால் பந்து தொடர் இன்று ஆரம்பமாகிறது.

11 நகரங்கள், 12 மைதானங்கள், 32 நாட்கள், 32 அணிகள், 64 போட்டிகள் என ஒரு மாதத்துக்கு கால்பந்து ரசிகர்களுக்கு கொண்டாட்டம் தான்.

பிரிவு 'பி'
போர்த்துக்கல்
ஸ்பெயின்
மொராக்கோ
ஈரான்

**'நம்பர் 1' ஜேர்மனி**

உலகத் தரவரிசையில் 'நம்பர்1' ஆக இருக்கும் ஜேர்மனி, வலிமையான வீரர்களுடன் மீண்டும் சாதிக்கும் என நம்பப்படுகிறது. டோனி குரூஸ், சமி கெடிரா, ஆசில், தோமஸ் முல்லர் இருப்பது அணியின் பலம். கடந்த முறை தலைவர் பதவியில் அசத்திய ஸ்கீவன்ஸ்டீகர், பிலிப் லாம் உள்ளிட்ட அனுபவ வீரர்கள் இல்லாதது பலவீனம்.

பிரிவு 'சி'
பிரான்ஸ்
அவுஸ்திரேலியா
டென்மார்க்
பெரு

**'முதல்' கிடைக்குமா**

உலகின் அஞ்சத்தக்க தாக்குதல் வீரர்களை கொண்ட அணி ஆர்ஜென்ரீனா ('நம்பர்5'). ஆனால் ஒருங்கிணைந்து செயல்படுவதில் சொதப்பி விடுகின்றனர். உலகின் சிறந்த வீரர் மெஸ்சி தலைவராக இருப்பது பலம். இவருக்கு துணையாக அகுயரோ, ஹிகுவேன், ஏஞ்சல் டி மரியா உள்ளனர்.

பிரிவு 'இ'
பிரேசில்
சுவிட்சர்லாந்து
கோஸ்டாரிகா
செர்பியா



பின் பகுதியில் பெடரிகோ, நிகோலஸ் தன்னம்பிக்கையுடன் செயல்படுவது முக்கியம்.

2014 உலக கிண்ணம் 2015, 2016ல் கோபா அமெரிக்கா என மூன்று முக்கிய தொடர்களின் இறுதிக்கு முன்னேறிய போதும் ஒன்றில் கூட கிண்ணம் வெல்லாதது மெஸ்சிக்கு சோதனைதான். முதல் கோப்பை வென்று தருவாரா என பொறுத்திருந்து காணலாம்.

பிரிவு 'எப்'
ஜேர்மனி
மெக்சிகோ
தெ.கொரியா
சுவீடன்

பிரிவு 'டி'
ஆர்ஜென்ரீனா
ஐஸ்லாந்து
குரோஷியா
நைஜீரியா

**நெய்மர் நம்பிக்கை**

ஐந்து முறை உலக சம்பியன் பிரேசில், கடந்த முறை (2014) சொந்த மண்ணில் ஜேர்மனியிடம் 1-7 என தோற்றது. இம்முறை பரிகாரம் தேட முயற்சிக்கலாம். காயத்தில் இருந்து மீண்ட இளம் முன்னணி வீரர் நெய்மர் இதற்கு 'கால்' கொடுக்கலாம்.



பிலிப்பே கவுட்டினோ, வில்லியன், கேபிரியஸ் ஜீசஸ், 'லெப்ட் பேக்' பகுதியில் அசத்தும் மார்செலோ இருப்பது நம்பிக்கை தரும். டேனி ஆல்வ்ஸ் காயத்தால் விலகியது பெரும் பலவீனம்.

**போர்த்துக்கல் எப்படி?**

யூரோ கிண்ண சம்பியன் போர்த்துக்கல் அணிக்கு அணித் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தான் பலம். அனுபவ வீரர்களான பெர்னாண்டோ சில்வா, ஆன்ட்ரி சில்வா உதவலாம்.

மத்திய பகுதியில் பெபேவை மட்டும் அதிகம் நம்ப வேண்டும். புருனோ ஆல்வ்ஸ், ஜோஸ் பான்ட்டே 'போர்மில்' இல்லாதது ஏமாற்றம்.

**ஸ்பெயின் எதிர்பார்ப்பு**

கடந்த முறை லீக் சுற்றுடன் திரும்பியது ஸ்பெயின். தற்போது புதிய பயிற்சியாளர் யூலென் தலைமையில் பெரிய எதிர்பார்ப்புடன் களமிறங்குகிறது. இனியஸ்டா, டேவிட் சில்வா என வலிமையான வீரர்களைக் கொண்டது. டேவிட் வில்லா, டீகோ கோஸ்டா 'பினிஷிங்' செய்ய தடுமாறுகின்றனர்.

தவிர சாரஸ் இடம்பெற்ற உருகுவே, கிரீஸ்மானின் பிரான்ஸ், சொந்தமண்ணில் களமிறங்கும் ரஷ்யா, ஈரான், கொலம்பியா உள்ளிட்ட அணிகளும் சவால் தரலாம்.

பிரிவு 'ஜி'
பெல்ஜியம்
இங்கிலாந்து
துனிசியா
பனாமா

**'குரூப் ஒப் டெத்'**

ரஷ்யா உலக கிண்ண தொடரில் கடினமான அணிகள் இடம்பெற்றுள்ள 'இ' பிரிவு, 'குரூப் ஒப் டெத்' என்றழைக்கப்படுகிறது. பிரேசில் (2,131 புள்ளி), சுவிட்சர்லாந்து (1,879), செர்பியா (1,770), கொஸ்டாரிகா (1,745) அணிகளின் தரவரிசை புள்ளிகள் சராசரி 1,881 ஆக உள்ளது.

**736 வீரர்கள்**

ஒவ்வொரு அணியிலும் 23 பேர் இடம்பெற்றிருப்பர்.

பிரிவு 'எச்'
போலந்து
செனகல்
கொலம்பியா
ஜப்பான்

மொத்தம் பங்கேற்கும் வீரர்களின் எண்ணிக்கை 736 ஆக உள்ளது.

**3,35,000 மக்கள்**

உலக கிண்ணத் தொடரில் களமிறங்கும் குறைந்த மக்கள் தொகை கொண்ட அணி ஐஸ்லாந்து. இங்கு மொத்த மக்கள் தொகை 3,35,000 பேர்தான்.

இதற்கு முன் 2006ல் டிரினிடாட் அண்ட் டுபாகோ அணி (13,00,000 பேர்) இந்த பெருமை பெற்றிருந்தது.

# வெற்றியுடன் தொடங்குமா ரஷ்யா?

## இன்று சவூதியுடன் மோதல்

உலக கிண்ண கால் பந்து தொடரில் இன்று நடக்கும் முதல் போட்டியில் சொந்த மண்ணில் களமிறங்கும் ரஷ்ய அணி, சவுதி அரேபியாவை சந்திக்கிறது.

உலக கிண்ண தொடரில் எளிதானது 'ஏ' பிரிவு தான். உருகுவே ('நம்பர் 17') தவிர எகிப்து (46), சவுதி அரேபியா (67), ரஷ்யா (70) அணிகள் தரவரிசையில் பின்தங்கியவை. இந்த தொடருக்காக ரஷ்யா, ரூ. 87,678 கோடி செலவு செய்துள்ளது.

ஆனால் கடந்த எட்டு மாதங்களாக பங்கேற்ற 7 போட்டிகளில் 3 'டிரா', 4 தோல்வி அடைந்துள்ளது. 1994, 2002, 2014 என களமிறங்கிய மூன்று முறையும் லீக் சுற்றை தாண்டியது இல்லை. இம்முறை தொடரை நடத்தும் அணி என்ற அடிப்படையில் களமிறங்கும் ரஷ்ய அணி, சொந்தமண்ணில் எழுச்சி பெறும் என நம்பப்படுகிறது. 105 போட்டிகளில் பங்கேற்ற அனுபவ கோல்காப்பாளர் இகர் அகின்பீவ், டெனிஸ் ஷெரிஷேவ், ஆலன் டகோயவ் நம்பிக்கை தரலாம்.

சவுதி அரேபிய அணி [illegible] பொறுத்தவரையில் அதிகபட்சம் 1994ல் 'ரவுண்ட்-16' சுற்றுக்கு முன்னேறியது. இம்முறை ஜுவான் ஆன்டனியோ பயிற்சியாளர் ஆன பிறகு சிறப்பாக செயல்படத் தொடங்கிவிட்டது.

பிஜ்ஜி, சலீம், ஷேக்ரி என மூவரும் தாக்குதல் பாணியில் மிரட்டு வர். ரஷ்ய அணியின் எவ்வித தற்காப்பு பகுதியையும் இவர்கள் தகர்க்கலாம் என நம்பப்படுகிறது.

இந்த அணியின் தற்காப்பு பார்க்க வலுவானதாக உள்ளது. எனினும் உலக கிண்ணம் போன்ற தொடரில் சிறந்த அணிகளுக்கு எதிராக தாக்குப்பிடிப்பது சிரமம்தான்.

**தொடக்க விழா**

முதல் போட்டிக்கு முன் 30 நிமிடம் தொடக்க விழா நடக்கிறது. இலங்கை நேரப்படி இன்று மாலை 6.30 மணிக்கு தொடங்கும் விழாவில் நடன கலைஞர்கள், ஜிம்னாஸ்டிக்ஸ் சாகச நட்சத்திரங்கள் உட்பட 500 பேர் பங்கேற்கின்றனர்.

அதிகாரபூர்வ பாடல் 'லைவ் இட் அப்...'ஐ, வில் ஸ்மித், நிக்கி ஜாம் இணைந்து பாட உள்ளனர். இங்கிலாந்தின் பிரபல பாடகர் ராபியே வில்லியம்ஸ், ரஷ்யாவின் அய்டா கரிபுல்லினா கலக்க உள்ளனர். பிரேசில் அணியின் முன்னாள் வீரர் ரொனால்டோ, ஜேர்மனியின் ஓய்வுபெற்ற மத்தாயஸ் பங்கேற்கின்றனர். முடிவில் வாண வேடிக்கை நிகழ்ச்சிகள் நடக்கவுள்ளன.


யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்

பழைய மாணவர் சங்க

பொதுக்கூட்டம் - 2018

இடம் : பாடசாலை மண்டபம்
காலம் : 15.06.2018 வெள்ளிக்கிழமை
காலை 10 மணி

புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற உள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

- அதிபர்

(C-2923)





பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு. அங்கஜன் இராமநாதன் அவர்கள்

பிரதி விவசாய அமைச்சராக பதவி ஏற்றுக்கொண்ட யாழ்.மாவட்ட பிரதான இணைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எங்கள் மனம் நிறைந்த அண்ணன் திரு.அங்கஜன் இராமநாதன் அவர்கள் மேன்மேலும் பதவி உயர்வடைந்து வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- திருமகள் சனசமூக நிலையம்.
வல்லியாவத்தை பராசக்தி அம்மன் ஆலயம்
'வல்லியாவத்தை' கரணவாய் மேற்கு.

(C-2922)

# ஜனாதிபதி இந்து மதத்தை அவமானப்படுத்திவிட்டார்

## யோகேஸ்வரன் எம்.பி. ஆட்சேபம்



(கொழும்பு)

"ஜனாதிபதியோ! பிரதமரோ! யாரையும் அமைச்சர்களாக நியமிக்கலாம் பொறுப்புக்களை வழங்கலாம். அந்த அடிப்படையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானுக்கு பிரதியமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதனை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒரு மதம் சார்ந்த அமைச்சுப் பதவி பிறிதொரு மதம் சார்ந்தவருக்கு வழங்கப்படுவதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தனது எதிர்ப்பை தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரு இராஜாங்க அமைச்சர்களும் ஐந்து பிரதியமைச்சர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் புனர்வாழ்வு மீள்குடியேற்றம், வடமாகாண அபிவிருத்தி மற்றும் இந்து சமய விவகார பிரதியமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந் நியமனம் தொடர்பாக யோகேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜனாதிபதியின் இந் நியமனம் இலங்கை வாழ் இந்து மக்களை வேதனைப்படுத்தியுள்ளதோடு ஜனாதிபதியினால் இந்து மதம் அவமதிக்கப்பட்டதாகவே கருதுகிறேன். இந்நியமனம் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

அதாவது பௌத்த சாசன அமைச்சு அல்லது இராஜாங்க அமைச்சு அல்லது பிரதியமைச்சு பதவியை ஜனாதிபதியினால் பௌத்தர் அல்லாத ஒருவருக்கு வழங்க முடியுமா? ஒருபோதும் அவ்வாறு வழங்க முடியாது. இந் நிலையில் எவ்வாறு இந்து மதம் அல்லாத ஒருவருக்கு இந்து சமய விவகார பிரதியமைச்சு பதவியை வழங்க முடியும் என நான் ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகிறேன்.

மத ரீதியான கோட்பாடுகளைப் பொறுத்தவரை இந்து சமயத்துக்கும், இஸ்லாத்துக்கும் பல்வேறு விடயங்களில் முரண்பாடுகள் உள்ளன. இந்து சமயம் உருவ வழிபாட்டினை வலியுறுத்துகிறது. கிரியைகளுக்கு முன்னுரிமையளிக்கிறது. பசு வதையை எதிர்க்கிறது. இந் நிலையில் இந்து சமய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அனுசரித்து நடப்பதில் பிரதியமைச்சர் சர்ச்சைகளையும் விமர்சனங்களையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

இந்து ஆலயத்தில் நடைபெறுகின்ற பூஜை வழிபாடுகளில் பிரதியமைச்சர் என்ற வகையில் அவரால் கலந்து கொள்ள முடியுமா? என்ற வினாவிற்கு பிரதியமைச்சர் பதிலளிக்க வேண்டும்.

இந்து சமய விவகாரத்தைப் பொறுத்தவரை டி.எம். சுவாமிநாதன் இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் இல்லாத நிலையில் தனது கடமையை சிறப்பாக முன்னெடுத்திருந்தார். அவருக்கு பிரதியமைச்சர் தேவை என்றால் அமைச்சரின் ஆலோசனை பெற்று பொருத்தமான ஒருவரை நியமித்திருக்கலாம்.

அமைச்சு அல்லது பிரதியமைச்சு பதவி வழங்கப்படும் போது குறித்த துறை சார்ந்தவர்கள், அனுபவம் ஆற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது பொது நடைமுறையாகும்.

ஆனால் இந்த விடயத்தில் இந்து சமய கோட்பாடுகளை அறிந்திராத, பின்பற்றாத ஒருவர் எந்தவகையில் பிரதியமைச்சுக்குப் பொருத்தமானவராக இருக்க முடியும்.

தற்போதைய அமைச்சரவையில் இரு இந்துக்கள் பிரதியமைச்சர்களாக உள்ளார்கள். அவர்களில் ஒருவருக்கு வழங்கியிருக்கலாம். அல்லது இந்து சமய கோட்பாடுகளுடன் மிகவும் நெருக்கமாக உள்ள பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்திருக்கலாம்.

பௌத்த சமயத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் எந்த அமைச்சுப் பதவியில் இருந்தாலும் வடக்கு-கிழக்கு மாகாணகளுக்கு வரும் போது இந்து ஆலயங்களுக்கு சென்று விஷேட பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதைப் பேணிவருகிறார்கள். இது இந்து பௌத்த மத வழிபாடுகளில் உள்ள ஒற்றுமையை பிரதிபலிக்கிறது. ஆனால் இஸ்லாமிய அமைச்சர்கள் இந்து ஆலயங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்கிறார்கள்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆரம்பத்தில் மீள் குடியேற்றம் புனர்வாழ்வு இந்து விவகார அமைச்சராக டி.எம்.சுவாமிநாதன் பொறுப்பேற்றிருந்த வேளை அந்த அமைச்சுக்கு இராஜாங்க அமைச்சராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டிருந்த போதும் இந்து சமய விவகாரம் அவருக்கு வழங்கப்படவில்லை.

இதே போன்றதொரு நிலைப்பாட்டினையே ஜனாதிபதி கவனத்தில் கொண்டு காதர் மஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதியமைச்சுப் பதவியிலிருந்து இந்து சமய விவகாரம் நீக்கப்படவேண்டும் என யோகேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நடிகர்களுக்கான இறுதித்தெரிவு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் கரவை சுப்பர் ஸ்ரார் நடிகர்களுக்கான இறுதித் தெரிவு சிறப்பு நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் ஜெயச்சந்திரன் கலையரங்கில் சனசமூக நிலையத் தலைவர் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலாபூஷணம் மா.அனந்தராசா கலந்து கொள்வார். (இ-7)

# சமூக ஊடகங்களை தடை செய்ய திட்டம்

## டளஸ் எம்.பி. தகவல்



(கொழும்பு)

அரசாங்கம் சமூக ஊடகங்களை தடைசெய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். சமூக ஊடகங்களை தடைசெய்வதற்காக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இதற்கான முயற்சிகளை பல தடவை மேற்கொண்டது. ஆனால் மக்களின் எதிர்ப்பால் இது சாத்தியமாகவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்கு சமூகஊடகங்கள் தடையாகவிருப்பதாக கருதுகின்றது. இதன் காரணமாகவே சமூக ஊடகங்களை தடை செய்ய முயல்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1936 - 04 - 02

மறைவு 2018 - 06 - 13

திருமதி.
பவானியம்மா குழந்தைவேலு

எமது பாடசாலை அதிபர் திருமதி. சாந்தினி வாகீசன் அவர்களின் அன்பு மாமியார் அமரர் திருமதி. பவானியம்மா குழந்தைவேலு அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

(4503)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி. பவானியம்மா குழந்தைவேலு



எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி.
யோகேந்திரி சுகுந்தன்
அவர்களின் தாயார்
திருமதி.
பவானியம்மா குழந்தைவேலு
அவர்களின் மறைவால்
துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(4508)

பாடசாலைச் சமூகம்
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.


## இராசி பலன்

**14.06.2018**

வைகாசி 31, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
பிரதமை பின்னிரவு 12.01 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 4.05 மணிவரை
சுபநேரம் 7.23 - 8.53 மணிவரை
இராகுகாலம் 1.23-2.53 மணிவரை
நயினை நாகபூஷணி கொடியேற்றம்

வளவன்

கிரகநிலை: சூரி; சந், புத; சுக், ராகு; கேது, செவ்; சனி; குரு

சந்திராஷ்டமம்: அனுசம், கோட்டை

**மீனம்:** அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** சுப காரியச் பேச்சுக்கள் முடிவாகலாம், வியாபார விருத்தியுண்டு, வருமானம் இரு மடங்காகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மிதுனம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கும்பம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய பெருட்சேர்க்கையுண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சயனக் குறைவுண்டு.

**மகரம்:** மனையில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


**விருச்சிகம்:** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், அலைச்சல்கள் சிறிது அதிகரிக்கும்.

**துலாம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

# அலைகடல் நடுவில் வீற்றிருந்து அருள்பாலிக்கும்

# நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பம்



**பெற்றதாலன்னை**
**பெறுமுயிர னைத்தும்**
**பேணலால் அன்னை**
**பெற்றிடுவோர்**
**உற்றதாலன்னை விரும்பிய**
**அனைத்தும்**
**உதவலால் அன்னை**
**எக்கலையும்**
**கொற்றதாலன்னை உலகொடு**
**வானும்**
**தொழுதலால் அன்னை**
**என்றென்றும்**
**பற்றதாங்கருணை பொழிதலா**
**லன்னை**
**பராபரை நாகபூஷணியாள்**

**சக்திபீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகப் போற்றப்படுவது நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயமாகும்.**

ஏழ்கடல் சூழ்ந்த சமுத்திரத்தின் மத்தியிலே அருட்பொலிவும் ஆன்மீகச் சிறப்பும் பெற்று சரித்திர வரலாறுகளுடன் திகழ்வது நயினாதீவு. ''மணிபல்லவம்'' என்று போற்றப்படும் வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் இதற்கு உண்டு. இவ் அழகிய தீவிலே அம்பிகை எழுந்தருளி அகில உலகமெல்லாம் உள்ள ஆன்மாக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றாள். தன்னை நாடிவரும் அடியார்கள் வேண்டும் வரங்களை மனமுவந்து அள்ளிச் சொரிந்து அருளாட்சி செய்து கொண்டிருப்பவள் அன்னை நாகபூஷணி. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றவள். அடியார்கள் அரோகரா என்று வந்து கால்பதிக்கும் இறங்குதுறை நயினாதீவுக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட கொடை எனலாம்.


ஆசைக்கடலில்அகப்பட்டுஅலைவோருக்குவாசக்கமலங்களைதலைமேல் வைத்து அருள் நேசக் கரங்களை நீட்டி நிம்மதி தருகின்றாள்.

தூய்மையானநாகவழிபாட்டினை இவ்வாலயத்தில்காணலாம். புராதன காலந்தொட்டே நாகவழிபாடு நடைபெற்று வருகின்றது. முன்ன தாக நாகவழிபாட்டிலே தொடங்கி காலப்போக்கில் ''நாகபூஷணி'' வழிபாடாக வளர்ந்து நினைவுச் சின்னமாக நயினை நாகபூஷணி விளங்குகின்றாள். முன்னொரு காலத்தில் ஒரு சர்ப்பம் இங்கே வசித்து தவம் செய்து வந்ததால் தனது சாபம் நீங்கப் பெற்றதாகவும், அதனைத் தனது திருமேனியில் அணிந்து சாப நிவர்த்தி செய்தருளியமையால் தான் இங்கு எழுந்தருளியிருக்கும் அம் பிகை நாகபூஷணி என்னும் திரு நாமத்துடன் விளங்குகின் றாள் என்பது வரலாறாகும். அடியார்கள் அம்பிகை மீது பற்றுவைத்து நாக சாந்தி செய்வ தற்கு நயினாதீவுக்கு வருகின்றார்கள்.

நாகசாந்தி செய் வதன்மூலம் நாகதோஷம் நீங்குகின்றது என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் காணப்படுகின்றது.

நாகதோஷத்தை நிவர்த்தி செய்து அம்பிகையின் அருளால் பிள்ளைப் பாக்கியம் பெற்றவர்கள் பலர்.


காலாதிகாலமாக அடியவர்கள் முழுமையான நம்பிக்கையோடு அம்பிகையைத் தரிசித்து நற்பேறடைந்துள்ளார்கள். அடியார்கள் அனுதினமும் அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடிவந்து நெக்குருகி நின்று நினைந்து அம்பிகையை வழிபடும் பக்தியே பக்தி.



வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே பழைமையும் தொன்மையும் பெற்ற ஆலயமாக ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம் விளங்குகின்றது. பெருமையும் மகிமையும் கொண்டது. நாகபூஷணி அம்மனின் மூல விக்கிரகம் பூர்வீகமான பழைமை மிகுந்த சிறப்பினைக் கொண்டது.

ஆன்ம கோடிகளுக்கு அருள் பிரவாகத்தையும், அனுபூதியையும் அருளவல்ல தனித்துவம் கொண்டது. இம் மூல விக்கிரகத்தின் அமைப்பும் அற்புதமும் உலகிலே வேறெந்த திருத்தலங்களுக்கும் இல்லை எனலாம். மூலஸ்தானத்தில் அம்பாள் உருவம் போல விளங்குவது பழைய நாகப் பிரதிஷ்டை என்பது ஆராய்ச்சியாளர்களின் கூற்றாகும். இதற்குப் பின்புறத்தில் ஐந்து தலை நாகப் பிரதிஷ்டை காணப்படுகின்றது. இது மிகவும் பழைமையானது. தூய்மையான நாகவழிபாடு இவ்வாலயத்தில் மிகவும் பழைமையான காலத்திலிருந்தே நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

தூய்மையான நாகவழிபாடு இவ்வாலயத்தில் பண்டைக் காலத்திலிருந்தே நடைபெற்று வந்தமைக்கான சரித்திர வரலாற்றுடன் கூடிய நிகழ்வு ஒன்றினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக அமையும். முன்பு நாகம் ஒன்று நயினாதீவுக்கு வடக்கேயுள்ள அனலைதீவின் புளியந்தீவிலிருந்து நாள்தோறும் பூக்கள் கொண்டு வந்து நயினாதீவிலுள்ள அம்பிகையை வழிபட்டு வந்தது. ஒருநாள் பூக்கள் கொண்டுவரும் வழியில் ஒருகருடன் நாகத்தை வழிமறித்து அதனைக் கொல்ல நினைத்தது. நாகம் அச்சமடைந்து கடல் நடுவே இருந்த கல் ஒன்றினைச் சுற் றிக் கொண்டது. கருடனும் மற்றொரு கல்லில் அமர்ந்திருந்து அதனைக் கொல்லச் சந்தர்ப்பம் பார்த்திருந் தது. அவ்வேளையில் வணிகன் ஒருவன் மரக்கலம் ஒன்றிலே பண்ட ங்களைக் கடல் வழி



யாக ஏற்றி வரும் போது இக்காட்சியைக் கண்டான். பாம்பின் மீது இரக்கங் கொண்ட வணிகன் நாகத்தைக் கொல்ல வேண்டாம் என்று கருடனை வேண்டினான். அத ற்குக் கருடன் நீ உனது செல்வம் அனைத்தையும் கொண்டு வந்து நாகேஸ்வரி அம்மனுக்கு கோயில் ஒன்றைக் கட்டுவதாக உறுதியளித் தால் நான் இந்த நாகத்தைக் கொல்லாது விட்டு விடுவேன் என்றது. வணிகனும் அவ்வாறே உறுதியளிக்க கருடன் நாகத்தைக் கொல்லாது விலகி யது. வணிகனும் தனது நாட்டுக்கு சென்று நிகழ்ந்தவற்றையெல்லாம் தனது மனைவிக்குச் சொன்னான். அவர் கள் இருவரது கண்களையும் கூசும் படியான தெய்வீக ஒளியொன்று தோன் றியது.

நாகரத்தினக் கற்களில் இரு ந்து தோன்றிய ஒளி என்பதைக் கண்டு அம்பிகையின் நல்ல ருளை எண்ணி ஆச்சரியப்பட்டு நயினாதீவுக்கு வந்து நாகபூஷணிக்கு அழகிய ஆலயம் ஒன்றைக் கட்டினார்கள். மேற்கூறிய கதைக்குச் சான்றாக நயினாதீவின் வடகடலில் "பாம்பு சுற்றியகல்'', ''கருடன் இருந்த கல்'' என இரண்டு கற்கள் காணப்படுகின்றன. அடியவர்கள் இக்கற்களை வழிபட்டு சரித்திர சான்றுகளை நினைவுபடுத்துகின்றனர். 11 ஆம் திருவிழாவன்று இவ்விரு கற்களுக்கும் பூசைகளும் வழிபாடு களும் இடம் பெற்று வருகின்றன. இந்த வழிபாடுகளின் போது கருடப் பறவை வானத்தில் வட்டமிடுவதாக வும் அடியார்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். நாகபூசையும் கருட பூசையும் அடியார்களை மெய்சிலிர்க்க வைப்பனவாகும். அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லியாக விளங்குகின்ற நாகபூஷணி அம்பாள் ஐந்து தலை நாக த்தில் பவனி வருகின்ற காட்சி தேவலோகக் காட்சி.

மஞ்சத்தில் எழுந் தருளி பவனி வருகின்ற காட்சி அடி யார்களை மெய்சிலிர்க்க வைக்கும் கைலாச வாகனத்தில் பவனி வருகின்ற காட்சியைக் காணக் கண்கள் கோடி வேண்டும். தேரில் உலா வரும் காட்சியைக் காணும் அடியார்கள் பெரும் பேறு பெற்றவர்கள். கண்ணீரைச் சொரிய வைக்கின்ற இவ்வற்புதமான காட்சிகள் அடியார்களுக்கு உணர்வுபூர்வமானவையாகும்.

### அமுதசுரபியில் அன்னதானம்

ஆண்டுதோறும்அம்பிகையைத் தரிசிக்க வருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுது வழங்குகின்ற பெரும் பணியை சிறந்த முறையில் அமுதசுரபி அன்னதான சபையினர் செய்து வருகின்றனர். இப்பெரும்பணி 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அடியார்களுக்கு அருள் சுரந்து கொண்டு நயினையம்பதியில் வீற்றிருக்கும் அம்பிகை அமுதசுரபியில் அன்ன பூரணியாக நின்று அமுது சுரக்கின்றாள்.

மணிமேகலையுடன் தொடர்புடைய மணிபல்லவத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இவ் அன்னதான சபைக்கு அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்தி ரமான ''அமுதசுரபி'' என்ற பெயரை அறிஞர் கி.வா. ஜெகநாதன் அவர் கள் வழங்கினார்கள். அமுதசுரபி யில் அள்ள அள்ளக்குறையாமல் அமுது பெருகிக் கொண்டே இருக் கின்றது.

மண்ணில்நல்லவண்ணம்வாழ வழிகாட்டி நிற்கும் அன்னை நாகபூஷணிக்கான இவ்வாண்டுக்கான (2018) உயர் திருவிழா இன்று (14.06.2018) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. திருவிழாக் காலங்களில் ஆழ்கடலில் அடியார் கூட்டம் அலைமோதுகின்ற காட்சியைக் காண கவலைகள் எல்லாம் பறந்தோடும்.

துன்ப துயரங்களை எல்லாம் நீக்கும் அன்னை நாகபூஷணி மீது பக்தியும் சிரத்தை யும் கொண்டு உருகி உருகி வழிபட்டு ஆனந்தம் அடைகின்றனர். மண்ணில் நல்ல வண்ணம் வாழ நயினை ஸ்ரீ நாகபூஷணிஅம்பாள்நல்லருள்புரிவாராக.

நயினை
நா.க.குமாரசூரியர் (J.P)

# இராணுவக் கட்டுப்பாட்டில் தபால் நிலையக் கட்டடம்

## விடுவிக்குமாறு பரு.நகரசபை உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் பருத்தித்துறை தபால் நிலையக் கட்டடம் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற் கான எரிபொருள் நிரப்பு நிலையம் ஆகிய வற்றை நகர வளர்ச்சி கருதி உடனடியாக மீள ஒப்படைக்க வேண்டும் என பருத் தித்துறை நகரசபை உறுப்பினர் ப.சுரேஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

பரு.நகரசபையின் கடந்த அமர்வின் போதே உறுப்பினர் சுரேஷால் இக் கோரி க்கை முன்வைக்கப்பட்டது.இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் நலன் கருதி இராணுவக் கட்டுப் பாட்டில் இருக்கும் கட்டடங்களை விடுமாறு சபையில் தீர்மானம் நிறைவேற்றி உரிய படைத் தலைமை அதிகாரிக்கு அனுப்பப் படல் வேண்டும்.

பருத்தித்துறை தபால் நிலையம் தற்போது வசதிகள் அற்ற நிலையில் தனியார் வீட்டில் இயங்கி வருகிறது. இராணுவப் பாவனையிலுள்ள தபால் நிலையத்தை மீட்க, நல்லாட்சிக்கு ஆதர வான கூட்டமைப்பு பிரதிநிதிகள் உதவ வேண்டும்.

பலநோக்கு கூட் டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் இராணுவப் பாவ னைக்காக கையகப்படுத் தப்பட்டுள்ளதால் ப.நோ. கூ.சங்கம் வருமானம் இன்றி மூடும் தறுவாயில் இயங்குகிறது.

இதில் பணிபுரியும் நூற்றுக்கணக் கான தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பை இழக்கும் நிலையுள்ளது. எனவே இந்தக் கட்டடங்களை மீளப் பெற்று ஒப்படைப்பதன் ஊடாக பருத்தித்துறை நகரின் வளர்ச்சிப் பாதைக்கு வழியேற்படுத்திய பெருமை உங்களைச் சாரும் எனத் தெரிவித்தார்.

முதலில் தவிசாளர் இது நடைமுறைக்கு சாத்தியம் இல்லை எனத் தெரிவித்த போதிலும் பின்னர் சபையில் அனுமதி கோரப்பட்டு அனைத்து உறுப்பினர்களின் அனுமதியுடனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ-7)

## வாடகைக்கு

முல்லைத்தீவு உண்ணாப்பிலவு, கொக்கிளாய் வீதியில் அமைந்துள்ள சந்திரன் பல்பொருளுக்கு அருகாமையில் அமைந்துள்ள இரு கடைகள் வாடகைக்கு விடப்படும்,
அகலம் 11 அடி, நீளம் 27 அடி
இடைச்சுவர் வைக்காத காரணத்தால் வசதிக்கு ஏற்ப செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 050 3923
(சி-2912)

## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

செல்வி **தயாநிதி திருஞானசம்பந்தர்** (SLTS.I)
(பயிற்றப்பட்ட ஆசிரியை- வணிகக்கல்வி)



யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மற்றும் யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த. பாடசாலை ஆகியவற்றில் வணிகக்கல்வி ஆசிரியையாக கடமையாற்றி ஓய்வுபெற்ற செல்வி தயாநிதி திருஞானசம்பந்தர் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

Congratulations

செல்வி செளந்தலாதேவி முருகேசு
(ஓய்வு நிலை வணிகக் கல்வி ஆசிரிய ஆலோசகர், யாழ்ப்பாணம்)
(4498)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
**அங்கஜன் இராமநாதன்**

பிரதி விவசாய அமைச்சர் பதவி கிடைத்ததையிட்டு பாராட்டி வாழ்த்துகிறேன்.
முருகண்டியான் பிள்ளையார் அருள் பெறவும் வேண்டுகிறேன்.
ஏழைகள் துன்பப்படமாட்டார்கள். ஒருங்கிணைப்புத் தலைவர், கட்சி பேதமின்றி இளைஞர்களின் தளபதியாக உள்ளத்தில் குடிகொண்டுவிட்டார். யாவரையும் அரவணைத்து செயற்படுவார் என்பதில் எதுவித ஐயமில்லை.


இப்படிக்கு என்றென்றும் வாழ்த்தும்
தியாகு அங்கிள்.
(4501)

## இயந்திரம் விற்பனைக்கு

வீதி வேலைக்கான அதிர்வு உருளைகள் (Vibrating Roller) 4 தொன், 10 தொன், Bobcat இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 711 0287
(சி-2910)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. **இராசரத்தினம் சுதர்ஷன்**
B.A, P.G.D.E (Merit) Med (1st Class)



எமது கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் திரு.இராசரத்தினம் சுதர்ஷன் யாழ். பல்கலைக்கழக 33 ஆவது பட்டமளிப்பில் 08.06.2018 அன்று கல்வியியல் முதுமாணிப் பட்டம் பெற்றதையிட்டு அவரை நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/அத்தியார் இந்துக் கல்லூரி. நீர்வேலி.
(4507)

## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

செல்வி **தயாநிதி திருஞானசம்பந்தர்** (SLTS.I)
(பயிற்றப்பட்ட ஆசிரியை,வணிகக்கல்வி)



26.03.1990 ஆம் ஆண்டு தொடக்கம் எமது பாடசாலையின் வணிகக்கல்வி ஆசிரியராகவும் பாடசாலையின் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு உறுதுணையாளராகவும் மாணவர்களின் நலனில் அக்கறையுடையவராகவும் விளங்கி 13.06.2018 இல் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற செல்வி தயாநிதி திருஞானசம்பந்தர் (SLTS-I) அவர்களின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.
(4497)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 60 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:A/L கனடா PR<br>தொ.இ: B/7718 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1ஆம்பாதம்<br>கி.பா: சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:பட்டதாரிஅரசதொழில்<br>எதிர்பார்ப்பு:திருமணமாகி 1மாதத்திற்குள் பிரிந்து விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G/7879 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2ஆம்பாதம்<br>தகைமை/தொழில்: பட்டதாரி அரச தொழில்<br>தொ.இ: B/7721 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4ஆம் பாதம்<br>கி.பா: 36 உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: பட்டதாரிஅரச தொழில்<br>தொ.இ: G/7886 |
| பிறப்பு: 1982 கிறிஸ்தவம் RC<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்: MD வைத்தியர்<br>தொ.இ: B/7724 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 75 செவ் 7 இல் உயரம்: 4’8"<br>தகைமை/தொழில்: GAQ<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7887 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2ஆம்பாதம்<br>கி.பா: 1<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L சொந்தத் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/7725 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3ஆம்பாதம்<br>கி.பா: 58செவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BSC MSC PHD அமெரிக்கா<br>எதிர்பார்ப்பு: திருமணம் முடிந்து விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G/6057 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மிகுதிப்பணம் செலுத்தி முடிக்கப்படாத உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்படும்

(பரந்தன்)

மீள்குடியேற்ற காலப்பகுதியான 2010 மற்றும் 2012 காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு 50 வீத மானியத்தில் வழங்கப்பட்ட இரு சக்கர உழவு இயந்திரங்களுக்கான மிகுதி பணம் செலுத்தி முடிக்கப்படாத அனைத்து உழவு இயந்திரங்களை விவசாயிகளிடமிருந்து பறிமுதல் செய்ய கமநல ஆணையாளர் மாவட்டங்களுக்கு பணித்துள்ளதாக மாவட்ட கமநல சேவைகள் நிலைய ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் 2010 மற்றும் 2012 ஆகிய காலப் பகுதியில் கடந்த அரசின் பொருளாதார அமைச்சும் ஜப்பான் நிறுவனம் ஒன்றும் இணைந்து கிளிநொச்சியில் உள்ள எட்டு கமநல சேவைகள் நிலையத்தால் 127 விவசாயிகளுக்கு இரு சக்கர உழவு இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. ஐந்து இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு சக்கர உழவு இயந்திரத்தை பெற்றுக்கொண்ட விவசாயி ஒருவர் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை தவணை அடிப்டையில் செலுத்த வேண்டும்.

ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்படி உழவு இயந்திரங்களை பெற்றுக் கொண்ட ஒரு சில விவசாயிகளைத் தவிர பெரும்பானானவர்கள் தவணைப் பணத்தை செலுத்தி முடிக்கவில்லை. தொடர்ச்சியாக மாவட்டத்தில் கடந்த மூன்று வருடங்களாக நிலவி வருகின்ற வரட்சி, மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறுமை, உற்பத்தியாளர்களுக்கு உத்தரவாதம் இல்லாத நிலைமை போன்ற காரணங்களால் விவசாயிகளால் குறித்த பணத்தை செலுத்த முடியாது போய்விட்டது என்றும் அத்தோடு பலரது இரு சக்கர உழவு இயந்திரம் பழுதடைந்த போது அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கான உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை என்பனவற்றால் அவற்றைக் கொண்டு வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாது போய்விட்டது.

இதனாலேயே பணத்தை செலுத்த முடியவில்லை என மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் கடந்த வாரம் கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்ற குறித்த விவசாயிகளுடனான கலந்துரையாடலில் மாவட்ட கமநல ஆணையாளர் ஆயகுலன் எதிர்வரும் நவம்பர் மாத்திற்குள் பணத்தைச் செலுத்தி முடிக்க வேண்டும் என்றும் அதற்கிடையில் இம்மாதத்திற்குள் 75 வீத பணத்தை செலுத்தியிருக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் பொலிஸாரைக் கொண்டு உழவு இயந்திரங்களை பறிமுதல் செய்து ஏலத்தில் விடுமாறு கமநல ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் மிக மோசமான நிலைமையை அமைச்சு, உயரதிகாரிகள் மட்டங்களுக்கு எடுத்துச் சென்று விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் தீர்மானங்களை கொண்டு வருவதற்கு அரசியல்வாதிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (2-312)




# பாடசாலை விடுமுறை தினங்களில் பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதில்லை

## 22 பேருந்துகள் மட்டுமே சேவையில்–கிளிநொச்சி சாலை

(கண்டாவளை)

கிளிநொச்சி முக்கொம்பன் கிராமத்திற்கான போக்குவரத்தில் ஈடுபடும் இலங்கைப்போக்குவரத்துச்சபையின் பேருந்து பாடசாலை விடுமுறை தினங்களில் சேவையில் ஈடுபடாமையினால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக முக்கொம்பன் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட முக்கொம்பன் கிராமத்திற்கான போக்குவரத்து சேவைகளை ஏற்படுத்தித்தருமாறு விடுத்த கோரிக்கையையடுத்து முக்கொம்பன் கிராமத்திற்கான போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்படுகின்றது.

இ.போ.சபையின் கிளிநொச்சி சாலை ஊடாக கிளிநொச்சியிலிருந்து பூநகரி பத்தாம் கட்டைசந்தி வழியாக முக்கொம்பன் வரை மேற்கொள்ளப்படுகின்ற இப்பேருந்துச் சேவையானது பாடசாலை நாட்கள் தவிர்ந்த ஏனைய சனி, ஞாயிறு தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் மேற்கொள்ளப்படுவதில்லை.

இதனால் தனியார் வகுப்புக்களுக்குச் செல்கின்ற மாணவர்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை குறித்த பேருந்து சேவையானது பாடசாலை மாணவர்களுக்கான சேவையாக மேற்கொள்ளப்படுவநாகவும் கிளிநொச்சிச் சாலையில் 22 பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடுவதனால் போதிய சேவைகளை வழங்க முடியாதுள்ளதாக கிளிநொச்சி சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-315)

# சதொச மனித புதைகுழி அகழ்வில் முழுமையான மனித எலும்புக்கூடுகள் மீட்பு

## திரண்ட மக்களால் பதற்றம்





(மன்னார்)

மன்னார் சதொச விற்பனை நிலைய வளாகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்பு அகழ்வுப் பணிகள் நேற்று 13 ஆவது நாளாக இடம்பெற்ற நிலையில் பிற்பகல் 5.30 மணியளவில் நூற்றுக்கணக்கான மக்கள் குறித்த பகுதியில் சூழ்ந்து கொண்டமையினால் சற்று பதற்ற நிலை ஏற்பட்டது.

மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முழுமையான மனித எலும்புக்கூடு மற்றும் மண்டையோடுகள் என்பன மீட்கப்பட்டிருந்தன.

சுமார் நூற்றுக்கணக்கான மக்கள் அகழ்வுப்பணிகள் இடம்பெறும் இடத்தை சூழ்ந்து கொண்டதோடு முழுமையாக மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடு மற்றும் மண்டையோடுகளைப் பார்க்க எத்தனித்தனர்.

அதனைத்தொடர்ந்து பொலிஸார் கூடி நின்ற மக்களை அங்கிருந்து வெளியேற்றி நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை சதொச விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மண்ணை பெற்றுக்கொண்ட மக்களை உடனடியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்யுமாறு விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர். ஏ.எஸ்.ராஜபக்ஷ மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

குறித்த வேண்டுகோளுக்கு அமைவாக விற்பனை நிலைய மண்ணை பெற்றுக் கொண்ட சின்னக்கடை உப்புக்குளம் பெரியகமம் மூர் வீதி ஆகிய கிராமங்களை சேர்ந்த நான்கு பேர் கிராம அலுவலர் ஊடாக வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்து குறித்த தனியாருக்கு சொந்தமான வீடுகளில் கொட்டப்பட்ட மண்ணை மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

குறித்த மண்களிலும் மனித எச்சங்கள் காணப்படலாம் என அஞ்சப்படுகின்றது. (2)

# வடக்கின் பாரிய சுகாதாரத்துறை அபிவிருத்திக்கான சர்வதேச ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்து



(குருமன்காடு)

வடக்கு மாகாணத்தின் முன்னாள் சுகாதார அமைச்சரின் முயற்சியினால் மத்திய சுகாதார அமைச்சின் அனுமதியுடன் மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் விசேட வைத்திய பிரிவுகளை அமைப்பதற்கான சர்வதேச ஒப்பந்தம் நேற்று முன்தினம் மத்திய சுகாதார அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

இது தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணத்திற்கான நீண்டகாலத் திட்டமொன்றை தயாரித்திருந்தோம். இதற்காக 7 உப குழுக்களை அமைத்து துறைசார்ந்த நிபுணர்களின் பங்களிப்புடன் நீண்டகால சுகாதார மேம்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இவ்வாறான திட்டமொன்றை தயாரித்த ஒரேயொரு மாகாண சுகாதார அமைச்சு எமது மாகாணமாகும்.

இதன் தொடர்ச்சியாக 2016 ஆம் ஆண்டில் மத்திய சுகாதார அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரட்னவின் அனுசரணையுடன் நெதர்லாந்து தூதுக் குழுவைச் சந்தித்து எமது நீண்டகால திட்டத்தை கையளித்திருந்தேன்.

அதன் தொடர்ச்சியாக தூதுக் குழுவினர் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் 2016 இல் விஜயம் செய்து கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். இந்த நிலையில் கொழும்பில் நெதர்லாந்து தூதுக்குழுவுக்கும் மத்திய சுகாதார அமைச்சுக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

60 மில்லியன் யூரோ நிதியில் (அண்ணளவாக 10,000 மில்லியன் இலங்கை ரூபா) வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சுகாதார சேவையை மேம்படுத்தும் நோக்கோடு கொண்டு வரப்பட்ட இத்திட்டம் எதிர்காலத்தில் உலகத்தர சுகாதார சேவை எமது மக்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன். (2-9-250)

# வயோதிபர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கல்

(மல்லாவி)

கனடாவில் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த திருமதி கந்தையா சோதிப்பிள்ளையின் 15 ஆவது நினைவு தினத்தையொட்டி அவரது மகள் பத்மராணி இராஜரட்ணம் வழங்கிய நிதி அனுசரணையுடன் ஜேர்மனியில் உள்ள தமிழர் கலாசார வட்டம் எனும் அமைப்பின் ஏற்பாட்டில், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராமங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற 70



வயதிற்கு மேற்பட்ட 7 வயோதிபர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் அண்மையில் ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. (2-15)

# 'தேசிய இந்து அறநெறி கொடி மாதமும் திருஞானசம்பந்தர் குருபூசைத்தினமும்'

## வவுனியாவில் அனுஷ்டிப்பு







(குருமன்காடு)

வவுனியாவில் தேசிய இந்து அறநெறி கொடி மாதமும் திருஞானசம்பந்தர் குருபூசை தினமும் அனுஷ்டிக்கப்பட்டது.

தேசிய இந்து அறநெறி கொடி மாதமும் அறிநெறி விழிப்புணர்வும் இந்து கலாசார திணைக்களத்தால் நாடு பூராகவும் மே மாதம் 30 தொடக்கம் ஜூன் மாதம் 31 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் இந்நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது திருஞானசம்பந்தரது திருவுருப் படத்திற்கு மாலை அணிவித்து குருபூசை தினம் கொண்டாடப்பட்டதுடன், அறநெறி கொடி கல்வி தொடர்பில் பாவற்குளம் கணேஸ்வரா வித்தியால ஆசிரியர் சு.வரதராஜன் கருத்துரை வழங்கியிருந்தார்.

கலந்து கொண்ட அனைவருக்கும் அறநெறி கொடிகள் அணிவிக்கப்பட்டதுடன் நிகழ்வு தொகுப்பினை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் சி.கஜேந்திரகுமார் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலக பிரதான கணக்காளர் பாலகுமாரன், உதவி மாவட்ட செயலாளர் கமலதாசன், கலாசார உத்தியோகத்தர் ஹேமமாலினி மற்றும் அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் மூலம் திரட்டப்படும் நிதி அறநெறி பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-25C)

# விசேட தேவைக்குட்பட்டோர், முதியோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும்

## பூநகரி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் விசேட தேவைக்குட்பட்டோர் மற்றும்முதியோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டுமென பூநகரிப்பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேசத்தின் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பிரதேசத்தின் தேவைப்பாடுகள் குறித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பூநகரிப் பிரதேசத்தில் 530 வரையான விசேட தேவைக் குட்பட்டோர் காணப்படுகின்ற போதும் தற்போது 129 பேருக்கு மட்டுமே மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேபோல 601 வரையான முதியவர்கள் காணப்படுகின்ற போதும் இதில் குறைந்தளவானோருக்கே கொடுப்பனவுகள்வழங்கப்படுகின்றன.

7ஆயிரத்து 561 வரையான குடும்பங்கள் வாழும் இப்பிரதேசத்தில் 1996 குடும்பங்களுக்கு மட்டுமே சமுர்த்திக்கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விசேட தேவைக்குட்பட்டோர மற்றும் முதியோர் கொடுப்பனவுகள் வழங்கவேண்டிய தேவைகள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (2-315)




# ஐம்பது கிலோமீற்றர் வீதிகளை புனரமைப்பதற்கு அங்கீகாரம்

## கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு சொந்தமான ஐம்பது கிலோமீற்றர் வீதிகளை ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருப்பதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளூராட்சி திணைக்களங்களுக்குச் சொந்தமான வீதிகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

இவ்வாறான வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

இதற்குப்பதிலளித்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கடந்த ஆண்டில் சமர்ப்பித்த திட்டம் ஒன்றிற்கு அமைவாக ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் எமது திணைக்கள வீதிகளைப் புனரமைப்பதற்கு கோரிக்கை அனுப்பியிருந்தோம்.

அதற்கமைவாக ஐம்பது கிலோமீற்றர் வீதிகள் கொங்கிறீட் வீதிகளாகப் புனரமைத்து தரப்படவுள்ளது.

இதில் பூநகரிப் பிரதேசத்தில் பதினைந்து தொடக்கம் இருபது வீதிகளைப் புனரமைக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)



முல்லைத்தீவு மாவட்டத்தில் வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஆலயத்தில் சிறப்பு உற்சவங்களாக எதிர்வரும் 24ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (படங்கள்:-பனிக்கன்குளம்)

# பூநகரி பிரதேச சபையின் உப அலுவலகம் கட்டட வசதியின்றி இயங்குகின்றது

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச சபையின் பூநகரி உப அலுவலகம் கட்டட வசதிகளின்றி பொதுநூலகத்தில் ஒரு பகுதியில் இயங்கி வருகின்றது.

இதற்கு தனியான அலுவலகம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேச சபைக் குட்பட்ட பல்லவராயன்கட்டு, இரணைதீவு, பூநகரி ஆகிய மூன்று உப அலுவலகங்களில் பூநகரிக்கான உப அலுவலகத்தின் கட்டடம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் குறித்த உப அலுவலகமானது தற்போது பிரதேச சபை நூலகத்தில் இயங்கி வருகின்றது.

இதனால் பல்வேறு நெருக்கடி நிலை காணப்படுவதாகவும் இதற்குத் தனியான ஒரு அலுவலகத்தை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் பல்வேறு தரப்புக்களும் கோரியுள்ளன.

இதேவேளை குறித்த கோரிக்கை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாலும் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கான தீர்மானம் ஒன்றை சபை அமர்வில் எடுத்து உரிய திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# கருத்தமர்வை தவற விட்டோருக்கான இறுதிச் சந்தர்ப்பம் இன்றாகும்

## நேர்முகத் தேர்வுகள் 16 ஆம் திகதி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துடன் பெரண்டினா நிறுவனம் இணைந்து நடத்தும் முல்லை விடியல்-3 தொழில் மற்றும் உயர் கல்விச் சந்தைக்கான வழிகாட்டல் கருத்தமர்வு நேற்று முன்தினம் கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்திலும் வெலிஓயா பிரதேச செயலகத்திலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட இளைஞர்,யுவதிகளுக்கு தொழில் சந்தையில் காணப்படும் தொழில் மற்றும் உயர் கல்விவாய்ப்புகள், அதற்கு அவர்களை தயார்படுத்திக் கொள்ளும் விதம் தொடர்பான தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வளவாளர்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கைத்தொழிற்றுறை திணைக்கள மாவட்ட அலுவலர் செ.சன்ஜீவன், பெரண்டினா தொழில் வளநிலையத்தின் மாவட்ட முகாமையாளர் கு.தினேஸ்சந்ரு ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளத் தவறியோருக்கான செயலமர்வு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொழில் வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்தில் ஆரம்பமாகும். (2-281)

# ஆங்கிலேயர் ஆட்சியில் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயமும் சட்டவாக்கச் சபைகளில் தமிழர்களின் பிரதிநிதித்துவமும்



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு



அருணாசலம் மகாதேவா



சுப்பிரமணியம் இராசரத்தினம்



ஹென்றி அலெக்சான்றா பற்றிக் சந்திரசாகர

இவர்களைவிட வேறு சில தமிழர்களும் குறுகிய கால வெற்றிடங்களுக்கு பதவிநிலைபெறா அங்கத்தவர்களாக நியமனம் பெற்றிருந்தார்கள்.

4 வீதத்தினர் மட்டுமே தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர்.

இவ்வாறு தேர்தல்முறை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டபோதும் இலங்கைச் சனத் தொகையின் 4% (கிட்டத்தட்ட 205,000 மக்கள்) மட்டுமே தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இலங்கை அரச சபை (State Council of Ceylon) 1931-1947**



இலங்கை அரச சபைக் கட்டடம்

கொழும்பு காலிமுகத்திலில் உள்ள இலங்கை அரச சபைக் கட்டடம் சுதந்திரத்திற்குப் பின் 1982 வரை இலங்கைப் பாராளுமன்றமாகப் பாவிக்கப்பட்டு தற்போது ஜனாதிபதி செயலகமாகப் பாவிக்கப்படுகின்றது.

**டொனமூர் அரசியலமைப்பு**

டொனமூர் அரசியலமைப்பு என்பது பிரித்தானிய இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாவது அரசியலமைப்பாகும். 1924 முதல் அமுலில் இருந்த மனிங்-டெவொன்சயர் ஆணைக்குழுவின் அரசியலமைப்பு, டொனமூர் ஆணைக்குழு மூலம் திருத்தியமைக்கப்பட்டு இவ் அரசியலமைப்பு உருவானது.

1924ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளை உணர்ந்த ஆளுநர் ஹியுகிளிபேட்டின் சிபாரிசுக்கமையவும், தேசிய காங்கிரஸ் மற்றும் தேசியத் தலைவர்களின் கோரிக்கையை அடுத்தும் 1927ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டொனமூர் குழுவினர் இலங்கைக்கு வந்தனர்.

21 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண்,பெண்களுக்கும் சர்வஜன வாக்குரிமை:- டொனமூர் விதந்துரைப்புகளில் முக்கிய விடயங்கள்:- 21 வயதுக்கு மேற்பட்ட சகல ஆண்,பெண்களுக்கும் சர்வஜன வாக்குரிமை வழங்கியமை. இலங்கைச் சட்டவாக்கச்சபைக்குப் பதிலாக இலங்கை அரச சபை அமைத்தமை. சுதேச மக்களுக்கு நிர்வாகத்தில் ஈடுபட நிர்வாகக் குழு முறையை ஏற்படுத்தியமை. உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புகளை வழங்கியமை,

**இலங்கை அரச சபையின் கட்டமைப்பு**

மொத்த உறுப்பிர்கள் 61, சர்வஜன வாக்குரிமை மூலம் 50 உறுப்பினர் தெரிவுசெய்யப்பட்டனர். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத சிறுபான்மையோரின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 8 பேர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இதைவிட பதவிநிலை பெற்ற 3 பேர் - பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டத்துறை நாயகம் ஆகியோர் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இம் மூன்றுபேருக்கும் வாக்களிக்கும் உரிமையிருக்கவில்லை.

இலங்கை அரச சபை சட்டங்களை ஆக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. இச் சட்டங்களை அமுல்படுத்த ஆளுநரின் அங்கீகாரம் அவசியம். உள்நாட்டு நிர்வாகப் பொறுப்புகள் உள்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டமை இங்கு முக்கிய அம்சமாகும்.

**டொனமூர் அரசியலமைப்பின்படி தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம்**

75,000 இற்கு குறையாத 100,000 -125,000 இடைப்பட்ட மக்கள் தொகைக்கு ஒரு ஆசனம் எனும் அடிப்படையில் எல்லா (50) ஆசனங்களும் ஆட்புல/ பிரதேச ரீதியில் எல்லை நிர்ணயம் செய்வதற்கு 1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ரொபட் வில்லியம் லயனல் க்ராண்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இறுதியாக நடத்தப்பட்ட 1921 ஆம் ஆண்டின் சனத்தொகை கணக்கெடுப்புக்கமைய (கிட்டத்தட்ட 4.5 மில்லியன் மக்கள்) நடவடிக்கையெடுப்பதென எல்லை நிர்ணய ஆணைக்குழு தீர்மானித்ததோடு 90,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆசனம் எனும் அடிப்படையில் 50 ஆசனங்களும் ஆட்புல /பிரதேச ரீதியில் எல்லை நிர்ணயம் செய்தது. மாகாணங்களின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டே ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்பதே மக்களின் வேண்டுகோளாகவிருந்தது.


50ஆவது ஆசனம் கணித முறையில் கூடுதலான (0.47) மீதியைக் கொண்ட வடமேல் மாகாணத்திற்கு ஒதுக்கப்படிருக்க வேண்டும்.

**ஒவ்வொரு மாகாணத்திற்கும் எத்தனை ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன என்பதை கீழ் உள்ள அட்டவணை காட்டுகின்றது.**

| மாகாணம் | சனத்தொகை | சனத்தொகை அடிப்படையில் பிரதிநிதிகள் | சனத்தொகை அடிப்படையில் பிரதிநிதிகள் (முழுத்தானம்) | மேலதிக பிரதிநிதி | ஒதுக்கப்பட்ட பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|---|
| மேல் | 1246847 | 13.85 | 14 | | 14 |
| மத்திய | 717789 | 7.98 | 8 | | 8 |
| தென் | 671234 | 7.46 | 7 | | 7 |
| வட | 374829 | 4.16 | 4 | 1 | 5 |
| கிழக்கு | 192821 | 2.14 | 2 | | 2 |
| வடமேல் | 492181 | 5.47 | 5 | | 5 |
| வட மத்திய | 96525 | 1.07 | 1 | | 1 |
| ஊவா | 233864 | 2.60 | 3 | | 3 |
| சப்ரகமுவ | 471814 | 5.24 | 5 | | 5 |
| | | மொத்தம் | 49 | | 50 |

ஆனால் வன்னி மாவட்டம் சனத்தொகை குறைந்த பின் தங்கிய மாவட்டமாக இருந்ததால் அது வட மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டதாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை 1930மேமாதம் வெளியிடப்பட்டது (1930ஆம் ஆண்டின் SP XI அமர்வறிக்கை).

**எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட 50 தேர்தல் தொகுதிகளையும் கீழே உள்ள படம் காட்டுகின்றது.**




எல்லை நிர்ணய ஆணைக்குழு பொதுமக்களிடமிருந்து வாய்மொழி/எழுத்து மூல விடய முன்வைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு கண்டி, காலி, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், சிலாபம், அநுராதபுரம், பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழர்கள் வட மாகாணத்திற்கு 7 ஆசனங்கள் ஒதுக்கப்படவேண்டுமென்று எல்லை நிர்ணய ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்தபோதும் அது எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

எல்லை நிர்ணயம் செய்வதற்கு மாகாணத்தின் பரப்பளவை கணக்கிலெடுக்காமல் சனத்தொகை விகிதாசாரத்தை மட்டும் கருத்தில் எடுத்தமை

ரொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழு தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வதற்கு மாகாணத்தின் பரப்பளவை கணக்கிலெடுக்காமல் சனத்தொகை விகிதாசாரத்தை மட்டும் கருத்தில் எடுத்தது ஒரு குறைபாடாகச் சொல்லப்படுகிறது. உதாரணமாக இலங்கைப் பரப்பளவின் 5.6% ஐக் கொண்ட மேல் மாகாணத்திற்கு 28% மான ஆசனங்களும் இலங்கைப் பரப்பளவின் 15.9% ஐக் கொண்ட வட மத்திய மாகாணத்திற்கு 2% மான (ஒரு ஆசனம் மட்டும்) ஆசனங்கள் மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தமை கவனிக்கதக்கதாகும்.

**தமிழ்ப் பிரதிநிதித்துவ விகித வீழ்ச்சி**

மேலும் இவ்வெல்லை நிர்ணயத்தின் படி இதுவரையில் தமிழர்- சிங்களவருக்கிடையே இருந்த பிரதிநிதித்துவ விகிதம் 1:2 இலிருந்து 1:5 ஆக மாறியது. இது தமிழர்களுக்கு அரசியலில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியது.

மேல் படத்தில் காட்டியவாறு வடமாகாணத்திற்கு கிடைத்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 5 ஆகும். இத் தேர்தல் தொகுதிகளின் பெயர்கள்- ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மன்னார்-முல்லைத்தீவு ஆகும்.

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதிக்குள் நெடுந்தீவுப்பிரிவு, தீவுப்பிரிவு மற்றும் வலிகாமம் மேற்குப் பிரிவு உள்ளடங்கின.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதிக்குள் வலிகாமம் கிழக்கு மற்றும் வலிகாமம் வடக்குப் பிரிவுகள் உள்ளடங்கின.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்குள் யாழ்ப்பாணப் பிரிவு மற்றும் தென்மராட்சி பிரிவு உள்ளடங்கின.

பருத்தித்துறை தேர்தல் தொகுதிக்குள் வடமராட்சி மேற்குப் பிரிவு, வடமராட்சி கிழக்குப் பிரிவு, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி மற்றும் துணுக்காய் உள்ளடங்கின.

மன்னார்-முல்லைத்தீவு தேர்தல் தொகுதிக்குள் வவுனியா உட்பட மன்னார் பிரிவு மற்றும் முல்லைத்தீவு பிரிவு உள்ளடங்கின.

கிழக்கு மாகாணத்திற்கு கிடைத்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 2 ஆகும். இத் தேர்தல் தொகுதிகளின் பெயர்கள்- மட்டக்களப்பு தெற்கு மற்றும் திருகோணமலை-மட்டக்களப்பு ஆகும்.

மட்டக்களப்பு தெற்கு தேர்தல்தொகுதிக்குள் பாணவ பற்று, அக்கரைப்பற்று, நிந்தவூரும் கரைவாகுப் பற்றும், சம்மாந்துறைப் பற்று, எருவில்-போரதீவுப் பற்று, மண்முனை பற்று தெற்கு, வேவ்கம்பற்று, மண்முனைப் பற்று வடக்கு (பகுதி), மண்முனைப்பற்று கிழக்கு மற்றும் உடையார் பற்று உள்ளடங்கின.

திருகோணமலை-மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்குள் பிந்தென்ன பற்று, மண்முனைப்பற்று வடக்கு (பகுதி), ஏறாவூர் பற்று, கோறளைப் பற்று, மட்டக்களப்பு உள்ளூர்ச் சபை மற்றும் திருகோணமலை மாவட்டம் உள்ளடங்கின.

(தொடரும்...)

# கலைத்தரிசனம்



# தபேலா விற்பன்னர் பிள்ளை வரதன் அவர்களுடனான சந்திப்பு



"தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வு நிலை முகாமையாளரும் நாடகம், தோல் வாத்தியம், ஆர்மோனியம், கீபோட் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க ஒருவராகத் திகழும் இவர் 1954 ஆம் ஆண்டு பங்குனி மாதம் நான்காம் திகதி காங்கேசன் துறையில் கலைக்குடும்பத்தில் பிறந்தார்.

இவருடைய தந்தையார் பிள்ளைநாயகம் அவர்கள் மிரு தங்க வித்துவானாகவும் சிறந்த கலைஞராகவும் திகழ்ந்தார். நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களுடன் இணைந்து பல நாடகங்களில் பாத்திர மேற்று நடித்து ஆயிரத்திற்கு மேற்பட்ட மேடைகளில் தன் நடிப்புத் திறத்தை வெளிப்படுத்தினார். 1990, 1991 ஆம் ஆண்டு காலப் பகுதியில் திருமறைக் கலாமன்றம் மேடையேற்றிய இசை மாலை, உயிர்ப்பு விழா பாடல்கள், திருப்பாடுகளின் நாடகங்கள் போன்ற பலவற்றுக்கும் இசை வழங்கினார். தபேலா இசைக் கலையில் மிகவும் ஆற்றல் மிக்கவராகிய இவர் இசைத் துறைக்கு அளித்த பங்களிப்பு மகத்தா னது. நூற்றிற்கு மேற்பட்ட எழுச்சிப் பாடல்களுக்கு ஒலிநாடாவிலும் இறுவெட்டிலும் அற்புதமாக தபேலா வாசித்துள்ளார். இவரின் கலைப் பணிக்காக தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் இரண்டு தடவைகள் பரிசுகளைப் பெற்றார். 2015 இல் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினால் கலைச்சிகரம் விருதையும் பெற்றார். இலக்கம் 60, கனகரத்தினம் வீதி, அரியாலையை முகவரியாகக் கொண்ட புகழ்பூத்த கலைஞர் பிள்ளை.வரதன் அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது."

***தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வு நிலை முகாமையாளரான நீங்கள், நாடகம், தோல் வாத்தியம், ஆர்மோனியம், கீபோட் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க கலைஞர்களுள் ஒருவராக இருக்கின்றீர்கள். தங்கள் கலை வாழ்வின் ஆரம்பம் பற்றிக் கூறுங்கள்?**

நான் ஒரு கலைக் குடும்பத்தில் பிறந்தவன். எனது தந்தை பிள்ளைநாயகம் ஒரு முதுபெரும் கலைஞர். இவரது தந்தை அண்ணாவி வயிரவியும் ஒரு கலைஞர். அக்காலங்களில் நாட்டுக் கூத்துக்கலைகளையும் பொம்மலாட்டக் கலைகளையும் தமது உறவினர்கள், நண்பர்களைச் சேர்த்து வளர்த்தவர்கள். எனது தந்தை மிருதங்கக் கலையின் நுணுக்கங்களை அறிவதற்காக இந்தியாவிற்குச் சென்று பயின்றார். கர்நாடக சங்கீத இசையிலும் தேர்ச்சி பெற்றவர். சங்கீதத்தைக் கற்பித்தலும் இசைக்கருவிகளை மீட்டுக் கற்பித்தலும் இக் கருவிகளை உருவாக்குவதும் திருத்த வேலைகளைச் செய்வதும்இவரது தொழிலாகும்.

மிருதங்கம் உருவாக்குதல், திருத்தம் செய்தல் என்பதில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர். மிருதங்கத்திற்கு சாதம் போடுவதற்கு கிட்டான் இடித்தல் என்னும் கஷ்டமான வேலை உண்டு. நானும் எனது தந்தையாருக்கு உதவி செய்துள்ளேன். இவ் வேலையின் போது எனது அண்ணர் கலாபூஷணம் திருநாவுக்கரசுவும் உதவி வழங்கியவர். மிருதங்கத்திற்கு தேவையான "வார்" இழுத்துக் கட்டுதல் இதற்கும் நாம் இருவரும் தந்தையுடன் சேர்ந்து செய்துள்ளோம். எனது பிறப்பிடமான காங்கேசன் துறையில், துறைமுகத்திற்கு வெளிநாடுகளிலிருந்து கப்பல் மூலமாக வரும் பிறமொழி மனிதர்கள் பிரதான வீதியில் அமைந்துள்ள கலாவனம் என்னும் எமது இல்லத்திற்கு வருவார்கள். இல்லத்தில் இருக்கும் இசைக் கருவிகளை மீட்டுப்பார்ப்பார்கள். நானும் தந்தையாரும் அவர்களுக்கு இசைப் பயிற்சி கொடுத்தும் இருக்கிறோம். சமூகத்தில் நாம் காணுகின்ற மனிதர்கள் வெவ்வேறு பாத்திரக் குணாதிசயங்களைக் கொண்டிருப்பார்கள். அந்தப் பாத்திரங்களை நாடகத்தில் போலச் செய்தோம்.

***கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்துவுடன் இணைந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட மேடைகளில் நடித்துள்ளதாக அறிகின்றோம். தாங்கள் நடித்த நாடகங்கள் பற்றி?**

அரிச்சந்திரா நாடகத்தில் நட்சத்திரகராகவும் அயல் பிள்ளையாகவும் லோகிதாஸனாகவும் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சுமாலியாகவும் வள்ளி திருமணத்தில் குட்டி அண்ணாவாகவும் பூதத்தம்பி நாடகத்தில் தூதுவராகவும் ஞானசௌந்தரி நாடகத்தில் சேவகனாகவும் ஏழு பிள்ளை நல்ல தங்காள் நாடகத்தில் ஒரு பிள்ளையாகவும், பக்த நந்தனார் நாடகத்தில் புலையன் பாத்திரம் இன்னும் பல நாடகங்களிலும் நடித்துள்ளேன். ஆயிரத்திற்கு மேற்பட்ட அரங்குகளில் நடித்துள்ளேன்.

***கலாநிதி. நடிகமணி வி.வி.வைரமுத்துவின் "வசந்தகான சபா"வில் நீங்கள் நடிக்கத் தொடங்கிய பின்பு அங்கு உங்கள் வளர்ச்சி எவ்வாறு இருந்தது?**

வசந்தகான சபா நாடகங்கள் இலங்கையின் பட்டி தொட்டி எல்லா இடங்களிலும் நடைபெற்றன. கலாநிதி. நடிகமணி வைரமுத்துவுடன் நடித்தது எனக்குப் பெருமை. மைத்துனராக அதாவது எனது தந்தையின் மருமகனாகப் பிறந்து என்னைக் கலை உலகத்தில் மிளிரச் செய்த ஒரு மகான் நடிகமணி. இலங்கையின் பல பாகங்களையும் பார்க்கக்கூடிய வகையில் இந்தக் கலை உதவியது. நடிகமணி நடிகராக, பாடகராக, இசைக் கருவிகளை இசைக்கும் திறமை உள்ளவராக இருந்தமையினால் அவரால் நெறியாள்கை செய்யப்பட்ட நாடகங்களில் நடிப்பது எனக்கு இலகுவாக அமைந்தது. கர்நாடக சங்கீதத்தில் வல்லுநராக இருந்துள்ளார். அதனால் பாடும் பாடல்கள் சக நடிகர்களுக்கு ஒத்தாசையாக அமைந்தது. நாடகங்களை அடிக்கடி ஒத்திகை பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. வசந்தகான சபாவின் கலைஞர்கள் அனைவரும் ஒரு குடும்பமாகவே பழகினோம். இன்றும் அந்த பசுமையான நினைவுகள் என்னை விட்டுப் போகவில்லை. போகவும் மாட்டாது. நடிகமணியுடன் விடிய விடிய நாடகங்கள் நடித்துள்ளேன். வசந்தகான சபாவின் அரிச்சந்திர மயான காண்டத்தில் முதல் லோகிதாஸன் பாத்திரம் ஏற்று நடித்தவர் எனது அண்ணர் கலாபூஷணம் திருநாவுக்கரசு. மைத்துனர்களான நடிகமணி வி.வி.வைரமுத்துவுக்கும் மிருதங்க வித்துவான் வி.வி.காசிநாதனுக்கும் கலைக் குருவாக எனது தந்தையார் விளங்கியுள்ளார். வசந்தகான சபாவின் நாடகங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னிப் பெருநிலப்பரப்பு, தென்னிலங்கை, மலையகம் என எல்லா இடங்களிலும் மேடையேறின. இவ் இடங்களில் மட்டுமல்லாது இலங்கை ரூபவாகினி வானொலி நிகழ்ச்சிகளிலும் நடிகமணியுடன் பங்கேற்றுள்ளேன். அவருடன் இணைந்து நடித்தமையில் கலையுலகில் இன்றும் பெயர் சொல்லக்கூடிய கலைஞர்களில் ஒருவராகத் திகழ வைத்தது.

***தாங்கள் ஆயிரத்திற்கு மேற்பட்ட அரங்குகளில் சிறப்பான முறையில் நடித்ததற்கான சான்றுகளைப் பார்த்திருக்கின்றோம். அந்த வகையில் கலையுலகில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மறக்க முடியாத ஒரு அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?**

பூதத்தம்பி நாடகத்தில் வில்லன் அந் திராசியாக நடிக்கும் நடிகமணிக்கு இரும்புச் சங்கிலியால் அடிக்கும் பாத்திரம் எனக்கு உண்டு. தயக்கமாக இருந்தாலும் நடிக்க வேண்டிய கடமை. இப்பாத்திரத்தை ஏற்றுச் செய்தேன். இது மறக்கமுடியாத அனுபவங்களில் ஒன்று.

***நாங்கள் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளராகவும் கடமை யாற்றியுள்ளீர்கள். அக்காலத்தில் இப் பணியுடன் எப்படித் தொடர்ந்து கலையுலகில் ஈடுபட முடிந்தது?**

தேசிய சேமிப்பு வங்கியில் பணியாற்றிய காலம் ஒன்று, கலை மேடைகளில் தோன்றிய காலம் இன்னொன்று. உத்தியோகம் கிடைக்கும் வரையிலும் நாடகங்களில் இடைவிடாது நடித்து வந்தேன். எனது அண்ணர் கலாபூஷணம் திருநாவுக்கரசு சிறந்த மிருதங்க வித்துவான். மலையகத்தில் பல மாணவர்களை உருவாக்கியதுடன் கலைச் சேவையைத் தொடர்ந்து ஆற்றி வருகிறார். கலைச் சேவையுடன் கல்விச் சேவையும் மாணவர்களுக்குச் செய்கிறார். என்னை எனக்கு அடையாளப்படுத்தியதுடன் இன்றும் ஓர் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் என்ற உத்தியோகப்புருஷ இலட்சணம் என்னும் சிறப்பைத் தந்தவர். பின்னர் இசைத் துறையில் கூடிய பங்காற்றியுள்ளேன். குறிப்பாக ராஜன் இசைக்குழுவில் தபேலா, மிருதங்கம் முதலிய வாத்தியங்களை இசைத்தேன். சாரங்கா இசைக்குழுவை ஆரம்பித்து அதிலும் பங்காற்றினேன். இவற்றோடு எஸ்.ஜீ.சாந்தன் இசைக்குழுவிலும் கண்ணன் மாஸ்டர் இசைக் குழுவிலும் வாசித்துள்ளேன். எனக்குச் சிரமமாகத் தெரியவில்லை. ஏனெனில் கலை எனது இரத்தத்தில் ஊறியது. அதனால் இக்கலை தடை இல்லாமல் நகர்ந்து கொண்டு சென்றது.

***தாங்கள் நூற்றிற்கும் மேற்பட்ட எழுச்சிப் பாடல்களுக்கு ஒலி நாடாவிலும் இறுவெட்டிலும் அற்புதமாக தபேலா வாசித்துள்ளீர்கள். அந்தப் பாடல்கள் யாவும் மனதை விட்டு நீங்காத பாடல்களாகவும் உள்ளன. அந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

பொதுவாக எழுச்சிப் பாடல்கள் யாவும் மனதைவிட்டு நீங்காத பாடல்கள். நான் நூற்றிற்கு மேற்பட்ட எழுச்சிப் பாடல்களுக்கு தபேலா வாசித்தது எனக்குக் கிடைத்த பாக்கியம். நான் ஒலி நாடாவிலும் இறுவெட்டிலும் வாசித்த சில பாடல்களைக் குறிப்பிடுகின்றேன்.

"தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே", "ஏறுது பார்க்கொடி", "இந்த மண் எங்களின் சொந்தமண்", "ஆழக்கடல் எங்கும் சோழ மகாராஜன்", "கடலினிலே காவியம் படைப்போம்", "பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது", "வாழ்த்துக்கள் தெய்வங்களே", "கடலலையே கொஞ்சம் நில்லு", "கடலம்மா கடலம்மா", "சாவினில் தோளேந்தி", "பாதைகள் தவறாது", "கடலலை நாங்கள் வெல்லுவோம்", "செஞ்சோலையிலே பாடுவோம்", "வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்", "பாரினில் தமிழன் படும் பாட்டை", "கரும் புலிகள் என நாங்கள்", "வருக எங்கள் மக்களே", "மாதவம் செய் தது கண்ணடா", "கங்கை நதியோரம்", "மாவீரர் புகழ் பாடுவோம்", "ஓ மரணித்த வீரனே", "மாவீரர் யாரோ என்றால்", "சிறகு முளைத்த பறவை", "பாரடா எண்ணிப்பா ரடா", "என் சனமே என் சனமே", "குயிலே பாடு காலை விடிந்த தென்று" இப் பாடல்களுக்கான இசையமைப்பினை இசைவாணர் கண்ணன் மாஸ்டர், அவரின் புதல்வர் இசையமைப்பாளர் முரளி, இசையமைப்பாளர், சட்டத்தரணி யாழ்.ரமணன் ஆகியோர் வழங்கியிருந்தார்கள். "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே" என்ற பாடல் மாவீரர் நாளன்று துயிலும் இல்லத் தில் மாத்திரம் ஒலிபரப்பப்படுகிறது. அந்தப் பாடலிற்கான இசையை இசைவாணர் கண்ணன் மாஸ்டர் அற்புதமாக அமைத்திருக்கின்றார். அந்தப் பாடலில் வரும் முதலாவது சரணம்.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே!- இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி
கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர், உங்களின்
தோழிகள்
உறவினர் வந்துள்ளோம்-- அன்று
செங்களம் மீதியே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.
எங்கே! எங்கே! ஒரு தரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

இவ்வாறு அமைகிறது. இந்த வரிகளும் தபேலா வாசிப்பும் என்னையறியாமலேயே இதயத்தைக் கனக்க வைத்து விடுகின்றது.

***தபேலா விற்பன்னரான தாங்கள் வலம்புரி ஊடாக கலையுலகிற்கு மனந்திறந்து கூறுவது?**

கலை என்பது தெய்வீகமானது. கலைக்கு நிகர் கலைஞன், பண்பாட்டுக் கலைகளால் மனிதன் பக்குவம் அடைந்து வளம் பெற்று நிம்மதி அடைகிறான். இந்த நிம்மதி சமூகமாகி, நாடாகி, உலகமாகி மகிழ்ச்சிக் கடலில் நீந்தும். இளம் தலைமுறையினர் நாடகம், நடனம், இசை, ஓவியம், சிற்பம் முதலிய கலைகளில் தம்மை ஈடுபடுத்த வேண்டும். பாடசாலை, பல்கலைக்கழகங்களில் மட்டுமல்லாது உறவினர், நண்பர்கள் என்று இணைந்து கலைகளை வளர்க்க வேண்டும். கலைகளால் கிடைக்கும் பயன்கள் அளவற்றது. மனித வாழ்விற்குக் கலை சாந்தியையும் சமாதானத்தையும் கொடுக்கும். பாரம்பரியக் கலைகள் வன்முறையை இல்லாது அழிக்கும். ஆத்மீகத்தை, அன்பைப் போதிக்கும். இன்றைய காலகட்டத்தில் இக் கலைகள் மிகவும் அவசியமாகின்றது.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# பாரதம்

# தமிழக மக்கள் மனங்களில் எந்த கட்சிக்கும் இடமில்லை

## புரிந்து கொண்ட ஜெயக்குமார்

(சென்னை)

தாமரை, சூரியன், மய்யம் எதற்கும் தமிழக மக்கள் மனங்களில் இடமில்லை என தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை கே.வி.கே குப்பத்தில் மீனவ கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறிய அமைச்சர் ஜெயக்குமார் அதன்பின்னர் செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது, அ.தி.மு.க. விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளமை தொடர்பாக கருத்துரைத்த அமைச்சர், "அ.தி.மு.க.வை விமர்சனம் செய்பவர்கள் இந்த உலகத்தை உணர்ந்தவர்களாக இல்லை என்றுதான் கூற வேண்டும்.

மக்களுடன் மக்களாக இருந்தால் அவர்கள் எப்போதும் அ.தி.மு.கவை ஏற்றுக்கொள்வார்கள். 27 வருடங்களுக்குமேலாக அ.தி.மு.க. தமிழகத்தை ஆட்சி செய்கிறது. வருங்காலத்திலும் அ.தி.மு.கவே ஆட்சிசெய்யும். தாமரை, சூரியன், மய்யம் எதற்கும் தமிழக மக்கள் மனங்களில் இடமில்லை" என்று தெரிவித்துள்ளார். (7)

## ட்ரம்பின் அழைப்பை ஏற்று அமெ.செல்ல கிம்ஜாங் திட்டம்



(பியாங்யாங்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அழைப்பை ஏற்று அமெரிக்கா செல்ல வடகொரியா ஜனாதிபதி கிம் யாங் உன் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன் -அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் சிங்கப்பூரில் நடைபெற்றது. சிங்கப்பூர் சென்டோசா தீவிலுள்ள கேபெல்லா ஹோட்டலில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, அமெரிக்கா - வடகொரியா இடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனை இந்தியா உட்பட பெரும்பாலான உலக நாடுகள் வரவேற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. (7)

## சசிகலா, தினகரனின் வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

அ.தி.மு.கவில் வகித்து வந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து சசிகலா மற்றும் டி.டி.வி.தினகரன் ஆகியோர் தாக்கல் செய்த வழக்கு விசாரணையை சென்னை உயர்நீதிமன்றம் அடுத்த மாதம் 19ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

சசிகலா மற்றும் தினகரன் தரப்பினர் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவின் பின்னர், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் தனித்தனி அணியாக செயற்பட்டனர். அதன்பின்பு, இரு தரப்பினரும் ஒன்றிணைந்து கடந்த வருடம் செப்டெம்பர் 12ஆம் திகதி பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, அ.தி.மு.க.வின் தற்காலிக பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட சசிகலா மற்றும் துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட டி.டி.வி.தினகரன் ஆகியோரை கட்சியில் இருந்து நீக்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் பொதுச்செயலாளர் என்ற பதவியும் நீக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே சசிகலா மற்றும் தினகரன் தரப்பினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை ஏற்கனவே செயற்பட்டு வந்த புரட்சித் தலைவி அம்மா அணி, அம்மா அணி என்ற அணிகள் தற்போது இல்லாத காரணத்தினால் தங்களது மனுவில் திருத்தம் செய்து மீண்டும் தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்க வேண்டும் என்று சசிகலா மற்றும் தினகரன் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 19 ஆம் ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அ.தி.மு.க.வின் திருத்தங்கள் மற்றும் உறுப்பினர் நியமனங்களுக்கு கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் தேர்தல் ஆணையகம் ஒப்புதல் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)


# பெருநாட்டில் 550 ஆண்டுகளுக்கு முன்னர் 'கடவுள் நம்பிக்கை' என்ற பெயரில் நரபலி

## 56 குழந்தைகளின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

(லிமா)

பெரு நாட்டின் திருஜிலோ என்ற நகரில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பலி கொடுக்கப்பட்ட 56 குழந்தைகளின் எலும்புக்கூடுகளை கண்டறிந்துள்ளனர்.





தென் அமெரிக்க நாடான பெரு நாட்டில், கடந்த ஏப்ரல் மாதம் தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் 140 குழந்தைகள் நரபலி கொடுக்கப்பட்டதையும், அவர்களது உடல்கள் புதைக்கப்பட்டு இருந்ததையும் கண்டுபிடித்தனர்.

பெரு நாட்டின் வட பகுதியில் அமைந்து உள்ள கடலோரப் பகுதியில் இந்த குழந்தைகளின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. நரபலி கொடுக்கப்பட்ட குழந்தைகள், 5-14 வயதுக்கு இடைப்பட்டவர்கள். இவர்கள் 550 ஆண்டுகளுக்கு முன்பு நரபலி கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

முற்கால சிமு பேரரசு காலத்தில் இந்த சம்பவம் நடந்து இருக்க வேண்டும் என்றும் தகவல்கள் கூறுகின்றன. ஒரே நேரத்தில் இத்தனை பேர் நரபலி கொடுக்கப்பட்டு இருப்பது வரலாற்றில் இதுவே முதல் முறையாக இருக்கும் என கூறப்பட்டது.

இந்நிலையில், அந்த இடத்திற்கு அருகில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் மேலும் 56 குழந்தைகள் மட்டுமன்றி 200 ஒட்டக இன மிருகங்கள் பலி கொடுக்கபட்டு புதைக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது. அந்த சமயத்தில், அந்த பகுதியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளபெருக்கால், அந்த ஊரே அழியும் நிலை ஏற்பட்டது. இதனால் வெள்ளப்பெருக்கை தடுக்க கடவுள் நம்பிக்கை என்ற பெயரில், குழந்தைகள் பலி கொடுக்கப்பட்டு கடல் இருக்கும் திசை அருகில் மண்ணில் புதைக்கப்பட்டுள்ளனர். அதோடு 200 ஒட்டக இன மிருகங்களும் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. கொல்லப்பட்ட குழந்தைகளின் வயது 6இல் இருந்து 14 வரை இருக்கும் என தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (7)

# உ.பியில்

## 17 பேர்



(சென்னை)

இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் தனியார் பேருந்து வீதித் தடுப்பில் மோதி இடம்பெற்ற விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலம் மெயின்புரி அருகே நேற்று புதன்கிழமை காலை வேகமாக பயணித்துக் கொண்டிருந்த போது பேருந்து சாரதி

## சிரியாவில் பத்துப்பேர்

(பெய்ரூட்)

சிரியாவின் வடகிழக்கு பகுதியில் அரசு படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் 10 அப்பாவி பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிரியாவில் பல்வேறு கிளர்ச்சியாளர்களுக்கும், அரசு படைகளுக்கும் இடையே கடந்த 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. அங்குள்ள இட்லிப் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசம் வைத்துள்ளனர்.

இந்நிலையில், சிரியாவின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஹசாகே மாகாணத்தில் அமெரிக்கா

## பங்களாதே
## நிலச்சரிவு; 1



(டாக்கா)

பங்களாதேஷத்தில் பலத்த மழை, நிலச்சரிவால் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பங்களாதேஷத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வரு கிறது. இந்த மழையால் மியன்மார் எல்லையில் உள்ள காக்ஸ் பஜார், ரங்கமாதி மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியு

# வெளிநாடு

## ல் கோர விபத்து!
## ர் உயிரிழப்பு



யின் கட்டுப்பாட்டை இழந்து வீதித் தடுப்பில் மோதியதன் காரணமாகவே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்து காரணமாக பேருந்தில் சிக்குண்டிருந்த பயணிகளை மீட்கும் பணிகளில் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டனர்.

இதேவேளை விபத்தில் 17 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 25 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## வீட்டுக்குத் திரும்பும் முன்னரே ஒப்பந்தத்தை ட்ரம்ப் ரத்து செய்வார்
### வடகொரியாவுக்கு ஈரான் அறிவுரை

(டெஹ்ரான்)

சிங்கப்பூரில் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கிம் ஜாங் உன் இடையே நேற்று முன்தினம் கையெழுத்தான அணு ஆயுத ஒழிப்பு தொடர்பான ஒப்பந்தம் தொடர்பாக ஈரான் கருத்து தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் அணு ஆயுத ஒழிப்பு தொடர்பான வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் நேற்று முன்தினம் கையொப்பமிட்டனர்.

பின்னர், செய்தியாளர்களிடையே பேசிய டொனால்ட் ட்ரம்ப், இன்றைய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது போல், அதில் உள்ள அம்சங்களின் படி கிம் ஜாங் உன் வாழ்ந்து காட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில், இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஈரான் அரசின் செய்தித் தொடர்பாளர் முகமது பாகேர் நோபாக்ட், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் குணாதிசயம் பற்றி எங்களுக்கு தெரியாது. இருப்பினும், அமெரிக்கா மற்றும் வடகொரியா இடையே நேற்று முன்தினம் கையெழுத்தான அணு ஆயுத ஒழிப்பு தொடர்பான ஒப்பந்தம் அவர் நாடு திரும்பும் முன்னரே ரத்து செய்யப்பட்டாலும் செய்யப்படலாம் என தெரிவித்தார்.



மேலும், டொனால்ட் ட்ரம்பை கிம் ஜாங் உன் நம்பக்கூடாது. ஈரானுடன் அமெரிக்கா செய்து கொண்ட அணு ஒப்பந்தத்தை, ட்ரம்ப் வெளிநாட்டில் இருக்கும் போதே இரத்து செய்தார் என்பதை மறந்துவிடக் கூடாது என முகமது பாகேர் நோபாக்ட் மேலும் தெரிவித்தார். (7)

## ில் அரச படைகள் தாக்குதல்
## பேர் பரிதாபமாக உயிரிழப்பு




தலைமையிலான படையினர் நேற்று முன்தினம் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த தாக்குதலில் 10 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இட்லிப் மாகாணத்தின் பின்னிஷ், ராம் ஹம்தான், டப்தனாஸ் கிராமங்களை குறிவைத்து நேற்று முன் தினம் சிரிய அரசு படைகள் நடத்திய வான்வழி தாக்குதலில் ஒரு இளம்பெண் உட்பட 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் 18 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். முன்னதாக கடந்த 8ஆம் திகதி இந்த மாகாணத்தில் ரஷ்ய படைகள் நடத்திய வான்தாக்குதலில் 44 பேர் உயிரிழந்தது அங்கு சோகத்தை ஏற்படுத்தி இருந்தது. (7)

## ட்ரம்பின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது
### அவுஸ்திரேலிய பிரதமர் மல்கம் பாராட்டு



(சிட்னி)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடனான சந்திப்பிற்கான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது என, அவுஸ்திரேலிய பிரதமர் மல்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.

தலைநகரில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "கொரிய தீப கற்பத்தில் அணுவாயுத பயன்பாட்டை நிறுத்துவதை இலக்காக கொண்ட முக்கிய ஆவணமொன்றில் ட்ரம்பும், கிம்மும் கைச்சாத்திட்டுள்ளனர். அமெரிக்கா அதன் பனிப்போர் நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டு, பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க உறுதியளித்துள்ளது.

ட்ரம்ப், இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் செயற்படாத வகையில் மிகவும் சிறப்பான தலைமைத்துவத்துடன் செயற்பட்டுள்ளார். அவரது உறுதிப்பாட்டையும், தைரியத்தையும் நான் பாராட்டுகின்றேன்.

ட்ரம்ப் கிடைத்த சந்தர்ப்பத்தை சிறப்பாக பயன்படுத்தி சந்திப்பை மேற்கொண்டுள்ளார். ட்ரம்ப் தனிப்பட்ட முறையில் அதிகளவான நேரத்தை, கிம்முடன் செலவிட்டுள்ளார்" என மேலும் தெரிவித்தார். (7)

## தேஷில் கடும் மழை,
## வு; 14 பேர் உயிரிழப்பு



ள்ளது. வீதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த தொடர் மழையின் காரணமாக இஸ்லாம் பூர், புரிகாட், அம்போலி, ஹத்திமாரா, போரோ குல்பாரா, சாரைபாரா பகுதிகளில் பெருத்த நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

இந்த மழையாலும், நிலச்சரிவாலும் மியன்மாரில் இருந்து அகதிகளாக வந்து உள்ள பல்லாயிரக்கணக்கான ரோஹிஞ்யா முஸ்லிம்மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் மூங்கிலாலும், பிளாஸ்டிக் பலகைகளாலும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக குடியிருப்புகளில்தான் வசித்து வருகின்றனர். அதில் 1,500 தங்கு மிடங்கள் பெருத்த சேதம் அடைந்துள்ளன.

கோக்ஸ் பஜாரில் ஒரு மண் சுவர் இடிந்து விழுந்ததில் ஒரு ரோஹிங்யா முஸ்லிம் பெண்ணும், அவரது 2½ வயதான ஆண் குழந்தையும் சிக்கிக்கொண்டனர். இதில் குழந்தை பரிதாபமாக இறந்தது. தாய், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதே போன்று பலத்த காற்று வீசியதில் ஒரு மரம் வேரோடு சாய்ந்து முகமது அலி என்ற ரோஹிஞ்யா முஸ்லிம் வாலிபர் பலி ஆனார். மழை, நிலச்சரிவுகளில் மொத்தம் 14 பேர் பலியாகியுள்ளதாக அங்கு இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதை ரங்கமாதி அரசு மருத்துவ அதிகாரி டாக்டர் ஷாகித்த தாலுக்தர் உறுதி செய்தார். பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அவர் தெரிவித்தார். (7)

## வெற்றிகரமான சந்திப்பை முடித்துக்கொண்டு அமெரிக்கா புறப்பட்டார் ஜனாதிபதி ட்ரம்ப்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் நடைபெற்ற வரலாற்று சிறப்பு மிக்க சந்திப்பை நிறைவு செய்துவிட்டு டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்கா புறப்பட்டு சென்றார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன் - அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் சிங்கப்பூரில் நடைபெற்றது. சிங்கப்பூர் சென்டோசா தீவில் உள்ள கேபெல்லா ஹோட்டலில்



இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, அமெரிக்கா - வடகொரியா இடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதனை இந்தியா உட்பட பெரும்பாலான உலக நாடுகள் வரவேற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கிம் யாங் உன் உடனான சந்திப்பை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு டொனால்ட் ட்ரம்ப் சிங்கப்பூரில் உள்ள பயலேபார் விமானத் தளத்தில் இருந்து அமெரிக்கா புறப்பட்டு சென்றார். (7)

# கோத்தபாய ஜனாதிபதியானால் நாட்டைவிட்டு ஓடிவிடுவேன்!

## மேர்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

2020 இல் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கை ஜனாதிபதியானால் தான், நாட்டை விட்டு வெளியேறி விடுவேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"மகிந்த ஆட்சிக் காலத்தில், வெள்ளை வான் கலாசாரத்தை உருவாக்கியவர் கோத்தபாய ராஜபக்ஷ தான். அந்தக் காலகட்டத்தில் மக்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பசில் ராஜபக்ஷவும் கோத்தபாய ராஜபக்ஷவும் தான் நாட்டை ஆட்சி செய்தார்கள்.

அப்போது நாட்டுக்கு வந்த முதலீட்டாளர்களிடம் தரகுப் பணத்தை பசில் ராஜபக்ஷ பெற்றுக் கொண்டார்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை

(மஸ்கெலியா)

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் வருடந்தோறும் நடத்தி வரும் தரம் -5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை இம்முறை எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மன்றத்தின் தலைவர் எம்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

மலையகக் கல்வி அபிருத்தி மன்றத்தின் 9 ஆவது ஆண்டு வெற்றிகரமான புலமைப் பரிசில் முன்னோடி பரீட்சைக்கு இம்முறை சுமார் 35 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளதாக தெரிவித்த அவர் இதற்கென சுமார் 7 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாண கல்வியமைச்சுகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சினதும் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அதேபோல் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் முன் அனுமதி வழங்கியுள்ளதாகவும் முதலாம் இரண்டாம் பகுதிகளைக் கொண்ட வினாத்தாள்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் பரீட்சை நடைபெறும் தினங்களில் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் பிரதிநிதிகள் பரீட்சை நிலையங்களுக்கு வருகை தரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பதற்றத்தைப் போக்கவும், அவர்கள் பயம், நடுக்கம் இன்றி தேசிய மட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உதவியாகவும் உந்து சக்தியாகவும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் வருடந்தோறும் முன்னோடிப் பரீட்சை நடத்தப்பட்டு வருவதாகவும், மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் பங்களிப்பு செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பரீட்சை நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் மாகாண அமைச்சுகள், கல்வித் திணைக்களங்கள், அமைச்சர்கள், பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மன்றத்தின் போஷகர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், ஊடகத் துறையினர் அனைவருக்கும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் சார்பில் நன்றியையும் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதாக மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் சிவகுமார் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# லசந்த விக்கிரமதுங்க படுகொலை குறித்து சிசிர மெண்டிசிடம் தீவிர விசாரணை!

(கொழும்பு)

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவரான ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிசிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் தீவிர விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை மற்றும் ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவே சிசிர மெண்டிசிடம் விசாரணை நடத்தப்பட்டது.

ஆறு மணித்தியாலங்கள், இவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட காலகட்டத்தில் சிசிர மெண்டிஸ், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியாக பணியாற்றியிருந்தார்.

2015 ஆம் ஆண்டு தற்போதைய கூட்டு அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் அவர், தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் அளித்த வாக்குமூலத்தில் இருந்து பெறுமதியான தகவல்கள் கிடைத்திருப்பதாக, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில நாளிதழிடம் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆயுதக் களைவு குறித்த ஜப்பானிய தூதுவர் இலங்கை பாதுகாப்புச் செயலருடன் சந்திப்பு

(கொழும்பு)

ஆயுதக்களைவு பிரகடனம் தொடர்பான, ஜெனிவாவுக்கான ஜப்பானின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி நொபுஷிகே தகாமிசாவா, இலங்கை பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, ஆயுதக்களைவு விவகாரம் குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கை மற்றும் ஜப்பானிய அதிகாரிகளும் பங்கேற்றனர். (இ-7)



# கை, கால் கட்டப்பட்ட நிலையில் முதியவரின் சடலம் நேற்று மீட்பு

(கொழும்பு)

கொரகேன -ஊரகஹா பகுதியில் நேற்றுக் காலை 78 வயது முதியவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த சடலம் கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# அடைந்தே கிடப்பவர்கள்!

ஆர்டி மெலோஸ் என்று ஓர் உயிரினம். இது எப்போது பார்த்தாலும் தூங்கிக் கொண்டே இருக்கும். இது தன் வாழ் நாளின் 60 சதவிகிதத்தைத் தூங்கியே கழித்து விடுகிறது.

மனிதர்களிலும் ஆர்டிமெலோஸ்காரர்கள் உண்டு. இவர்கள் எப்போது பார்த்தாலும் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பார்கள். அலுவலகம் சென்றால் பைல்களுக்குள் முகத்தைப் புதைத்துக் கொள்வார்கள். அந்தண்டு இந்தண்டு என்ன நடந்தது என்று கேட்டால் இவர்களுக்குத் தெரியாது. இவர்கள் வியாபாரம் செய்ய நேர்ந்தால் வாடிக்கையாளர்களைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்கள். அவர்களாக எதையாவது விரலைச் சுட்டிக் காட்டிக் கேட்டால் அதை மட்டும் எடுத்துக் கொடுப்பார்கள். இவர்களாக எதையும் சிபாரிசு செய்து வாங்கச் செய்ய மாட்டார்கள்.

திருமண நிகழ்வுகளுக்குப் போனால் அரசியல்வாதி பதவி நாற்காலியைப் பிடித்துக்கொள்வது போல் உட்கார்ந்துகொண்டு அசையமாட்டார்கள். சாமானியத்தில் எங்கும் கிளம்ப மாட்டார்கள். ஊட்டி கொடைக்கானலுக்குப் போனால் கூட ஹோட்டல் அறையே கதி என்று போர்வைக்குள் புகுந்து கொள்வார்கள்.

சிலர் இந்த அளவுக்கு மோசமில்லையென்றாலும் நான் வரல்லை; போகல்லை; பார்க்கல்லை; தேவையில்லை என்கிற அளவில் தேங்கிப் போகிறவர்களும் உண்டு. இந்தக் குணத்தை இந்தக் கணமே தூக்கி எறிய வேண்டும்.

இந்த உலகம் இனியது. பார்க்க வேண்டிய இடங்களும் பழக வேண்டிய மனிதர்களும் நிறைய. கலகலப்பான பழகுமுறையும் சக மனிதர்களை நேசிக்கிற இயல்பும் இந்த உலகை மேலும் இனிமையானதாக ஆக்கும்.

அவரைத் தெரியும் என்பதும் இவரைத் தெரியும் என்பதும் இந்த உலகில் பெரிய பலம். எனக்கும் எவரையுமே தெரியாது என்பதும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்பதும் மிகப் பெரிய பலவீனம்.

மற்றவர்களின் நகைச்சுவையில் மனிதாபிமானத்தில், அவர்களது நெஞ்சின் ஈரத்தில் நாம் துன்பங்களை மறந்துவிட முடியும்; இவற்றின் வழியே நம் துன்பங்களை மாற்றிக் கொள்ளவும் குறைத்துக் கொள்வதும் நிச்சயம் சாத்தியம்.

இதயத்தைச் சுருக்கிக் கொண்டால் நம் உலகமும் சுருங்கிப் போகும். பார்த்த மனிதர்களையே பார்த்து சிந்தித்தவற்றையே சிந்தித்தால் உலகம் சுமையாகிவிடும்.

அடைந்தே கிடப்பவர்கள் வாழ்வில் வெற்றியாளர்களாக இருக்கிறார்களா? சவால் விட்டுக் கொள்ளலாமா?

வாருங்கள் நல்லுள்ளங்களே! வெளியே வாருங்கள்! இந்த உலகம் அருமையானது என்பதும் கொடியது என்பதும் நம் இதயத்திலேயே தான் இருக்கின்றது.

இந்த அரிய மண்ணில் பிறந்து விட்டு அண்டார்டிகா பிரதேச மனிதனைப் போல் அடைந்துகிடப்பதா புத்திசாலித்தனம்?

**லேனா தமிழ்வாணன்**

# நான்கு துப்பாக்கிகளுடன் 6 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மொனராகலை, எதிமலே கொட்டியாகல பிரதேசத்தில் எதிமலே பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலில் நான்கு உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கிகளை சட்டவிரோதமாக வைத்திருந்த ஆறு பேர் எதிமலே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் அதே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் மிருக வேட்டைக்காக இந்த ஆயுதங்களை வைத்திருந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதென்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்கள் நீண்ட காலமாக இந்தத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி பிரதேசத்திலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களில் மிருக வேட்டையில் ஈடுபட்டு விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு பல முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. இதனையடுத்து இந்தச் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# வெப்பக் காற்றால் குடிசை தீக்கிரை



(ஏறாவூர்)

மட்டக்களப்பில் வீசி வரும் பலத்த வெப்பக் காற்றால் கோறளைப்பற்று பகுதியில் ஓலைக் குடிசை ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில நாட்களாக தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசி வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வீசிய பலத்த அனல் வெப்பக் காற்றால் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் மீராவோடை தமிழ்ப் பிரிவு 10ஆம் குறுக்கில் ஓலைக் குடிசை ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

தான் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது திடீரென வீசிய சூறைக் காற்றால் குடிசை தீப்பற்றியதாக ச.கோமளம் என்பவர் தெரிவித்தார்.

அவ்வேளையில் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் விரைந்து வந்து தீயை அணைத்த தாகவும் அவர் தெரிவித்தார்.

கூலித் தொழில் செய்து ஜீவனோபாயம் நடத்தும் தான் மிகுந்த வறுமை நிலையிலுள்ளதாகவும் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் மகள் உட்பட இரண்டு பெண் பிள்ளைகளுடனும் தானும் குடும்பமும் இந்தக் குடிசையில் வசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவுடனான சந்திப்பில் அமெரிக்கத் தூதுவர் அரசியல் பேசவில்லை

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப்புக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் போது, அரசியல் விவகாரங்கள் தொடர்பாக எதுவும் பேசப்படவில்லை என்று. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில், கோத்தபாய ராஜபக்ஷவை கூட்டு எதிரணியின் வேட்பாளராக நிறுத்தக் கூடாது என்று மகிந்த ராஜபக்ஷவிடம், அமெரிக்கத் தூதுவர் கூறியதாக வெளியான தகவல்கள் குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மரியாதை நிமித்தமாகவே, மகிந்த ராஜபக்ஷவை அமெரிக்கத் தூதுவர் சந்தித்திருந்தார். இதன் போது அரசியல் விடயங்கள் பற்றி எதுவும் பேசப்படவில்லை." என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (இ-7)




## மணிபல்லவநாயகியே வாரும்மா...

மணிபல்லவத்தில் கொடியேற மனது நிறைவாக
மண்ணில் நன்மைகள் வந்துசேர
நாகம் தொழுத நாயகியே வாருமம்மா
நாடு வளம் பெறவே எழுந்தருளுமம்மா
நெய்தல் நிலத் தாயவளுக்குத் திருவிழாவாம்
நோய்கள் தீர்ப்பவளுக்குப் பெருவிழாவாம்
தேசம் காத்திடவே தாயே வாருமம்மா
தெய்வமே எழுந்தருளிக் காட்சிதாருமம்மா
சங்குமுழங்க மேளவாத்தியமிசைக்க
சங்கடம் தீர்த்திடும் நாயகியே எழுந்தருளுமம்மா
சங்குசக்கரநாகம் குடைபிடிக்க
சாகரம் மத்தியில் வாழ்பவளே வாருமம்மா

அரியாலையூர் கு.யசிதீபன்.

## எங்கள் நாக கன்னியே...

ஆர்ப்பரிக்கும் அலைகடல்நடுவே-நாகமது
குடைபிடிக்க அம்சமாய் அமர்ந்திருக்கும்
நயினையின் நாயகியே
எழில் விஞ்சும் உன் அழகுக்கோலம்-காண
ஏழெழு ஜென்மம் பிறவி எடுப்பினும் போதாது
எம் நாக பூஷணியே
உன் திருவடி காண அருள்வரம் வேண்டி-வரும்
அடியவரை ஊன்றுகோலாய் நின்று காத்திடுவாய்
நயினையின் தாயே எங்கள் நாக கன்னியே

த.லோகிதா,
தும்பளை, பருத்தித்துறை.

## வரம் தரும் நாயகி!

அலைகடல் நடுவே அமர்ந்தெம்மை காக்கும்
நயினை ஈஸ்வரி நாகபூஷணி
அகிலம் போற்றிடும் அருள்மழை தூவிடும்
அன்னை நீ எங்கள் அன்னபூரணி
உலகெலாம் உந்தன் கருணை மழைதனை
பொழியும் தேவி நீ புண்ணிய வராகினி
தொழுதிடும் பக்தர்தம் துயரங்கள் தீர்ப்பாய்
தாயவள் நீ எங்கள் நாகம்மாளே

செல்வநாயகம் கஜந்தன்




# உற்சவகால சொற்பொழிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அளவை யூர் வெள்ளியம்பதி ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தான வருடா ந்த அலங்கார உற்சவ விசேட சொற்பொழிவுகள் ஆலய மண்டபத்தில் 16 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி இரவு 7 மணிக்கு இடம்பெறும் என சொற் பொழிவு ஒழுங்கமைப்பாளர் சமயஜோதி க.நிஜலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் சைவப் புலவர்கள் பொன்.சந்திரவேல், செ.த.குமரன், ச.முகுந்தன், இளம் சைவப் புலவர்கள், சநவநீதம், தமனோஜ்குமார், க.கைலநாதன் ஆகி யோர் சொற்பொழிவாற்றுவார்கள். (இ-7)

# பிணைமுறி மோசடி குற்றச்சாட்டுக்களுக்கு முகம்கொடுக்க தயார்

## நீதியமைச்சர் தலதா அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்படும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அதற்கு முகம் கொடுக்க தயாராகவே இருக்கின்றனர் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். இரத்தினபுரி கஹவத்த பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் ஐக்கிய தேசியக் கட்சி பாரா ளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப் பட்டு வருகின்றன. அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுக்க நாங்கள்தயாராகவே இருக்கின்றோம்.

ஊழல் மோசடி இல்லாமல் நாட்டை மாற்றும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டுள் ளோம்.

என்றாலும் அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் சிலர் அரசாங்கத்துக்கு எதிராக பொய்க் குற்றச்சாட் டுக்களை சுமத்துகின்றனர்.

விகாரை அமைப்பதற்கும் சர்வமதக் குழுவின் அனுமதி பெறவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்து வருகின்றார். அவ்வாறான முறை ஒன்று இருப்பது எங்களுக்குத் தெரி யாது.

மேலும் ராஜபக்ஷ அர சாங்கம் 20வருடங்களில் மேற்கொண்ட வேலைத்திட் டங்களைவிட பாரிய வேலைத் திட்டங்களை நாங்கள் அதி காரத்துக்கு வந்து 3 வருடங் களில் மேற்கொண்டிருக் கின்றோம்.

என்றாலும்நாங்கள்அவற்றை விளம்பரப்படுத்தவில்லை. சிறிய வேலைத்திட்டங்களுக்கு பாரிய பதாகைகளை அமைக்கும் செயற்பாடுகளை நாங்கள் நிறுத் தியுள்ளோம். அத்துடன் 2015 ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் நாடு எந்த நிலையில் இருந்தது என்பதை மக் கள் மறந்துவிடக்கூடாது. சிந்தித்துப் பார்க்கவேண்டும் என அவர் மேலும் அறிவுரை கூறியுள்ளார். (இ-7)

# பதவி விலகத் தயார்! சுஜீவ திடீர் அறிவிப்பு



(கொழும்பு)

சபாநாயகர் கோரும் பட் சத்தில், நாடாளுமன்றத்தில் தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்யத் தயாராகவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ் வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க பணம் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் குறித்த ஊடகம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் தனது இராஜினாமா தொடர்பில் இவ்வாறு கருத்து தெரிவித்தார். (இ-7)

# கோத்தாவை ஜனாதிபதியாக்கி இராணுவமயமாக்கப்பட்ட



# சர்வாதிகார ஆட்சியை உருவாக்க சிலர் முயற்சி



## ஐ.தே.க. அமைச்சர் ஹரீன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாட்டில் தற்போது ஜனநாயக முதிர்நிலை ஆட்சியே காணப்படுகின்றது. எனினும் கோத்தபாயவை ஜனாதிபதியாக்கி இராணுவமயமாக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சியை உருவாக்கவே சிலர் முயற்சித்து வருகின்றனர் என அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ குற்றம்சாட்டியுள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சியில் சட்டம் இரண்டு வழிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டன. சாதாரண பொதுமக்களுக்கு புத்தகத்தில் உள்ள சட்டம் கடுமையாக்கப்பட்டது. ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு ஏற்பவும் சட்டம் வேறு வகையில் பயன்படுத்தப்பட்டது.

இன்று அலோசியஸிடமிருந்து பணம் பெற்றவர்கள் குறித்து பேசுபவர்கள் மக்கள் நிதியை சூறையாடியவர்களை மறந்து விட்டனர். ஊழல்வாதிகளை கைது செய்யவில்லை என அரசாங்கத்துக்கும் அரச தலைவர்களுக்கும் எதிராக இன்று பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றது.

இருப்பினும் தேசிய அரசாங்கம் ஒருபோதும் சட்டத்தை கையில் எடுத்து செயற்படாது. புத்தகத்திலுள்ள சட்டத்தை சுயாதீனமாக நடைமுறைப்படுத்தும். எனவே எஞ்சியுள்ள இரண்டரை வருடத்திற்குள் மக்கள் நிதியை சூறையாடிய அனைத்து ஊழல்வாதிகளுக்கும் நிச்சயம் தண்டனை வழங்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்தார். (இ-7)

## தேரர்கள் மீதான துப்பாக்கிச்சூடு குறித்து பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

கதிர்காமம், கிரிவெஹேர ரஜமஹா விகாரையின் விகாராதிபதி றுகுணு மாகம்பத்து பிரதான சங்கநாயக்க கொபவக தம்மிந்த தேரர் மீதும் மற்றொரு தேரர் மீதும் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. விகாரைக்குள் நுழைந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் மூவர், தேரர்கள் இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த தேரர்கள் இருவரும், அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## நாட்டில் தனிப்பட்ட ரீதியிலான வாகனப் பயன்பாடு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தனிப்பட்ட ரீதியிலான வாகனப் பயன்பாடு அதிகரித்துள்ளமையானது பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாக மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு தயாராவதற்கான காலம் வந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுப் போக்குவரத்து சேவையை விரிவுபடுத்துவது உள்ளிட்ட பல துறைகளின் ஊடாக இதற்கு தீர்வு தேடலாம் என்று பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்துள்ளார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

### எண் 1 (சூரியன்) (ஆளும் வேந்தர்கள்)

**பிறப்பு 1 எண் விதி எண் 3**

கூர்மையான அறிவும், உழைப்பும், வாழ்க்கையில் விரைவான முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் சமயோசிதப் பேச்சும், யோசனை சொல்லும் ஆற்றலும் பெற்ற இவர்கள், மற்றவர்கள் மத்தியில் மரியாதையுடன் நடத்தப்படுவார்கள்.

இவர்கள் இரகசியத்தை மற்றவர்கள் யாரும் அறிய மாட்டார்கள். இவர்களைப் புரிந்து கொள்வது மிகவும் கடினம். தான் இறங்கிய காரியத்தில் வெற்றி பெறும் வரை அதைப் பற்றி யாரிடமும் வெளிப்படையாகப் பேச மாட்டார்கள். கணிதத் திறமை வாய்ந்தவர்கள். எதையும் முன்கூட்டியே கணிக்கும் ஆற்றல் நிறைந்தவர்கள். தன்னைச் சந்திக்க வரும் நபர்களைப் பற்றி, எதற்கு வருகிறார்? என்று அறியும் ஆற்றலுடையவர்கள். தனக்கு லாபம் தராத காரியத்திலும், தேவையில்லாத மற்றவர்கள் விடயத்திலும் வீணாகத் தலையிடமாட்டார்கள்.

மற்றவர்கள் இவர்களைப் பற்றி புத்திசாலிகள் என்று பாராட்டுவார்கள். பிறரை வேலை வாங்கும் திறமையும், ஒரு காரியத்தை சிறப்பாக ஆற்றும் வல்லமையும் இருக்கும். வாழ்க்கையில் உன்னத நிலையைக் கட்டாயம் அடைந்தே தீருவார்கள். ஆளுமைக் குணம் படைத்த இவர்கள் அரசாங்கத்தில் மிகப் பெரிய பொறுப்பு மிக்க பதவியில் இருப்பார்கள்.

நிரந்தரமான காரியங்களில் நிதானமாக ஈடுபட்டு வெற்றி பெறுவார்கள். மனச் சாட்சிக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். இவர்களின் உயர்ந்த பண்பு மற்றவர்களை எளிதில் கவரும். வெற்றி பெறும்போது மன உற்சாகத்துடன் இருப்பார்கள். தோல் வியைக் கண்டு பயப்படமாட்டார்கள்.

பல கலைகளில் தேர்ச்சியும் பெறுவார்கள். தனிப்பட்ட செயல்களால் பொருட் செல்வத்தைக் குவிப்பார்கள். நவ நாகரிகப் பொருட்களில் ஆவல் அதிகம் உடையவர்கள். வீடு, வாகனம், அலுவலகம் என்று அனைத்தையும் கலை அழகுடன் பராமரிப்பார்கள். மிகவும் சுத்தமான ஆடை அணிவார்கள். கடல் கடந்த தூரதேசப் பயணம்




மேற்கொள்வார்கள். இயற்கைக் காட்சிகளைக் கண்டு மனம் பூரிப்படைவார்கள். இவர்கள் மீது உள்ள நம்பிக்கையினால் பலபேர் தங்களுடைய உடைமைகளை இவர்களிடம் ஒப்படைப்பார்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி நற்பெயரெடுப்பார்கள்.

பிறருடைய உண்மையான மனநிலையை அறிந்து ஆழ்ந்த நட்பு கொள்வார்கள். இறையுணர்வு மிக்கவர்கள். அனைத்துக் கலைகளிலும் தேர்ச்சியடைவார்கள். அமைதியை விரும்பி எந்தக் காரியத்திலும் நிதானமாகச் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். நல்ல வாழ்க்கைத் துணையை அடைவார்கள். ஜோதிடம், மனோவசியம், சித்தம், யோகம் போன்ற மறை கலைகளை அறிய முற்படுவார்கள். பேச்சில் ஈடு இணையற்றவர்கள். பொது வாழ்வில் பிரகாசிப்பார்கள்.

பலரை நிர்வகிக்கும் ஆற்றலுண்டாகும். அரசியலில் மக்கள் செல்வாக்கு அதிகமுண்டாகும். சில நேரங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பார்கள். பிறருக்கு அறிவுரை கூறுவதில் வல்லவர்கள். நல்ல வாகன வசதிகளுடன் வாழ்வார்கள். எத்துறையிலும் பிரகாசமுண்டாகும். தீவிரமான யோசனையுண்டாகும். எடுத்த காரியத்தை முடித்தே தீருவார்கள். சுய சிந்தனை உள்ளவர்கள் அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,3,12,21,30, 5,14,23

**துரதிர்ஷ்ட திகதிகள்**
8,17,26,6,15,24

**அதிர்ஷ்ட நிறங்கள்**
மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், செஞ்சிவப்பு, பொன்னிறம், ரோஸ், ஒரேஞ், கத்தரிப்பூ நிறம்.

**துரதிர்ஷ்டநிறங்கள்**
கறுப்பு, கோப்பி கலர், பாக்கு நிறம், இருண்ட நிறங்கள், பச்சை

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
மாணிக்கம், கனக புஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஒபல், சூரிய காந்தல்கல்

**பிறப்பு 1 எண் விதி எண் 4**

உலகிலுள்ள அனைத்து விடயங்களைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். கம்பீரமான தோற்றமுடையவர்கள். நேர்மை தவறாதவர்கள். இவர்களின் பேச்சும் எழுத்தும் உலகையே சீர்செய்யும் வல்லமையுடையதாக இருக்கும். பிறருடைய பேச்சை நிதானமாகக் கேட்கும் பக்குவமிருக்காது. இடையிடையே மறந்து பேசுவார்கள். தனது மனதில் தோன்றும் கருத்துக்களைத் தைரியமாக வெளியிடுவார்கள்.

நேர்மைக்குப் புறம்பான எந்த விடயத்தையும் உதறித் தள்ளிவிடுவார்கள். பேச்சில் இனிமையும் கண்டிப்பும் மிக்கவர்கள். மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள இடத்தில் தொழில் செய்து பிரகாசம் அடைவார்கள். மன்மத லீலைகளில் மனம் மயங்குவார்கள்.

(தொடரும்....)

## இந்து அமைச்சுக்கு முஸ்லிம் பிரதியமைச்சர்

# தமிழ் இந்துக்களை பலவீனப்படுத்த நினைக்கிறீர்களா? மனோ கேள்வி



(கொழும்பு)

மீள்குடியேற்ற, புனர்வாழ்வு பிரதி அமைச்சராக காதர் மஸ்தான் இருப்பதில் பிரச்சினை இல்லையெனத் தெரிவித்துள்ள அமைச்சர் மனோ கணேசன், எனினும், மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சில் இருந்து இந்து கலாசார அமைச்சை பிரித்தெடுத்து, அதை வேறு ஒரு பொருத்தமான அமைச்சுடன் இணைக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சில் இருந்து இந்து கலாசார பிரதியமைச்சராக, காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டமைக்கு தொடர்ச்சியாக எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், அமைச்சர் மனோ இந்த விடயம் தொடர்பில் பேஸ்புக்கில் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்தப் பதிவில் "மீன்வளத்துறை அமைச்சர், மீனவராகவும், கல்வி அமைச்சர், கல்வி பேராசிரியராகவும் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், இதே விதி மத விவகார அமைச்சுகளுக்கு பொருந்தாது. இஸ்லாமிய மத விவகாரம், அமைச்சர் சுவாமிநாதனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், நான் அதை எதிர்த்து இருப்பேன்.

"மதம் என்பது ஒரு உணர்வுபூர்வமான விடயம். இதில் அரசியல் விளையாட்டு கூடாது. அந்தந்த மத விவகாரங்கள் அந்தந்த மதத்தை சேர்ந்தவர்களிடம் இருப்பதே பொருத்தமானது.


குறிப்பிட்ட அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர், அந்த அமைச்சு கையாளும் மத ஸ்தலங்களுக்குள் செல்ல வேண்டும். மதத் தலைவர்களுடன் உரையாட வேண்டும்.

மத உணர்வுகளை, முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும் எனவும் மனோ வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இன்று நிகழ்ந்திருப்பது ஒரு குளறுபடி. எங்களை அவமானப்படுத்திக்கொள்ள இந்த அரசை நாம் உருவாக்க பங்களிக்கவில்லை. இந்து கலாசார அமைச்சு இதுவரை, டி.எம். சுவாமிநாதனிடம் இருந்தது போதும். அதை பிரித்து எடுத்து வேறு ஒரு பொருத்தமான அமைச்சுடன் சேர்த்து விடுங்கள். காதர் மஸ்தான், மீள்குடியேற்ற, புனர்வாழ்வு பிரதி அமைச்சராக இருக்கட்டும்.

இல்லாவிட்டால், இதை தமிழ் இந்துக்களை பலவீனப்படுத்தும் செயற்பாடாகவே நாம் கருதுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ட்ரம்ப் - கிம் சந்திப்பு குறித்து நாமலின் புதிய சிந்தனை




(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் இணைப்பு முக்கியமான நிலையிலும் அண்மைக் காலங்களாக இலங்கை போன்ற நாடுகள் அதன் கொள்கையில் இருந்து விலகிச் செல்வது ஏன் என்று அறிந்துகொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளதாவது, அமெரிக்கா மற்றும் வட கொரியாவுக்கு இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் முடிவுகள் இன்னும் தெளிவாகாத நிலையில், அணிசேரா நாடுகளின் இணைப்பே முக்கியமானதென்பது தெளிவாகப் புலப்பட்டுள்ளது.

இந்நிலையில், அண்மைக்காலங்களாக இலங்கை போன்ற நாடுகள் அணிசேரா நாடுகளின் கொள்கையில் இருந்து விலகிச்செல்வது ஏன் என்று அறிந்துகொள்ள வேண்டியுள்ளதென அவர் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# மயிலணி வடக்கில் இன்று விசேட நடமாடும் சேவை

(சுன்னாகம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நடமாடும் சேவை வட்டாரம் 1 கிராம உத்தியோகத்தர் பிரிவு சுன்னாகம் வடக்கு ஜே/195, சுன்னாகம் கிழக்கு ஜே/197 வட்டாரம் 1 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சுன்னாகம் மயிலணி வடக்கு வளர்பிறை சனசமூக நிலையம் இன்று காலை 9மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலக எல்லையில் வசிக்கும் அனைத்து மக்களும் தங்களுடைய வீடுகள், கடைகள், காணிகள் உட்பட்ட ஒவ்வொரு ஆதனமும் பிரதேச சபை ஆதனப் பதிவேட்டில் தங்களது பெயரில் பதியப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஆதனப்பதிவேட்டில் தங் தங்களது பெயரில் தங்களது ஆதனம் இல்லாமல் இருந்தால் தங்களுடைய பெயருக்கு ஆதனப்பெயர்மாற்றம்செய்து கொள்வதெப்படி என்பது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தங்களது ஆதனம் வேறு ஒருவரது பெயரில் இருந்தால் அதற்கு பிரதேசசபை பொறுப்பாகமாட்டாது என்பதுடன் தங்களுடைய பெயருக்கு மாற்றுவதற்காக குறிப்பிட்ட ஆதனம் தங்களுடையது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை தாங்கள் சமர்ப்பித்தால் ஆதனப் பதிவேட்டில் அதனை தங்களது பெயருக்கு மாற்றுவது தொடர்பான ஆலோசனைகளைப் பெறமுடியும்.

வியாபார உரிமம் பெறுவது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தங்கள் ஆதனங்களுக்குரிய ஆதனவரியை (சோலை வரி) செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள முடியும்.

சுன்னாகம் பொது நூலகத்தில் அங்கத்தவராக சேர்ந்து கொள்ள முடியும்.

பிரதேச சபையால் வழங்கப்படும் ஏனைய சேவைகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற முடியும். மேற்படி நடமாடும் சேவையானது தங்களது பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை நடத்தப்படும்.

எனவே இவ் அரிய சந்தர்ப்பத்தை பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என பிரதேச சபை தவிசாளர் க.தர்ஷன் அறிவித்துள்ளார். (இ)

# ஆசியாவின் குப்பைத் தொட்டியாக இலங்கை மாறிவிட்டது - ஜே.வி.பி



(கொழும்பு)

சிங்கப்பூருடன் இலங்கை ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால், இலங்கையை காதால் இழுத்து சென்று எட்கா ஒப்பந்தத்தில் கையொப்பமிட வைக்க இந்தியாவுக்கு முடியுமென மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை சிங்கப்பூருடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் மிகவும் விசித்திரமாக உள்ளது. இலங்கையின் பொருளாதாரம் இப்போது சிங்கப்பூரிடம் சிக்கிக் கொண்டுள்ளது.

மேலும் சிங்கப்பூருடனான ஒப்பந்தத்தினால் இலங்கை பொருளாதாரத்தின் அனைத்து வாசல்களும் திறக்கப்பட்டுள்ளன. இதனால் வேண்டிய ஒரு நாட்டிற்கு இலங்கையின் பொருளாதாரத்திற்குள் நுழைய முடியும்.

இவ்வாறான நிலைமையின் போது எமது நாட்டின் பொருட்கள் மற்றும் சேவையில் சந்தை உறுதியாக இல்லையெனின் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்.

எமது நாட்டின் பொருளாதாரத்தை சிங்கப்பூருக்கு திறந்து விடுவோமேயானால் இந்தியாவிற்கும் திறந்து விட வேண்டிய நிலை ஏற்படும். அதனடிப்படையில் இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தில் இலங்கை கையொப்பமிட்டே ஆக வேண்டும்.

சிங்கப்பூருடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில் 64 வகையான குப்பைகளை இலங்கைக்கு கொண்டுவர வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையை ஆசியாவின் குப்பைத் தொட்டியாக மாற்ற இந்த ஒப்பந்தம்வழியமைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மதூஷின் நெருங்கிய உதவியாளர்கள் மூவர் நேற்று கண்டியில் கைது!





(கொழும்பு)

பாதாள உலகக் குழுத் தலைவர் மாகந்துரே மதூஷின் நெருங்கிய உதவியாளர்கள் மூவர் நேற்றுக் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி - கடுகண்ணாவ விடுதியொன்றில்வைத்தே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மூவரும் பல்வேறு குற்றச் செயல்களோடு தொடர்புபட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கண்டி பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இறந்தகால காயங்களை ஆற்றுவதன் மூலம் எதிர்காலத்தை வென்றெடுக்க திட்டங்கள்

# நல்லிணக்க அலுவலகம் நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை கீழ் மட்டத்திலிருந்து ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்ட இறந்தகால காயங்களைஆற்றுவதன்மூலம்எதிர் காலத்தை வென்றெடுத்தல் செயற்றிட்டத்தை மேலும் 14 மாவட்டங்களில் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் முதற்கட்டம் யாழ்ப்பாணம், அநுராதபுரம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை கேந்திரமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதன்மூலம்பெற்றுக் கொண்ட அனுபவங்களைக் கொண்டு 2ஆம் கட்ட செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி அம்பாறை, மட்டக்களப்பு, காலி, களுத்துறை, கிளிநொச்சி, குருநாகலை, மன்னார், மாத்தறை, மொனராகலை, முல்லைத்தீவு, நுவரெலியா, புத்தளம், திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்கள் தேசிய நல்லிணக்க செயற்றிட்டத்தின் அடுத்த கட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் இச் செயற்றிட்டத்தினை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகக்குழுக்களை விழிப்பூட்டல், தேசிய நல்லிணக்கம் தொடர்பில் மக்களை அறிவூட்டல், பிரதேச அலுவலகங்களூடாக பல்வேறு இன மக்களுக்கிடையிலான புரிந்துணர்வை வலுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளையும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் முன்னெடுக்கவுள்ளது.

தேசிய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் முன்னெடுக்கப்படும் தேசிய நல்லிணக்க செயற்றிட்டத்தில் பங்கு கொள்வதற்காக 20 சிவில் அமைப்புக்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றின் வலுவான ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இந்து மதத்தவரல்லாத ஒருவரை இந்து சமய அலுவல்கள் அமைச்சின் பிரதியமைச்சராக நியமித்தமைக்கு இந்துமாமன்றம் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இந்து மத அலுவல்கள் உள்ளிட்ட சிறைச்சாலைகள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சிற்கான பிரதி அமைச்சராக இந்து மதத் தவரல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமையானது இந்த நாட்டின் இந்துக்களுக்கு மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நியமனம் தொடர்பில் இலங்கைவாழ் இந்து மக்களின் சார்பில் நாம் எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பில் மாமன்றத் தலைவர் மா. தவயோகராஜா, இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனைத் தொடர்பு கொண்டவேளை, இவ்விடயம் தொடர்பில் தான் ஜனாதிபதியுடன் பேசிதீர்வொன்றினை பெற முயற்சிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்துமத அலுவல்கள் அமைச்சிற்கான பிரதியமைச்சர் பதவியை உடனடியாக தமிழ் இந்து ஒருவருக்கு வழங்கும் படியும் எதிர்காலத்தில் இவ்வாறான மனக்கசப்பான- இந்து மக்களை அதிருப்தி கொள்ளச் செய்கின்ற எந்த நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டாமெனவும் அரசைக் கேட்டுக் கொள்கின்றோம் என இந்து மாமன்றம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ-7)

# தேசிய மட்ட போட்டிக்கு மாணவி நதுசா தெரிவு


(யாழ்ப்பாணம்)

04.06.2018 அன்று நடைபெற்ற மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வடமராட்சி வலய, யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த மாணவி நதுசா பிரதாப் மாகாண மட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (இ)



# முல்லைத்தீவில் தொடரும் சிங்களக் குடியேற்றங்கள் குறித்து ஜனாதிபதி, பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது

## சீ.வீ.கே.சிவஞானம் தகவல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் காணி ஆக்கிரமிப்புக்கள் என்பன தொடர்பில் உருவாக்கப்பட்ட செயலணியினால் இந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதி, பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.வடக்கு மாகாண சபை அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலக சபா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது கருத்து வெளியிடுகையிலேயே சிவ ஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் மாகாண சபையில் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மாகாண அவைத் தலைவர் தலைமையிலான மாகாண சபையினர் அண்மையில் முல்லைத்தீவிற்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் போராட்டமொன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

இதன் பின்னர் மாகாண சபையினரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்துக் கலந்துரையாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய வடக்கில் இடம்பெறுகின்ற சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் மாகாண சபையினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றிருந்தது. இதன் போது விசேட செயலணியொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அச் செய லணி தனது நடவடிக்கை களை மேற்கொண்டும் வரு கின்றது. இந் நிலையிலேயே முல்லைத்தீவு உட்பட வடக்கில் மேற்கொள்ளப்படுகின்ற குடியேற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஜனாதிபதி மற்றும்பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

அத்தோடு மேலும் முன்னெடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இதற்கு தொடர்ந்தும் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் சிவஞானம் கேட்டுக் கொண்டார். (இ-4)



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடம், அதிபர் விடுதி என்பன நேற்று திறந்து வைக்கப்பட்டன. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், கட்டடத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன், வடமாகாண கல்வி அமைச்சர் கே. சர்வேஸ்வரன் ஆகியோர் திறந்து வைப்பதையும் அருகில் கல்லூரி அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: மகாலிங்கம்)

# பேருவளை, அளுத்கம கலவரங்களால் சேதமடைந்த சொத்துக்களுக்கு இழப்பீடு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

பேருவளை, அளுத்கம பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களால் சேதமடைந்த சொத்துக்களுக்கு விசேட இழப்பீடு வழங்கப்படவுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் பேருவளை மற்றும் அளுத்கம ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பொது மக்கள் குழப்பநிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நடைமுறையிலுள்ள சட்டவிதிகளின் கீழ் வழங்கக்கூடிய ஆகக் கூடிய இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எனினும், இதன்மூலம் உள்ளடக்கப்படாத வீட்டுத் தள பாடங்கள்மற்றும்ஏனைய உபகரணங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு அமைவாக மேலும் இழப்பீடு செலுத்த வேண்டும் என்று மாவட்ட செயலாளர்களினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட மதிப்பீட்டுக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்டுள்ள கொடுப்பனவை செலுத்தும் வகையில் 155.9 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்காக மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை கொள்கை ரீதியில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# எலிசபெத் மகாராணியிடமிருந்து விருது பெறும் இலங்கைப் பெண்

(லண்டன்)

எலிசபெத் மகாராணியிடம் இருந்து விருது பெற இலங்கைப் பெண்ணான பாக்கியா விஜயவர்த்தன தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பக்கிங்ஹாம் மாளிகையில் எலிசபெத் மகாராணியிடம் இருந்து "மகாராணியின் இளம் தலைவர்" விருதை இவர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

இவ் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறவுள்ளது.



சமூகத்தில், நாட்டில்வாழ்க்கையை மாற்றி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட இளம் தலைமுறையினருக்கே "மகாராணி இளம் தலைவர் விருது" வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இவ் விருதுக்கு சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த 29 வயதான பாக்கியா தெரிவாகியுள்ளார். உணவுப் பாதுகாப்பை மக்களிடையே ஊக்குவித்தமைக்காக இவ்விருது அவருக்கு வழங்கப்படுகிறது. பாக்கியா வீட்டில் வீட்டுத் தோட்டத்தில் இருந்து உணவுப் பொருட்கள், காய்கறி, பழவகைகளை உற்பத்தி செய்யுமாறு பொதுமக்களை தூண்டி வந்துள்ளார்.

ஆயிரக் கணக்கான போட்டியாளர்களிடையே இலங்கையைச் சேர்ந்த பாக்கியா தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆசிரியர் வளப் பங்கீடு தொடர்பான

# இடமாற்றக் கொள்கையை உரியமுறையில் வடக்கில் நடைமுறைப்படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வளப் பங்கீடு தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்டிருக்கின்ற இடமாற்றக் கொள்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென சபையின் முன்னாள் கல்வி அமைச்சரும் உறுப்பினருமான த.குருகுலராசா தெரிவித்துள்ளார்.

மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி வலயங்களில் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதனால் மாணவர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகவும் நேற்று முன்தினம் சபை அமர்வின் போது உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

ஆகவே இதற்கு அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரிய உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்டம் தொடர்பில் அமைச்சர் அலட்சியப்போக்கை கடைப்பிடிக்காமல் விரைந்து செயற்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினர். இதற்குப் பதிலளித்த அமைச்சர் சர்வேஸ்வரன் பதவியேற்றது முதல் தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் தாம் வேறுபாடின்றி மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதன் போது பேசிய முன்னாள் கல்வி அமைச்சரான குருகுலராசா, வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளிட்ட வன்னிப் பகுதியின் பல வலயங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டியதும் மிக மிக அவசியமான செயற்பாடுகளாக இருக்கின்றன.

குறிப்பாக வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்டிருக்கின்ற இட மாற்றக் கொள்கைளை அமைச்சு ஏன் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

ஏனெனில் அந்த இடமாற்றக் கொள்கையை உரிய முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர் வளப் பங்கீடுகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கும்.

ஆகவே இனியும் காலம் தாழ்த்தாது அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்றார். இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், இடமாற்றக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய புதிதாக நியமிக்கப்படுகின்றவர்களுக்கு அந்தக் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம். மேலும் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆசிரியர் பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினர்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். (இ-4)

# "பிறரைக் கெடுத்து வாழ்வது வாழ்க்கையல்ல பிறருக்கு கொடுத்து வாழ்வதே வாழ்க்கை"

## இன்று உலக இரத்த கொடையாளர் தினம்

இன்று (14.06.2018) உலக இரத்த கொடையாளர் தினம் World Blood Donor Day கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இத்தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இத்தினம் ஆண்டுதோறும் உலக சுகாதார நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் சர்வதேச ரீதியில் கொண்டாடி வருகிறது. இரத்தப் பிரிவுகளான A,B,AB,O ஆகிய பிரிவுகளைக் கண்டுபிடித்த கார்ல் லென்டினரின் Karl Landsteiner என்பவர் பிறந்த நாளிலே இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இரத்தத்தை குருதி எனவும் தமிழில் அழைக்கப்படும்.

அனைத்து வகையான விரும்பிய பொருட்களையும் வாங்க இன்று எம்மத்தியில் கடைகள் உண்டு. குருதி வாங்க எங்கே கடை உண்டு? உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் உயிர்களுக்காகவும் தன்னலம் கருதாது தங்கள் உதிரத்தைத் தானம் செய்து பல உயிர்களைக் காக்கும் பணியில் ஈடுபடும் இந்த உன்னதமானவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே. இரத்த தானம் செய்வது எவ்வளவு நன்மையானது. இலகுவானது என்பதை நாம் அனைவரும் அறிய வேண்டும். அனைவரது தோலில், நிறத்தில், மதத்தில், பண்பாட்டில் வேறுபாடு இருந்தாலும் அனைவரின் உடம்பெங்கும் பரந்து ஓடும் குருதியின் ஒரே நிறம் சிவப்புத்தான். என்னதான் நவீன உலகில் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் ஆயிரம்தான் விஞ்ஞான விந்தைகள் நம் கண்ணெதிரே விரிந்திட்ட போதும் குருதியில்லாமல் எவரும் உயிர் வாழவும் முடியாது. அதேநேரம் குருதிக்கு மாற்றீடாக வேறு எதனையும் பயன்படுத்தவும் முடியாது. குருதிக்கு மாற்றீடு குருதி மட்டுமே.

ஆதி முதல் இன்றுவரை இன, மத, மொழி வேறுபாடின்றி உலகெல்லாம் வாழும் அனைவரும் மாற்றுக்கருத்தின்றி ஏகமனதாக ஏற்றுக் கொண்ட ஒரே ஒரு தானம் இரத்ததானம் என்றால் மிகையாகாது. ஆனால் இன்றைய விஞ்ஞான யுகத்தில் வைத்தியத்துறை அடைந்துள்ள முன்னேற்றத்தின் காரணமாக குருதி திரவ இழைய தானம், உடல் உறுப்பு தானம் போன்ற தானங்களும் எதிர்பார்த்தளவிற்கு வெற்றியடைந்துள்ளன. இந்த வெற்றிக்குரிய முக்கியமான காரணம் தானம் செய்யும் கருணையுள்ளம்கொண்ட கொடையாளிகளின் இதயத்தில் இவையும் முக்கிய இடத்தை பிடித்துவிட்டன என்பதேயன்றி வேறு எதுவும் இல்லை.

### இரத்ததானம் செய்யும் போது கவனிக்க வேண்டியவை

- இரத்ததானம் செய்பவர் 18 வயது நிரம்பியவராகவும் 60 வயதினை மிகாதவராகவும் இருத்தல் அவசியம்.
- இரத்த ஹிமோகுளோபின் அளவு 12 கிராமிற்கு குறையாமலும் 16 கிராமிற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
- இரத்ததானம் செய்பவரின் எடை 50 கிலோவிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.
- இரத்ததானம் செய்வதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு வரை எந்த போதைப் பொருளையும் எடுத்திருக்கக் கூடாது.
- 3 ஆண்டுகளில் மஞ்சள் காமாலை நோய் தாக்கியிருக்கக் கூடாது.
- எந்த ஒரு தொற்று நோய் பாதிப்பு ஏற்பட்டவராகவும் இருத்தல் கூடாது.
- கடந்த ஓராண்டுக்குள் எந்த தடுப்பு மருந்தும் உபயோகப்படுத்தி இருத்தல் கூடாது.
- எயிட்ஸ், மேக நோய், நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், வலிப்பு நோய் போன்ற நோய்த் தாக்கம் ஏற்பட்டவர் இரத்த தானம் செய்வதைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.
- முன்பு ஏதாவது அறுவை சிகிச்சை செய்து இருப்பின் இரத்ததானம் செய்வதை தவிர்க்க வேண்டும்.
- கடந்த ஓராண்டுக்குள் எந்த தடுப்பு மருந்தும் உபயோகப்படுத்தி இருத்தல் கூடாது.

### இரத்ததானம் செய்பவர் பெண் எனில் கவனிக்க வேண்டியவை

- மாதவிடாய் காலங்களில் இரத்ததானம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.
- தாய்மையடைந்த காலம் முதல் மகப்பேறு காலம் வரை இரத்ததானம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.
- வேறு ஏதாவது குறைபாட்டிற்காக சிகிச்சை பெறுபவர்களும் இரத்ததானம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

### உலக இரத்ததான தினத்தின் பிரதான குறிக்கோள்கள்

உலக ரீதியில் இத்தினத்தை கொண்டாடுவதற்கான முக்கிய நோக்கம் இரத்த தானம் வழங்குபவர்களை கௌரவப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். எந்தவொரு வெகுமதியோ அல்லது ஊதியமோ இன்றி இரத்ததானத்தை வழங்குவோருக்கு நன்றி செலுத்துதல். நெருக்கடியான சூழ்நிலையில் உயிர் காக்கும் விலைமதிப்பற்ற வளத்தினை ஒழுங்காக வழங்கும் அற்புதமான, விசேடமான தொண்டர் அணியைச் சேர்ந்தவர் என்ற மன நிலையை இரத்ததானம் புரிவோருக்கு ஏற்படுத்துதல். சுகதேகியாக உள்ள நண்பர்களையும் உறவினர்களையும் எவ்வித வெகுமதியோ அல்லது ஊதியமோ இன்றி இரத்ததான நடவடிக்கைகளில் பங்கேற்க ஊக்கமளித்தல், ஒரு குடும்ப அங்கத்தவருக்கு இரத்தம் தேவைப்பட்ட சந்தர்ப்பத்தில் இரத்ததானம் செய்தவரை தொடர்ந்தும் இத்தகைய தொண்டர் பணியில் ஈடுபட ஊக்குவித்தல், இரத்ததானம் செய்வோருக்கு எவ்வாறு சுகமான வாழ்வினை மேற்கொள்ள முடியும் எவ்வாறு தமது இரத்தத்தை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்பது பற்றி அறிவுறுத்துதல், உலக இரத்ததான இயற்கை நிகழ்ச்சிகள் பற்றிய ஆர்வத்தைத் தூண்டுதல் போன்றனவாகும்.

எனவே, இது விடயமாக நாங்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இரத்ததானம் என்பது ஓர் உயிரைக் காக்க நாங்கள் வழங்கும் பங்களிப்பு. இந்த உணர்வினை இத்தினத்தில் உறுதியாக எமது மனங்களில் பதித்துக் கொள்வோம்.

சாதாரண எடையுள்ள ஒரு ஆரோக்கியமான மனிதனின் உடலில் 5 முதல் 6 லீற்றர் இரத்தம் உள்ளது. அதில், இருந்து வெறும் 300 முதல் 350 மில்லிலீற்றர் (ஒரு யூனிட்) இரத்தம் மட்டுமே தானத்தின் போது பெறப்படும். அவ்வாறு கொடுத்த இரத்தத்தின் அளவு இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் சாதாரண உணவிலேயே மீண்டும் உற்பத்தியாகிவிடும். 3 மாதங்களுக்கு ஒரு முறை எந்தவித பாதிப்பும் இன்றி இரத்ததானம் செய்யலாம். இரத்ததானம் செய்வதற்கு 5, 10 நிமிடங்கள் போதும். பொதுவாக 18-60 வயதுக்கிடைப்பட்ட சுகதேகிகளால் இரத்ததானம் செய்ய முடியும்.

இரத்ததானம் அளிப்பதால் நமது உடலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. உடலில் இருந்து இரத்தம் எடுக்க 5 அல்லது 10 நிமிடங்கள் மட்டுமே ஆகும். ஆனால் இரத்ததானம் அளித்த பிறகு 10, 15 நிமிடங்கள் ஓய்வெடுக்கச் சொல்லி பிறகுதான் அங்கிருந்து அனுப்புவார்கள். எனவே மொத்தமாகவே இரத்ததானம் அளிக்க 30 நிமிடங்கள் போதும். இரத்ததானம் அளித்த பிறகும் கூட அவரவர் தங்களது அன்றாட வேலைகளில் எப்போதும் போல் ஈடுபடலாம். எந்தச் சிக்கலும் இருக்காது.

### இரத்ததானம் அளிப்போர் அடையும் நன்மைகள்

இரத்தப் பிரிவு, இரத்தத்தில் மஞ்சள் காமாலை, மலேரியா, பால்வினை நோய் மற்றும் எயிட்ஸ் கிருமிகள் உள்ளதா? என்று பரிசோதிக்கப்பட்டு இரத்ததானமளிப்பவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்ததானம் செய்வது பிறர்நலன் காப்பதற்கு மட்டுமல்ல, தன்னலன் காப்பதற்கு மட்டுமல்ல தன்னலன் மேம்படுவதற்கும் உதவும்.

இரத்ததானம் செய்வது இயற்கையாக புதிய இரத்தம் உடலில் ஏற்றப்படுவதற்குச் சமம். தற்போதைய பல்வேறு ஆய்வுகளில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்பவர்களுக்கு மாரடைப்பு (Heart attack) ஏற்படும் வாய்ப்பு குறைவு என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஹிமோகுளோபின் (Heamoglobin) அளவினை கட்டுப்படுத்தவும் சமச்சீராக பராமரிக்கவும் இரத்ததானம் பயன்படுகிறது. இரத்ததானம் செய்வதன் மூலம் இரத்த அழுத்தம் சீராக பராமரிக்கப்படுகின்றது. இதன்மூலம் பலவிதமான நோய்கள் தவிர்க்கப்படுகின்றன.

இரத்ததானம் செய்வதன் மூலம் எந்தப் பின்விளைவுகளும் ஏற்படாது. மயக்கம் ஏற்படுதல் போன்றவை அனைத்தும் பயத்தினாலேயே என்பதுதான் உண்மை. மயக்கம் ஏற்படின் உடனடியாக கால்களை மேலே தூக்கியவாறு தரையில் படுக்க வைக்க வேண்டும். அல்லது கால்களுக்கு இடையில் தலையினை வைத்தவாறு அமர வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் உடனடியாக பழைய நிலைக்கு திரும்பி விடுவர்.

உலகளாவிய ரீதியில் எத்தனை வகையான தானங்கள் காணப்பட்டாலும் உயிர் காக்கும் தானமாக இரத்த தானத்தினை குறிப்பிட்டால் மிகையாகாது. பிறருக்கு கொடுப்பதிலே அதியுயர் உயிர் காக்கும் சொத்தாக இரத்த தானம் விளங்குகிறது. இரத்த அணு உற்பத்தி என்பது உடலில் எப்போதும் நடந்து கொண்டிருக்கும் பணி.

எனவே இரத்ததானம் செய்வதால் உடலுக்கு பாதிப்போ பலவீனமோ ஏற்பட வாய்ப்பில்லை. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் மிகவும் உயரிய செயல் இவ் இரத்ததானமாகும்.

### இலங்கையில் இரத்ததானம்

இலங்கையில் இரத்த மேற்றும் முறை 1950 களில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு 1968 ஆம் ஆண்டு முதற் தடவையாக இரத்ததானம் பெறும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையிலுள்ள உறுதியான அரசாங்க ஆதரவும் சிறந்த சமூக ஊக்குவிப்பும் நாடளாவிய ரீதியில் பரந்த குருதி மாற்றீட்டு சேவையை நடத்துவதற்கு காரணமாகவுள்ளது என உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் டாக்டர் பூனம் கேற்ரபால் சிங் ஒருமுறை தெரிவித்துள்ளார். "பாதுகாப்பான குருதி மாற்றீட்டுக்காக வெகுமதியளிக்கப்படாத தன்னார்வக் குருதிக்கொடையாளர்களை நாங்கள் அதிகமாக எதிர்பார்க்கிறோம்" என டாக்டர் கேற்ரபால் சிங் வலியுறுத்தியுள்ளார். நம்பகமானதும் போதுமான அளவு பாதுகாப்பான குருதி விநியோகமானது வெகுமதியளிக்கப்படாத தன்னார்வக் குருதிக் கொடையாளர்களின் உறுதியான தொடர்ச்சியான பங்களிப்பின் மூலமே சாத்தியமாகும் எனவும் தெரிவித்தார்.

உத்தரவாதப்படுத்தி வழங்க இரத்ததானம் செய்வோரின் தொகை இன்று அதிகரிக்கப்பட வேண்டும் என்பதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. இரத்ததானம் என்பது இன்னொருவருக்கு இரத்தத்தை வழங்கும் செயற்பாடாகும். இரத்ததானம் செய்வதன் மூலம் அக்கொடையாளிக்கு இரத்த அழுத்தம் சீராக பராமரிக்கப்படுகின்றது. இதன் மூலம் பலவிதமான நோய்கள் தவிர்க்கப்படுகின்றன. இரத்ததானம் செய்வதன் மூலம் எந்த பின்விளைவுகளும் ஏற்படாது என்கிறார்கள். இரத்ததானம் செய்வது பலவிதமான நன்மைகளை நமக்கும் பிறருக்கும் அளிக்கின்றது. இரத்ததானம் செய்வதினைப் பற்றிய அறியாமையை உடைத்து அனைவரும் இரத்ததானம் செய்வோம். "பிறரைக் கெடுத்து வாழ்வது வாழ்கையல்ல. பிறருக்கு கொடுத்து வாழ்வதே வாழ்க்கை" ஆகவே எம்மால் முடியுமானவரை பிறருக்கு இரத்ததானம் செய்வோம்.

ம.பிரான்சிஸ்க், ஆசிரியர்,
யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

# செய்தித்துளிகள்

## அதிபரின் மணிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கணேச மகா வித்தியாலய அதிபர் நாகமுத்து நாகராசாவின் மணிவிழா நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் புங்குடுதீவு கணேச மகா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறும். (இ)

## சாவகச்சேரியில் இரத்ததான முகாம்

(சாவகச்சேரி )

சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி பழையமாணவர்களும் சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7மணி தொடக்கம் பி.ப. 2மணிவரை நடத்தப்படவுள்ளது. (இ-29)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று புதன்கிழமை இரத்ததான நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. இதில் பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். காலை 9மணியில் இருந்து மாலை 4மணிவரை இரத்ததானம் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)

## புதிய அமைச்சுக்கள் வாழ்க்கைச் சுமை

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டு மக்கள் குறித்து சிறு துளியளவும் சிந்திக்காது, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் புதிய அமைச்சுப் பதவிகளை வழங்கி வருவதாக ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினரும், தொழிற்சங்கத் தலைவருமான வசந்த சமரசிங்க குற்றம்சாட்டினார்.

நாடு பொருளாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் அரசியல் ரீதியாக பலத்தை தக்கவைத்துக் கொள்வதற்குப் புதிது புதிதாக அமைச்சுப் பதவிகள் வழங்குகின்றது. மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பதே இதனால் நடைபெறுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## கத்தியால் குத்திக் காயப்படுத்திய நிகழ்ச்சி தொகுப்பாளர் மறியலில்

(கொழும்பு)

நபர் ஒருவரை கத்தியால் குத்தி காயப்படுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் மஹேஷ் நிஸ்ஸங்க இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று மஹரை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 9ஆம் திகதி வத்தளை, எடேரமுள்ள பகுதியில் குறித்த தாக்குதல் இடம்பெற்றிருந்ததுடன் அது தொடர்பில் குறித்த நபர் நேற்று பிற்பகல் கடவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடன் பெறும் சாதனையை முறியடித்துள்ளார் ரணில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 10 வருட கால ஆட்சியில் 7 ட்ரில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடன் பெறப்பட்டுள்ள நிலையில் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 3 வருட காலத்திற்குள் 4 ட்ரில்லியன் ரூபா கடனை பெற்றுள்ளது. ஆகவே கடன் பெறும் சாதனையினை பிரதமர் ரணில் முறியடித்துள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். வஜிராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)




# ஜெயித்துக் காட்டுவோம்!



மகாகவி பாரதியிடம் ஒரு அன்பர் கேட்டார், "நான், தான தர்மம் செய்து புண்ணிய பலனை அடைய விரும்புகிறேன். அன்ன தானம் செய்யலாமா? ஆலய திருப்பணிக்கு பணம் தரலாமா? வேறு விதமான அறப்பணி செய் யலாமா? புண்ணியம் அதிகம் தருவது எது?

பாட்டாலே பதில் கொடுத்தார் பாரதியார்.

"இன்னரும் கனிச்சோலை கள் செய்தல்
இனியநீர் தண்சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத் தறிவித்தல்"

இந்த உலகில் ஒருவன் அனைத்து வளமும் பெற அடிப்படையானது கல்விதானே. எனவே, அறிவொளியை பரவச் செய்தலே அதிக புண்ணியம் தரும் என்கிறார் மகாகவி. உருவத்தில் மனிதர்களாக இருப்பவர்களை, உண்மையில் மனிதர்களாக ஆக்குவது கல்வி தானே!

பள்ளிக்கூடம், கல்லூரி, பல்கலைக்கழகம் என கல்விக்கூடங்களோடு முடிவது அல்ல படிப்பு...

தேர்வில் வினாக்களுக்கு பதில் அளித்தால் மட்டும் போதுமா? வாழ்க்கை என்னும் பாடம் படிக்க, புத்தகங்கள் மூலம் அறிவை தொடர்ந்து நாம் பெற்றாக வேண்டும்.

மகான் ஒருவர், "அறிவை தேடுங்கள். அது நம்மை ஆற்றல் உடையவராக ஆக்குகிறது. அறிவு தனிமையில் நமது தோழன். இன்பத்திற்கு வழிகாட்டி. துன்பத்திலோ ஆதரவாளி. பகைவர்களிடம் இருந்து நம்மை காக்கும் கேடயம்" என கூறுகின்றார்.

"கற்க கசடற கற்பவை" என்று சொன்ன வள்ளுவர் "சாந்துணையும் கல்லாதவாறு" என்கின்றார். அப்படியென்றால் என்ன பொருள் தெரியுமா?

சாகும் வரை ஒருவன் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். சுவாசிப்பை நிறுத்தும் வரை வாசிப்பை நாம் தொடர வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

மாவீரன் பகத்சிங்கிற்கு தூக்குத் தண்டனை என தீர்ப்பு முடிவானது. உயிர் போவது உறுதி என தெரிந்தும் பகத்சிங், பயம் இல்லாமல் புத்தகம் ஒன்றை படித்தான்.

தூக்கு மேடைக்கு அழைக்க வந்த சிறைக் காவலர்களிடம், "சிறிது நேரம் கழித்து அழைத்து செல்லுங்கள். லெனின் எழுதிய அரசியலும், புரட்சியும் நூலை படித்துக் கொண்டிருக்கிறேன். வாசித்து முடித்ததும் வருகின்றேன்" என்றான்.

மாவீரன் பகத்சிங் போலவே இறுதி மூச்சு உள்ள வரை புத்தகத்தோடு இணைந்திருந்தார் அண்ணாத்துரை. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவர் அடையாறு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். அறுவை சிகிச்சைக்காக வந்த அமெரிக்க மருத்துவர் மில்லரிடம், "ஒருநாள் கழித்து அறுவை சிகிச்சை செய்யுங்களேன்" என்றார்.

"நல்ல நாள் பார்க்கிறாரோ" என்று எண்ணிய மில்லர், "ஏன் வேண்டாம் என்கிறீர்கள்" என்று கேட்க, அண்ணாத்துரை சொன்ன பதில் என்ன தெரியுமா?

"மேரீ கோரலியின் புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறேன். முடிக்க இன்னும் ஒரு நாள் ஆகும். அதன் பிறகு சிகிச்சையை வைத்து கொள்ளுங்கள். இந்த நல்ல நூலை வாசித்து முடித்த பிறகு நான் வானுலகம் போனாலும் வருத்தப்படமாட்டேன்" என்றார்.

அறிவுத்தேடல் என்பது உயிர் உள்ள வரை அவசியம் என்பதை அறிஞர்களின் வாழ்வு மூலம் அறிந்த பின்னும், வாசிக்கும் பழக்கத்தை நாம் நேசிக்காமல் இருக்கலாமா?

ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேற விரும்புகிறோம். அவரவர் ஏற்ற பணியில் அற்புதங்களை நிகழ்த்தவே எண்ணுகிறோம். ஆனால் வெற்றி என்பது விரைவாக வருமா என்ன?

முட்டி, மோதி, விழுந்து, எழுந்து, பொறுமை காத்து, போராடி பல அனுபவங்களை பெற்ற பிறகு,தானே வாழ்வில் ஜெயிக்க முடிகிறது. ஆனால் ஏற்றத்தாழ்வுகள் எப்படி ஏற்படுகிறது என்பதை அந்தந்த துறை சார்ந்த அறிஞர்களின் புத்தகங்களை படிப்பதால் மட்டுமே நம்மால் அறிய முடியும்.

"கிங்ஸ்லி" என்ற அறிஞர், "புத்தகங்கள் மிக விந்தையானவை. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்பவர்களிடமும், நூற்றாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவர்களிடமும் நேரடியாக உரையாடி அவர்களின் அனுபவங்களை பெறச் செய்கின்றன.

"போர்க்களத்தே பரஞான மெய்கீதை புகன்றது யாருடைய வாய்?" என்று தேசியகவி பாரதியார் புகழும் கீதை, கடவுளால் மனிதனுக்கு தரப்பட்ட புத்தகம்.

மனிதன் கடவுளுக்கு தந்த நூலாக மாணிக்கவாசகரின் திருவாசகம் இருக்கிறது.

மனிதன் மனிதனுக்கே தந்த பெருமை மிக்க வாழ்வியல் நூலாக இருப்பது திருக்குறள்.

"நம்மவர்கள் மதுரைக்கு போனால் மல்லிகைப்பூ வாங்குவர். சேலத்திற்கு போனால் மாம்பழம் வாங்குவர். மணப்பாறைக்கு போனால் முறுக்கு வாங்குவர். ஆனால் எங்கு போனாலும் புத்தகம் மட்டும் வாங்குவதில்லை" இப்படி குறைபட்டுக் கொண்டார் அண்ணாத்துரை.

மனிதன் உருவாக்கியதில் முக்கியத்துவம் வாய்ந்த விடயம் புத்தகம் என்பதை அறிந்தும், அதை பயன்படுத்தி முன்னேறத்தெரியாதவர்களாக நாம் இருக்கலாமா?




- ❖ 1789-பவுண்டி என்ற பிரித்தானியக் கப்பலின் மாலுமிகளின் கிளர்ச்சியை அடுத்து கப்பலின் தலைவனுடன் சேர்ந்து சிறிய படகொன்றில் தப்பிய 19 பேர் 7,400 கி.மீ. தூரம் பயணித்து திமோரை அடைந்தனர்.
- ❖ 1800- நெப்போலியனின் பிரெஞ்சு இராணுவத்தினர் வடக்கு இத்தாலியில் ஆஸ்திரியர்களுடன் போரிட்டு வெற்றி பெற்று இத்தாலியை மீளவும் கைப்பற்றியது.
- ❖ 1807- நெப்போலியனின் பிரெஞ்சு இராணுவத்தினர் போலந்தின் பிரீட்லாந்து என்ற இடத்தில் ரஷ்யப் படைகளுடன் மோதி வெற்றி பெற்றனர்.
- ❖ 1846-கலிபோர்னியாவின் சொனோமா என்ற இடத்தில் குடியேறிய ஆங்கிலேயர்கள் மெக்சிக்கோ மீது போரை ஆரம்பித்து கலிபோர்னியாவைக் குடியரசாக அறிவித்தனர்.
- ❖ 1872-கனடாவில் தொழிற் சங்கங்கள் அதிகார பூர்வமாக்கப்பட்டன.
- ❖ 1940-போலந்தின் 728 போர்க் கைதிகள் நாசிகளின் அவுஷ்விட்ஸ் வதை முகாமின் முதலாவது சிறைக்கைதிகளாக சேர்க்கப்பட்டனர்.
- ❖ 1967- சீனா தனது முதலாவது ஐதரசன் குண்டைச் சோதித்தது.
- ❖ 2002-கராச்சியில் அமெரிக்க தூதராலயத்துக்கு முன்னர் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 12பேர் கொல்லப்பட்டு 50 பேர் காயமடைந்தனர்.
- ❖ 2003-விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டதில் 11 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.
- ❖ 2007-காசாப் பகுதி தமது முழுக்கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக ஹமாஸ் இயக்கம் அறிவித்தது.

**பிறப்புகள்**

- ❖ 1928-சேகுவேரா, அர்ச்செந்தீன-கியூப மருத்துவர், மார்க்சியவாதி, புரட்சித் தலைவர், அரசியல்வாதி (இ. 1967)
- ❖ 1946-டோனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவின் 45ஆவது அரசுத்தலைவர்
- ❖ 1968-ராஜ் தாக்ரே, மகாராட்டிர அரசியல்வாதி
- ❖ 1986-பிந்து மாதவி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை
- ❖ 1969-ஸ்டெபி கிராப், செருமானிய தென்னிசு வீராங்கனை

**இறப்புகள்**

- ❖ 1920-மக்ஸ் வெபர், செருமானிய சமூகவியலாளர், பொருளியலாளர் (பி. 1864)
- ❖ 1961-க.சீ.கிருட்டிணன், இந்திய இயற்பியலாளர் (பி. 1898)
- ❖ 1965-கந்தமுருகேசனார், ஈழத்துப்பெரியார், மூதறிஞர் (பி. 1902)
- ❖ 1986-ஹோர்ஹே லூயிஸ் போர்கெஸ், அர்ச்செந்தீன எழுத்தாளர் (பி. 1899)
- ❖ 2001-சிறீபதி சந்திரசேகர், இந்தியக் கல்வியாளர், நூலாசிரியர், அரசியல்வாதி (பி. 1918)
- ❖ 2012-காகா ராதாகிருஷ்ணன், திரைப்பட நடிகர் (பி. 1925)
- ❖ 2014-தெலுங்கானா சகுந்தலா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி. 1951)

**சிறப்பு நாள்**

- ❖ விடுதலை நாள் (மலாவி)
- ❖ விடுதலை நாள் (போக்லாந்து தீவுகள், தெற்கு யோர்சியா மற்றும் தெற்கு சண்ட்விச் தீவுகள்)
- ❖ உலக குருதிக் கொடையாளர் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 110 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 130 | 115 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 290 | 300 | 300 |
| தக்காளி | 160 | 250 | 130 | 240 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 50 | 40 |
| கோவா | 160 | 160 | 60 | 120 | 120 |
| கரட் | 200 | 400 | 200 | 320 | 400 |
| பூசணி | 40 | 40 | 20 | 40 | 40 |
| புடோல் | 100 | 100 | 70 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 40 | 35 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 110 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 350 | 130 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 70 | 60 | 100 |
| பயற்றங்காய் | 150 | 160 | 110 | 100 | 120 |
| லீக்ஸ் | 300 | 400 | 200 | 300 | 400 |
| பீற்றூட் | 120 | 100 | 60 | 100 | 120 |
| கறிமிளகாய் | 250 | 400 | 70 | 200 | 320 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 140 | 150 | 240 |
| போஞ்சி | 250 | 400 | — | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | — | — | 160 |
| கீரை – 1பிடி | 40 | 40 | 40 | 50 | 50 |
| தேசிக்காய் | 100 | 110 | 100 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-40 | 25-60 | 75 | 30-75 |
| இராசவள்ளி | 180 | 200 | — | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | 280 |
| முள்ளங்கி | 100 | 150 | 35 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 45 | 50 | 10 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 120 | — | 70 | 120 |

யானை சேற்றில் அமிழும்போது தவளையும் எட்டி உதைக்கும்.
– சாணக்கியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கையில் இந்து மதம் அழிவதற்கு இன்னும் கனகாலம் இல்லை

இந்து கலாசார அமைச்சின் பிரதி அமைச்சராக இஸ்லாமியரான காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டுள்ளார் எனும்போது இதைவிட்ட கிரந்தம் வேறு எதுவும் இல்லை எனலாம்.

இந்து சமயத்துக்கான பிரதி அமைச்சராக மஸ்தானை நியமிக்கின்றவர்கள் தங்கள் பௌத்த மதத்துக்கு மஸ்தானைப் பிரதி அமைச்சராக நியமிப்பார்களா? அல்லது கத்தோலிக்க மதத்துக்கு ஒரு இஸ்லாமியரை பிரதி அமைச்சராக நியமிக்க முடியுமா?

சரி, இதைத்தான் செய்ய முடியாது என்றால், இஸ்லாமிய சமயத்துக்குப் பொறுப்பான பிரதி அமைச்சராக இஸ்லாமியர் தவிர்ந்த வேறு எந்தச் சமயம் சார்ந்தவரையேனும் நியமிக்க முடியுமா?

ஆக, எல்லோரும் ஏறி இருந்து சவாரி செய்யக்கூடிய மதமாக இந்து சமயம் இருப்பதால், இஸ்லாமியர் ஒருவரை இந்து கலாசார பிரதி அமைச்சராக இலங்கை அரசு நியமித்துள்ளது.

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்ட இலங்கைத் தீவு சிவபக்தனாகிய இராவணனால் ஆளப்பட்டது.

ஆனால் இன்று இந்து மதத்தை அழித்து ஒழிப்பதற்கு ஏகப்பட்ட சதித் திட்டங்கள் நடக்கின்றன.

மத மாற்றம் என்ற பெயரில் கூலிப்படைகள் இந்து சமயத்தவர்களைத் தத்தம் சமயத்துக்கு இழுக்கின்றனர்.

இதுதவிர, இந்து ஆலயங்களுக்கு அருகில் தத்தம் வழிபாட்டு நிலையங்களை அமைப்பதிலும் பிற சமயங்கள் அதீத தீவிரம் காட்டுகின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், இந்து சமய அமைப்புக்கள் ஏனோதானோ என்ற நிலைப்பாட்டில் இருப்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

மாட்டிறைச்சிக் கடைகளை ஆதரித்து அதற்காகக் குரல் கொடுக்கக்கூடியவர்கள் நம் இந்து சமயத்தில் இருக்கும்போது இந்து சமயம் உய்வு பெறுவதென்பது முடியாத காரியமே.

எதுஎவ்வாறாயினும் கிழக்கு மாகாணத்தில் இந்து சமயத்தவர்கள் இஸ்லாமிய மதத்துக்கு மாற்றப்படுகின்றனர்.

தென்பகுதியில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் ஒவ்வொரு நாளும் மதம் மாறுதல் பற்றிய விளம்பரம் வந்த வண்ணமுள்ளது.

இதுபற்றி சரியான ஆய்வு செய்யப்பட்டால், கிழக்கு மாகாணத்தில் இந்து சமயத்தவர்களை முஸ்லிம் மக்கள் ஏதோவொரு வகையில் மதமாற்றம் செய்கின்றனர் என்பது தெரியவரும்.

இவ்வாறு இடம்பெறும் மதமாற்றத்தை மேலும் துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவர் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கலாம் என அனுமானிப்பதில் தவறில்லை.

என்ன செய்வது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இந்து சமயத்துக்கு அறவே இடமில்லை எனும்போது இந்து சமயத்துக்கான பிரதி அமைச்சராக மஸ்தான் இருந்தால் என்ன? மரிக்கார் இருந்தால் என்ன? என்பதே நிலைமை.

எதுவாயினும் இந்து கலாசார பிரதி அமைச்சுப் பதவி எனக்கு வேண்டாம் என்று மஸ்தான் கூறியிருந்தால் அது அவருக்கு பெருமையைக் கொடுத்திருக்கும் என்பதை மட்டுமே இப்போதைக்கு கூறமுடியும்.

# வடக்கு மாகாண பிரதம செயலாளரை நீதிமன்றில் முன்னிலையாக அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பிரதம செயலாளரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம பிரேமசங்கர் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்காக வடக்கு மாகாண பிரதம செயலாளரால் விடுக்கப்பட்ட விண்ணப்பங்கோரலை இரத்து செய்ய உத்தரவிடுமாறு கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் உறுதிகேள் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணையின்போதே எதிர் மனுதாரரான பிரதம செயலாளரை இன்று மன்றில் முன்னிலையாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று கட்டளையிட்டது.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு தகுதியானவர்களை விண்ணப்பிக்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அண்மையில் பத்திரிகை ஊடாக விண்ணப்பங்கோரல் விளம்பரத்தை வெளியிட்டார்.

பதில் அல்லது நிரந்தர கல்விப் பணிப்பாளராக தற்போது கடமையாற்றும் கல்வி வலயத்தில் 3 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்திருக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

இந்த நிபந்தனை சேவைப் பிரமாணக் குறிப்புக்கு முரணானதெனக் குறிப்பிட்டு யாழ்.தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் இளங்கோ, சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர் மனுதாரர்களாக முறையே வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப் பங்கோரலையும் அதனை மேற்கொண்டு செயற்படுத்துவதனையும் இடை நிறுத்தி வைக்கும் இடைக்காலத் தடைக் கட்டளை வழங்கவேண்டும்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கோரலை விடுத்த முதலாவது எதிர்மனுதாரர் அவரது பொதுக் கடமையை மீறிய இந்த சட்டவிரோத விண்ணப்பங்கோரலை வெற்றும் வறிதானதுமாக உறுதிகேள் எழுத்தாணை கட்டளையை வழங்கவேண்டும்.

வழக்குச் செலவு மற்றும் மன்றால் நியாயமானது எனக் கருதும் பிற நிவாரணங்களும்" என மனுதாரரால் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, முதலாவது எதிர் மனுதாரரான வடக்கு மாகாண பிரதம செயலாளர் மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் உத்தியோகத்தர் ஒருவர் மன்றில் முன்னிலையானார். இந்த நிலையிலேயே எதிர் மனுதாரரான பிரதம செயலாளரை மன்றில் முன் னிலையாக மன்று கட்டளையிட்டது.

அத்துடன், மனுதாரரின் முதலாவது கோரிக்கை தொடர்பான இடைக்காலத் தடை தொடர்பான மன்றின் கட்டளை இன்று வழங்கப்படும் எனக் குறிப்பிட்டு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.(இ-7)

# சைவ மக்களை அரசு அவமதித்துவிட்டது தமிழர் சமஉரிமை இயக்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இந்துமத விவகார பிரதி அமைச்சராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு தமிழர் சமஉரிமை இயக்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. சைவ மக்களை அவமதித்த அரசாங்கத்தின் செயலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் மேற்படி இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழர் சமஉரிமை இயக்கத்தின் செயற்பாட்டாளர்களான வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா, வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் தா.நிகேதன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, இந்து விவகார பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளமை ஒட்டுமொத்த இந்து மக்களையும் வேதனையடையச் செய்துள்ளது.

கடந்த காலங்களில் இந்து மத விவகாரங்களுக்கு என தனி அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டு இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், நல்லாட்சி அரசாங்கம் எனக் கூறிக் கொள்ளும் தற்போதைய அரசு, முஸ்லிம் இனத்தவர் ஒருவரை இந்து மத விவகாரங்களுக்கான பிரதி அமைச்சராக நியமித்ததன் மூலம் இந்து மதத்தை அவமதித்திருக்கின்றது.

ஜனாதிபதியோ பிரதமரோ இந்து அல்லது இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஒருவரை பௌத்த விவகாரங்களுக்கான அமைச்சராக நியமிப்பார்களா? அல்லது இந்து அல்லது பௌத்த மதம் சார்ந்த ஒருவரை இஸ்லாம் விவகார அமைச்சராக நியமிக்க முடியுமா? அந்த மதத்தவர்கள் இதை ஏற்றுக்கொள்வார்களா?

எனவே, மேற்படி பிரதி அமைச்சர் நியமனத்தை ஒட்டுமொத்த சைவ மக்களின் சார்பிலும் தமிழர் சமஉரிமை இயக்கம் மிகக் கடுமையாக எதிர்க்கின்றது. அரசின் இந்தச் செயலுக்கு எமது வன்மையான கண்டனத்தையும் வெளிப்படுத்துகின்றோம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 67 வருடங்களாக அடிமை வாழ்க்கை வயோதிபப்பெண் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

கண்டியில் 67 வருடங்களாக அறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண்ணொருவரை பொலிஸார் மீட்டுள்ளனர்.

7 வயதில் இருந்து 67 வருடங்களாக வீட்டின் கூடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பெண்ணை, பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

ஒழுங்காக உணவு, நீர் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் தொடர்பில் நபர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டிற்கமைய அவர் மீட்கப்பட்டுள்ளார்.

மாவவெல்ல, மொல்லிகொட பிரதேசத்தை சேர்ந்த இந்த வயோதிப பெண்ணை மீட்க பொலிஸார் சென்றபோது, அவர் மயக்கமடைந்த நிலையில் இருந்துள்ளார்.

உடனடியாக மீட்கப்பட்ட அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அடைக்கப்பட்ட பெண் திருமணமாகாத 75 வயதான முத்துமெனிக்கே என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பெற்றோரிடம் இருந்து பிரித்து 7 வயதில் மாவனெல்ல பிரதேசத்திற்கு அழைத்து வந்த போதிலும் அவருக்கு கல்வி கற்க அனுமதிக்காமல் வீட்டு வேலை செய்ய விடப்பட்டுள்ளார். திருமணமும் செய்து வைக்காமல் பெண் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய எந்த வொரு வசதியும் அவருக்கு வழங்கப்படவில்லை.

அறைக்குள் அடைக்கப்பட்ட பெண்ணிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொள்ள பொலிஸார் முயற்சித்த போதிலும், அவரால் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு பெண்ணின் இந்த நிலைமைக்கு காரணமானவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## இந்து மத விவகார பிரதியமைச்சராக காதர் மஸ்தான் நியமனம் காரைநகரில் எதிர்த்து தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இந்துமத விவகார பிரதி அமைச்சராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து காரைநகர் பிரதேச சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. காரைநகர் பிரதேச சபையின் 4ஆவது சபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, இந்து விவகார பிரதி அமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமனம் ஒட்டுமொத்த இந்து மக்களையும் வேதனையடையச் செய்துள்ளது. இந்த நியமனத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்து காரைநகர் பிரதேச சபை உப தலைவர் ஜி.பாலச்சந்திரன் பிரேரணை ஒன்றை முன்வைத்தார். மேலும் நல்லாட்சி அரசாங்கம் எனக் கூறிக் கொள்ளும் தற்போதைய அரசு முஸ்லிம் இனத்தவர்ஒருவரை இந்து மத விவகாரங்களுக்கான பிரதி அமைச்சராக நியமித்ததன் மூலம் இந்து மதத்தையும் மக்களையும் கொச்சைப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த விடயத்தில் ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த அமைச்சு பதவியை தமிழர் ஒருவருக்கு வழங்க வேண்டும் என சபையில் தெரிவித்திருந்தார்.

குறித்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் பிரேரணையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இந்து மத விவகார அமைச்சர் டி எம் சுவாமிநாதனுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-9)

# மாவட்ட கரப்பந்தாட்டத்தொடர் மெதடிஸ் பெண்கள் அணி சம்பியன்

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் அணி மாவட்டச் சம்பியனானது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் பலப் பரீட்சை நடத்தின.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:18, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்



பற்றி 2:0 என்ற செற் கணக்கில் நேர்செற் வெற்றிபெற்றது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. (க)

# சிறுவர் பாடசாலையின் விளையாட்டுவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் கலைமன்ற சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மன்றத் தலைவர் ப.அஜித்குமார் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவையாளர் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ், பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரும் பேராதனை பல்கலைக்கழக ஓய்வு பெற்ற விரிவுரையாளருமான தி.ஆனந்தமூர்த்தி, வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை கிருபானந்தன், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினரும் ஓய்வு பெற்ற பொறியியலாளரும் மன்றக் காப்பாளருமான த.துரைலிங்கம், மன்றக் காப்பாளர் இதம்பையா, சங் கானைப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் இரகுநாதன் சாந்தரூபி, வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தலைவி பன்னீர் செல்வம் நிம்மதி ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# வடமாகாண அணியின் போராட்டம் வீணானது போராடி வென்றது மேல் மாகாண அணி

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில், 19 வயது மாகாண அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் கொழும்பில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இலங்கையிலுள்ள அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் (சப்ரகமுவ மாகாணம் தவிர்ந்து) மேல் மாகாணத்தின் 3 அணிகளும் என மொத்தம் 10 அணிகள் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாடசாலைகள் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் மற்றும் பயிற்சிப் போட்டிகள் என்பவற்றிலிருந்து மாகாண அணிகளுக்கு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தென்மாகாணம், மத்திய மாகாணம், மேல்மாகாணம் (தெற்கு), மேல் மாகாணம் (மத்தி), மேல் மாகாணம் (வடக்கு), வடமாகாணம், கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம், ஊவா மாகாணம், வடமத்திய மாகாணம் என 10 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்கேற்கின்றன.

அணிகள் ஏ, பி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிலுள்ள அணிகளுக்கிடையில் லீக் முறையில் போட்டிகள் நடைபெற்று, ஒவ்வொரு குழுவிலும் முதலிடம் பெறும் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும். இறுதிப்போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மதுசன், ஏ.ஜெயதர்சன், ஆர்.ராஜ்கிளின்டன், வி.விஜஸ்காந்த், ரி.விதுசன், கே.இயலரசன் ஆகியோரும், சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம்.அபினேஸ், என்.சௌமியன், ரி.டினோசன் ஆகியோரும், சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த என்.மொனிக் நிதுசன், ஏ.இவன் றொசாந்தன் ஆகியோரும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த பி.அஜிந்தன், ஏ.தனுஸன் ஆகியோரும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.கபிலன், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பானுஜன், மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.வரலக்சன் ஆகியோரும் வடமாகாண அணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண அணி தனது முதல் போட்டியில் மேல் மாகாண அணியை எதிர்த்து மோதியது. இந்தப் போட்டி கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு, தர்ஸ்டன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய வடமாகாண அணி, 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எஸ்.பானுஜன் 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் மேல் மாகாண அணி சார்பாக, பசிந்து உசேதி 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், பிரவீன் நிமேஸ், மஹேஸ் தீக்ஸன ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலளித்தாடிய மேல் மாகாண அணி, இறுதிவரையில் போராடி 34.4 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மகேஸ் தீக்ஸன 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் வடமாகாண அணி சார்பாக, டி.தினேஸன், எஸ்.மதுசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கல்வியங்காடு நொதேன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி. அணிக்கு 7 பேர் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இப் போட்டிகள் அனைத்தும் நொக்கவுட் முறையில் நடைபெறும்.

முதலாம் இடத்தைப் பெற்று சம்பியன் பட்டத்தை வெல்லும் அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் 25,000 ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 15,000 ரூபா பணப்பரிசும் மூன்றாம் இடத்தைப் பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 076 652 6109, 077 345 4865, 077 430 8204 என்ற எண்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளையும் போட்டி விதிமுறைகளையும் அறிந்து கொள்ள முடியும் என விளையாட்டுக்கழக தலைவர் அறிவித்துள்ளார். (க)

# வலைப்பந்தாட்ட பரீட்சை

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படவிருக்கும் வலைப்பந்தாட்ட C,B தர நடுவர்களுக்கான எழுத்துப்பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாணப் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை நிலையமாக யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை விளங்குகின்றது.

வலைப்பந்தாட்ட A தர நடுவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு தெஹிவளை பிரெஸ்பைரேறியன் பெண்கள் பாடசாலையில் நடைபெறும் என யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக் மாதோட்டம் எப்.சி.ருத்திரதாண்டவம்

## அம்பாறை அவஞ்சேர்ஸ் நிலை பரிதாபம்




வடக்கு- கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்கள் கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட் டரங்கில் ஆரம்பமாகியது.

கடந்த 12 ஆம் திகதி இரவு நடைபெற்ற போட்டியில், மாதோட்டம் எப்.சி அணியை எதிர்த்து அம்பாறை அவஞ்சேர்ஸ் அணி மோதியது.

ஆரம்பம் முதலே மாதோட்டம் எப்.சி அணியின் ஆட்டம் மைதானத்தில் மேலோங்கிக் காணப்பட்டது.

இதன் பயனாக முதற்பாதியில் 4 கோல்களை மாதோட்டம் எப்.சி.அணி தள்ளியது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் மாதோட்டம் அணியின் ருத்திரதாண்டவம் மைதானத்தில் நிலைபெற, மேலும் 4 கோல்களை அவ்வணி அடித்தது.

முடிவில் மாதோட்டம் எப்.சி அணி, 08:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (26)

# நாட்டில் குற்றச் செயல்கள் குறைவடைந்துள்ளது

## அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நாட்டினுள் குற்றச் செயல்கள் குறைவடைந்து வருவதை காணக்கூடியதாக உள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக ஜனாதிபதி தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள செயலணி குறித்து, அமைச்சரவையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் கயந்த கருணாதிலக்க இதனை தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மோதல்நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் அந்த பகுதிகளில் சமூகம் மற்றும் பொருளாதாரம் அபிவிருத்திக்காக பல வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் அந்த பிரதேச மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த அந்த வேலைத்திட்டங்களின் ஊடாக போதுமான அழுத்தம் பிரயோகிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த பகுதிகளில் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களை வழிநடத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மீளாய்வுக்கு உட்படுத்தல் என்பனவற்றுக்காக ஜனாதிபதியின் தலைமையின் கீழ் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த செயலணியில் பிரதமர், மாகாண ஆளுநர்கள், மாகாண செயலாளர்கள், இராணுவம் மற்றும் பொலிஸார் உள்ளடங்கலாக இந்த செயலணியை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் அமைச்சரவையின் கவனத்திற்கு எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். (மு)

# உள்நாட்டு கைத்தொழில் துறையினரை பாதுகாக்குமாறு

## தேசிய பொருளாதார சபைக்கு மைத்திரி பணிப்புரை

(கொழும்பு)

உள்நாட்டு கைத்தொழிற்துறையினரைப் பாதுகாத்து நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல் அரசின் கொள்கையாகும் என்பதால் அதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு தேசிய பொருளாதார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட தேசிய பொருளாதார சபை 12ஆவது முறையாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஒன்றுகூடியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்நாட்டு கைத்தொழிற்துறையினர் முகங்கொடுத்திருக்கும் 06 பிரதான பிரச்சினைகள் தொடர்பாக இங்கு ஆலோசிக்கப்பட்டதுடன், பொருளாதார முகாமைத்துவத்தில் மேற்கொள்ள வேண்டிய நாட்டிற்கு தேவையான துரித மாற்றங்கள் மற்றும் குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்டகால செயற்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் செரமிக் சுகாதார உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த செஸ் வரியை நீக்கியமையால் அப்பொருட்களின் விலையுடன் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு போட்டியிட முடியாமையால் அத்துறையில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியை தடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய முன்பிருந்த செஸ் வரிக்கு இணையான சுங்க இறக்குமதி வரியை விதிப்பதற்கான வாய்ப்பு தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் வங்கிக் கடன்களை பெற்றுக்கொள்ள முடியாமையினால் அவர்கள் எது தொழிலை முன்னெடுத்து செல்வதில் ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்கள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கும் பொறுப்பு அனைத்து அரச வங்கிகளுக்கும் இருப்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதிக இலாபம் பெறுவதை மாத்திரம் கருத்திற் கொள்ளாது தேசிய உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலமாக நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்க அரச வங்கிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதற்கமைய பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கும் கிராமிய பொருளாதாரத்திற்கும் கடன் வழங்குவதை அதிகரிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டதுடன், பிரதேச அபிவிருத்தி வங்கியின் முதலீட்டினை வலுப்படுத்துவதன் ஊடாக மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றிகொள்வதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும்மென்பதே தேசிய பொருளாதார சபையின் முடிவாக முன்வைக்கப்பட்டது.

போக்குவரத்து சேவையின் செயற்திறனை அதிகரிப்பதற்காக செயற்படுத்த எண்ணியிருக்கும் "சஹசர" செயற்திட்டத்தின் முக்கியத்துவம் தொடர்பாக கலந்துரையாடியதுடன், பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஒத்துழைப்புடன் அச்செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

சுகாதார சேவைகளான மருத்துவ ஆலோசனை மற்றும் மருத்துவமனை கட்டணங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வற் வரியை நீக்குதல் தொடர்பாக கலந்துரையாடியதுடன், விரைவில் அது தொடர்பான மேலுமொரு கலந்துரையாடலை மேற்கொண்டு தீர்வு காணவும் முடிவெடுக்கப்பட்டது.

தேசிய பொருளாதார சபையால் அனுமதிக்கப்பட்டிருக்கும் தேசிய பொருளாதார செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்குவதற்கு அரச தரப்பு, பாராளுமன்ற உறுப்பினர்களை தெளிவுபடுத்தும் கருத்தரங்கு இம்மாதம் 28ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி வளாகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேசிய பொருளாதார சபையின் பொதுசெயலாளர் பேராசிரியர் லலித் சமரக்கோன் தெரிவித்தார்.

அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரத்தன, மலிக் சமரவிக்ரம, மகிந்த சமரசிங்க, மகிந்த அமரவீர, அர்ஜுன ரணதுங்க, ரிஷாட் பதியுதீன், பாட்டலி சம்பிக்க ரணவக்க, கபீர் ஹசிம், சர்த் அமுனுகம, தயா கமகே, பிரதி அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, அசோக்க அபேசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எச். எஸ்.சமரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்ட நிர்வாக குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (மு)

## இந்து பிரதி அமைச்ச...

த்தை கலைத்து, மக்களின் உரிமையில் தலையிட வேண்டும். எமக்கு எதிராக பல விடயங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. பலவற்றை இழந்து வருகிறோம். இந்துக்களின் விருப்புக்கு மாறாக இந்த நியமனம் நடைபெற்றுள்ளது. உடனடியாக இந்த அமைச்சு நியமனம் வாபஸ் பெறப்பட வேண்டும்.

இது இஸ்லாமிய மக்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இல்லை. இது இந்து மதத்தை பேணுவதற்கான ஒரு போராட்டம். இந்து சமய அலுவல்கள் பிரதி அமைச்சு பதவியை ஏற்ற அமைச்சர் குறித்த பதவியை அவராகவே இராஜினாமா செய்வது நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

இந்து அல்லாத வேறு ஒரு மதத்தை சார்ந்தவர் இந்து கலாசார அமைச்சை நடத்துவாரேயானால் அந்த அமைச்சு தேவை இல்லை அதை இழுத்து மூடிவிட்டு இருக்கட்டும். அணுவணுவாக சித்திரவதை செய்யவும் எமது பண்பாட்டை அழிப்பதற்கும் இத்தகைய பிற சமய ஊடுருவல்களை அரசு செய்து வருகிறது. புதிய அமைச்சர் வரும் வரை போராட்டம் விஸ்தரிக்கப்பட்டு தொடரும்.

நல்லாட்சி அரசில் இந்து சமய அலுவல்கள் பிரதி அமைச்சராக நியமிப்பதற்கு ஒரு சைவ மகன் இல்லையா என்பது எமது கேள்வி. பல சைவர்கள் பாராளுமன்றில் உறுப்பினர்களாக இருக்கும் போது வேற்று மதம் சார்ந்த ஒரு நபரை நியமிப்பது எந்த வகையில் நியாயம். அவர் தானாக அப்பதவியில் இருந்து விலக வேண்டும்.

இது இந்து மக்களுடைய மனங்களை புண்படுத்தும் விடயம். இந்து சமயத்துக்கு மாத்திரம் அல்லாது வேறு எந்தெந்த மத அமைச்சுக்களுக்கும் அந்த மதம் சாராத வரை நியமிப்பது பொருத்தமற்றதொன்றாகவே நாம் கருதுகிறோம்.

இந்த அரசு நல்லாட்சி அரசு என கூறிக் கொண்டு நல்லாட்சிக்கு எதிரான செயற்பாட்டையே தொடர்ந்தும் செய்து வருகிறது. எண்ணிக்கையில் சிறுபான்மையினமாக வாழும் மக்களை பாரபட்சமாக நடத்துகிறது.

எமக்கு எதிராக நடக்கும் அநீதிகளுக்கு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக குரல் கொடுக்க வேண்டும் இல்லை என்றால் எமது பண்பாடு கலாசாரம் என்பன பேரினவாத சக்திகளால் அழிக்கப்படும் கட்டமைப்பு சார் தொடர்ச்சியான இனவழிப்பு நடவடிக்கையாக பார்க்கிறோம். தமிழ் மக்கள் விழித்துக்கொள்ள வேண்டும். போராட தயார் இல்லை என்றால் தமிழ் மக்களின் அழிவை யாராலும் தடுக்க முடியாது என தெரிவித்தனர்.

இந்த போராட்டத்தில் அகில இலங்கை சைவமகாசபை உறுப்பினர்கள், சிவசேனை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (மு-9)

## கண்ணகை அம்பாளின் கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

வண் வடமேற்கு ஆனைக்கோட்டை திருவருள்மிகு கண்ணகை அம்பாள் என வழங்கும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவிலின் வருடாந்த சாந்தீக மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து எதிர்வரும் 27ஆம் திகதி இரதோற்சவமும், 28ஆம் திகதி தீர்த்தோற்சவமும், நடைபெறவுள்ளன. இதேவேளை மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து இளைஞர், மகளிர் மன்றத்தினால் வருடம் தோறும் நடத்தப்படுகின்ற சைவ சமய அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள ஆனைகோட்டை உயரப் புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப படிவங்களை ஆலயத்திற்கு நேரில் வந்தும் அல்லது 0771381441 என்ற தொலைபேசி ஊடாகவும் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என ஆலய நிர்வாகம் மற்றும் இந்து இளைஞர், மகளிர் மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (மு-4)

## மோட்டார் சைக்கிள் விபத்து

## இரு பொலிஸார் படுகாயம்

வீதி சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்த பொலிஸார் மீது முகப்பு வெளிச்சமின்றி வந்த மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் இரண்டு பொலிஸார் படுகாயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வல்லை உப்புரோட் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பொலிஸ் மா அதிபர் பூஜிதஜெசுந்தரவின் பணிப்பிற்கு அமைய கடந்த சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலைவரை பொலிஸாரினால் விஷேட சோதனை நடவடிக்கை ஒன்று நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக வல்லை உப்புரோட் சந்தியில் நெல்லியடி பொலிஸார் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது அதிகாலை 1.00 மணியளவில் சுமார் பத்து வரையான மோட்டார் சைக்கிள்கள் முகப்பு வெளிச்சமின்றி வந்தன .அவ் மோட்டார் சைக்கிள்களை சமிக்ஞை காட்டி பொலிஸார் மறித்த போது மோட்டார் சைக்கிள்களை நிறுத்தாது பொலிஸார் மீது வேகமாக மோதிவிட்டு தப்பிச்சென்றனர்.

இதில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். (மு-60)

## ஆயிரத்து 750 கிராம் கஞ்சாவுடன்

## சாரதி ஒருவர் வவுனியாவில் கைது

யாழ்பாணத்தில் இருந்து கண்டி நோக்கிச் சென்ற அரச பேருந்தின் சாரதி ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது உடமையில் 1.750 கிலோ கிராம் கேரள கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டு ள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி நோக்கிச் சென்ற இந்த பேருந்தை நேற்று புதன்கிழமை மதியம் வவுனியா புதிய பேருந்து நிலையம் அருகே வழிமறித்த போதை தடுப்பு பிரிவினர், அந்த பேருந்தை சோதனை செய்த போதே இந்த கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. (ம)


**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

கணக்காய்வாளர் (audit examiner)
சனி, ஞாயிறு
மு.ப 9.30-3.30 மணிவரை

SLEAS open
பிரதி ஞாயிறு
9.00-3.00 மணிவரை

SLEAS Ltd
பிரதி ஞாயிறு
10.00-3.00 மணிவரை

சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
பிரதி சனி
பி.ப 2.00-5.00 மணிவரை

ICT அலுவலர் தெரிவுக்கு
பிரதி சனி
பி.ப 2.00-5.00 மணிவரை

இலஞ்ச, ஊழல் புலனாய்வு உத்தியோகத்தர்
பிரதி ஞாயிறு
9.00 மணி

D.O, EB Exam
பிரதி சனி
9.30-2.00

தொடர்புகளுக்கு:
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
(கு-29ஓ)

## சகோதரர்கள்...

என்ற சகோதரர்களே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

நண்டு வலை பயன்படுத்தி ஒரு பைபர் படகில் மீன்பிடிக்க இந்த சகோதரர்கள் இருவரும் கடந்த வியாழக்கிழமை தலைமன்னார் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் தொழிலுக்குச் சென்ற படகு புங்குடுதீவில் கரை ஒதுங்கியது. தற்போது மீனவர்களின் சடலங்களும் கரை ஒதுங்கியுள்ளன.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிவான் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (மு)

## மாற்றுவலுவு...

ஆம் திகதி தனது வீட்டில் இருந்து சகோதரியின் வீட்டுக்கு வீதியோரமாக சென்றுள்ளார். இவர் மாற்றுவலுவுடைய நபராக இருப்பதால் கைகளாலேயே ஊர்ந்து சென்றுள்ளார்.

எதிரே நிதானம் தவறிய நிலையில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த நபர் குறித்த நபரை மோதியுள்ளார். இதனால் காயமடைந்த நபர் 15 மீற்றர் தூரம் வீதியில் இழுத்து செல்லப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த குறித்த நபர் உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் குறித்த நபர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (மு-9)

## தலைதெறிக்க...

மூவர் பயணித்துள்ளனர். அவர்கள் வீதியில் நின்ற இளைஞர்களுக்கு வாள்களைக் காண்பித்துள்ளனர்.

அதனை அவதானித்த இளைஞர்கள், வாள்வெட்டுக் கும்பலை துரத்திச் சென்றுள்ளனர். எனினும் வாள்களுடன் சென்றவர்கள் தப்பித்துள்ளனர்.

அந்த மூவரும் கொக்குவில் வராகி அம்மன் கோவிலடியில் பயணித்த போது, பொலிஸாரை அவதானித்துள்ளனர்.

பொலிஸாரைக் கண்டதும் வாள்களை வீதியில் போட்டுவிட்டு மூவரும் மோட்டார் சைக்கிளில் தப்பித்துள்ளனர்.

இதேவேளை, வாள்வெட்டுக் கும்பலைத் துரத்திச் சென்ற மானிப்பாய் பகுதி இளைஞர்கள், சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். (மு)

## மகிந்தவிடம்...

மாகவே, மகிந்த ராஜபக்ஷவை அமெரிக்கத் தூதுவர் சந்தித்திருந்தார். இதன்போது அரசியல் விடயங்கள் பற்றி எதுவும் பேசப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (மு)

## யாழில் 63 பேரு...

சாமி இராதாகிருஷ்ணன் இக்கருத்தை வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

கல்விசார ஊழியர்கள், முகாமைத்துவ உதவியாளர், பாடசாலைகளிற்கான நியமனங்கள் என 63 பேருக்கு தேசிய பாடசாலைகளில் நியமனம் கொடுக்கப்பட்டது என அறிந்தேன்.

இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்ல பிரேரணைக்கு த.தே. கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவளித்ததற்காக சந்தோசமாக கொடுக்கப்பட்டதாக நான் நினைத்தேன்.

ஆனால் இது எல்லாமே பொய். இது தொடர்பில் விசாரித்தோம். இங்குள்ள யாரோ மூன்று, நான்கு இலட்சம் ரூபாயினைப் பெற்றுக்கொண்டு மேலதிக கல்வி செயலாளரின் இறப்பர் முத்திரையினை இட்டு கொடுத்துள்ளார்கள். அனைத்தும் பொய் என்றார்.

யாழ் இந்துக்கல்லூரிக்கு 17 பேரும், மத்திய கல்லூரிக்கு 15 பேரும், வேம்படிக்கு 7 பேர் என 63 பேருக்கு இவ்வாறு போலி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மூன்று, நான்கு இலட்சம் ரூபாய் வீதம் வாங்கிக் கொண்டவர் அவர் கோடீஸ்வரன். அவர் எனக்கும் ஒரு பகுதி கொடுத்தது என்று சொல்லிவிடக் கூடாது. எனக்கும் கெட்டபெயர்.

இதனை ஊடகங்கள் எல்லாம் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றார். ஏனெனில் யாழில் பலர் படித்தாலும் ஏமாறுபவர்கள் இருக்கிறார்கள். படித்துவிட்டு ஏன் காசு கொடுத்து ஏமாறுகிறீர்கள் என கேள்வி எழுப்பினார். (மு-60)

## இந்து கலாசார...

சேனாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்து கலாசார பிரதியமைச்சராக, காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டமைக்கு தொடர்ச்சியாக எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருவதாகவும், இது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென ஊடகவியலாளர் ஒருவர் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இதனைக் கூறினார். (மு)

## இந்துக்களின்...

அமைச்சுப் பொறுப்பை எனது கட்டுப்பாட்டிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எழுத்து மூல கோரிக்கையை நேற்று முன்வைத்தேன்.

அதுதொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இன்றைய தினம் ஜனாதிபதி செயலகத்துக்கு வருகை தருமாறு பதிலளித்துள்ளார்.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சை நான் கேட்டுப் பெற்றுக்கொண்டேன். அவற்றுடன் இணைந்து இந்து கலாசார அமைச்சும் உள்ளது. அதனால்தான் இந்துக் கலாசார அமைச்சுப் பொறுப்பும் என்னிடம் வந்தது.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சை மட்டும் நான் வைத்துக் கொள்வதற்காக மீளவும் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும்.

அதற்காக ஜனாதிபதியை இன்று சந்திக்கின்றேன் என்று பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் மேலும் தெரிவித்தார். (மு)

## இந்து பிரதி அமை...

இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், ஜனாதிபதியே இதுதான் மதங்களை மதிக்கும் உங்கள் நல்லாட்சியா?, தமிழ் அரசியல்வாதிகளே ஏன் இந்த மௌனம், இந்து வாக்குகள் மட்டும் தான் தேவையா?, முஸ்லிம், பௌத்த விவகாரத்துக்கு ஒரு இந்துவை நியமிப்பீர்களா? சைவத்தமிழர்கள் இந்த நாட்டில் தொடர்ந்தும் அனைவராலும் அடக்கப்படும் மக்களா? இலங்கையில் இந்து விவகார பிரதி அமைச்சர் ஆக சைவ அரசியல்வாதி இல்லையா? என்ற சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், இந்து அல்லாத ஒருவரை இந்து கலாசார அமைச்சராக நியமித்தமை இந்துக்கள் மத்தியில் பெரும் அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்துக்களுக்கு மட்டும் ஏன் இவ்வாறான அநீதி நடைபெறவேண்டும். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது மௌன 23


A/L பொருளியல்
நடைமுறை விடயங்கள் & புள்ளிவிபரங்கள்
ஆகப்பிந்திய தகவல்கள், தரவுகள், வினாவிடைகள்: வர்ணப்பக்கங்களில்
A/L 2018, 2019 & போட்டிப் பரீட்சைகளுக்குரியது
வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
ரூபாய் 250/=
(4511)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
076 688 3394
D.M.I

பொருளியல் கருத்தரங்கு
A/L 2018
S.JEYAKUMAR
(B.A(Hons) Econ spl, M.A(Econ) PGDE)
ஆரம்பம் 15.06.2018 வெள்ளி 01.00 Pm
தேர்ச்சி அடிப்படையில் கையேடுகள் வழங்கப்படும்.
10 கருத்தரங்குகள் நடைபெறும்.
வெளிமாணவர்களும் கலந்து கொள்ளமுடியும்.
ஆசிரியரிடம் கற்கும் மாணவர்கள் தவறாது தமது நிறுவன அனுமதி அட்டையை எடுத்துவரவும்.
D.C.M யாழ்நகர்
தொடர்புகளுக்கு:- 077 7238597, 077 703 9996
(4499)

தேவை
திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்தின் சிறிய விடுதியினை பராமரிப்பதற்கு இரவு மற்றும் பகல் நேர Room Boy (35 வயதிற்கு குறைந்த ஆண்கள்) தேவை.
தொடர்பு: 077 953 0496
(4515)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
(C-2862)

O/L உடன் 3 - 4 மாத விசேட
ஹொட்டேல் பயிற்சி
SIKARAM ACADEMY
www.sikaram.lk

வேலைவாய்ப்பு
அரச அங்கீகாரம் பெற்ற எமது DNMC PVT LTD ஆனது யாழ்ப்பாணத்தில் புதிய கிளையினை நிர்மாணித்துள்ளது. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேலும் புதிய கிளைகளை நிறுவவுள்ளது.
தகுதியான வேலையாட்கள் பின்வரும் நிபந்தனைக்கு அமைய கோரப்படுகின்றனர்.
தரம்: 10 - O/L, A/L, Diploma உடன் தொடர்பு கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு: 076 676 7620, 076 666 8385

VACANCIES
- NVQ Level - 4 or 5
கிளை முகாமையாளர்
சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்
DMI COMPUTER EDUCATION - No.113, Kannathiddy Road, Jaffna

துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK -550/=
Germany -650/=
France -700/=
Canada -850/=
Australia -800/=
திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.
Hotline -0777554528
(C-2921)

துயர் பகிர்கின்றோம்



திருமதி பவானியம்மா குழந்தைவேலு
இலங்கை பூராகவும் வெளிவரும் "விஞ்ஞான ஊக்கி" தமிழ், ஆங்கில மொழி மூலமான நூல்களின் பிரதம நூலாசிரியரான திருமதி யோகேந்திரி சுகுந்தன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி பவானியம்மா குழந்தைவேலு அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
லங்கா புத்தகசாலை
கொழும்பு -12
(4522)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.